பதிவு இலக்கம் : 105267

வார இதழ்

# தீபம்

21.07.2019 தீபம் – 191

பக்கங்கள் - 24 விலை ரூபா 30.00

New Sun Ceramic

Floor Tiles, Wall Tiles

குளியலறை சாதனங்கள் போன்றவற்றை நியாயமான விலையில் நேர்த்தியானதும் தரமானதுமாகப் பெற்றுக் கொள்ள விஜயம் செய்யுங்கள்.

A-9 Kandy Road, Kilinochchi.
(Opposite to the Old Hospital)

021 228 3872


ஏ9 கண்டி வீதி, கிளிநொச்சி.
(பழைய மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாக)










கிளைக் காரியாலயங்கள்

சசிகா லேணர்ஸ்

THE SASIKA LEARNERS

அரச அங்கீகாரம் பெற்ற
சாரதி பயிற்சி பாடசாலை

021 221 7678
077 722 6247

தலைமைக்காரியாலயம் : இல.57 வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும்.
கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.

பருத்தித்துறை வீதி, நெல்லியடி. 021 226 0999, 071 775 0999

பழைய கண்டி (பிரதான வீதி), காரைநகர். 021 225 2454, 070 510 2484

ஓடக்கரை வீதி, சங்கானை 021 225 1664, 070 301 3016

K.K.S. வீதி, மல்லாகம் 021 224 3393, 070 301 3014

வங்களாவடிச் சந்தி, வேலணை 021 221 5472, 070 301 3012

இல.281 C, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம். 021 222 8004, 070 301 5004

இது தமிழ் பேசும் மக்களின் தனித்துவப் பத்திரிகை

# மழலையர் முற்றம்

-ராஜேஸ்மனாளன்-



- நாம் இதயத்தின் மேல் கை வைஎன்றால் உடனடியாக நாம் நமது கையை நெஞ்சின் இடதுபக்கம் வைப்போம் ஆனால் இதயம் நெஞ்சின் நடுவில்தான் இரண்டு நுரை ஈரல்லுக்கும் மத்தியில் இருக்கிறது.
- தெள்ளு பூச்சி (Flea) அதன் உடலின் நீளத்தை போல் சுமார் 350 மடங்கு நீளத்தை தாண்டும். அதாவது ஒருமனிதன் ஒரு கால்பந்து மைதானத்தை ஒரே நேரத்தில் தாண்டுவதற்கு சமம்.
- நிலத்தில் பறக்காத பெண்குயின் பறவைக்கு நீருக்குள் பறக்கும் சக்தி உண்டு.
- வாகனங்களில் பதிவு எண் முறையை முதன் முறை யாக அறிமுகப்படுத்திய நாடு பிரான்ஸ்





## யார் இவர்?


1822 ஆம் டிசம்பர் மாதம் 18ஆம் திகதியில் இவர் பிறந்தார். யாழ்ப்பாணம் நல்லூர் தான் இவர் பிறப்பிடம். 12வது வயதிலேயே சமஸ்கிருதம், தமிழ் ஆகிய மொழிகளைக் கற்று புலமை பெற்றார். பாடசாலை ஆசிரியராகப் பணியேற்றபோது இவர் வயது 20. தனது இல்லத்தில் வித்தியானுபாலன யந்திர சாலை எனும் பெயரில் ஓர் அச்சகத்தை நிறுவி தமிழறிவு, சமய நூல்களை அச்சிட்டார். 1870ம் ஆண்டு கோப்பாயில் ஒரு வித்தியசாலையை ஆரம்பித்து தனது சொந்த செலவில் நடத்தினார்.

யார் இவர்? இதுவரை தெரிந்திராவிட்டால் அறிந்து கொள்ளுங்கள். இவர்தான் ஆறுமுக நாவலர்.

## விலங்குகள் விநோதம்



- தவளையின் இரத்தத்தின் நிறம் கறுப்பு
- ஒரு கண்ணைத் திறந்த நிலையிலேயே தூங்கும் மிருகம் முதலை.
- ஒட்டகச்சிவிங்கியின் கழுத்தில் உள்ள எலும்புகள் 7
- திமிங்கலத்தின் ஆயுட்காலம் 500 வருடங்கள்.
- வயிறும் ஜீரண உறுப்பும் இல்லாத உயிரினம் ஈசல்




## கெட்டிக்காரன் புளுகு

ஒரு நாள் காலையில் ஒரு மரத்தின் மீது சேவல் உட்கார்ந்து உற்சாகமாய் பல தடவைகள் கூவியது. இதைக் கேட்ட நரி அங்கே வந்தது நல்ல பசியோடு இருந்த நரிக்கோ அந்த சேவலைப் பிடித்து சாப்பிட ஆசை. ஆனால் மரத்திலிருக்கும் சேவல் கீழே வந்தால்தானே பிடிக்க முடியும். சேவலை அண்ணாந்து பார்த்து "சகோதரனே!, வணக்கம். ஒரு நல்ல செய்திய்ய நீ கேள்விப்பட்டாயா? பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இனி ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்ளக்கூடாது. அன்பாய் நடந்துக் கொள்ள வேண்டும், சகோதர மனப்பான்மையை வளர்க்க வேண்டும். நீ கொஞ்சம் கீழே வாயேன். இந்த நல்ல செய்தியைப் பற்றி பேசுவோம்" என்றது. நரியின் தந்திரப் பேச்சைச் சேவல் புரிந்து கொண்டது. ஆனால் வெளியே காட்டவில்லை. தூரத்தில் எதையோ பார்ப்பதைப் போல் தலையைத் தூக்கிப் பார்த்தது. இதைக் கண்ட நரி, "என்ன சகோதரா!, ரொம்ப அக்கறையாக எதையோ அடிக்கடி பார்க்கிறாயே. அங்கே என்ன இருக்கிறது?" என்று கேட்டது. அதற்கு சேவல்,"அங்கே சில வேட்டை நாய்கள் வருவது மாதிரி தெரிகிறது. வேட்டை நாய்கள்தானா என்பதைக் கவனிக்கிறேன்" என்று பதிலளித்தது. நரிக்கு பயம் வந்துவிட்டது. "சரி, சரி நான் பிறகு வந்து உன்னிடம் பேசுகிறேன்" என்று கூறியபடி கிளம்பியது. சேவல் விட்டு விடவில்லை "அருமைச் சகோதரா, போகாதே, நான் இதோ கீழே வருகிறேன். நாய்களைக் கண்டு ஏன் பயப்படுகிறாய்? இப்பொழுது தானே எல்லோருக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக நீ சொன்னாய்" என்று கேட்டது. நரி அதற்கு "அந்த ஒப்பந்தைத்தைப் பற்றி அநேகம் பேர் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள், அந்த நாய்களுக்கு தெரியாமல் இருந்தால், என் கதி கதி என்ன ஆவது? நான் போகிறேன்" என்று சொல்லி விட்டு நரி ஒரே ஓட்டமாக ஓடி காட்டுக்குள் மறைந்தது. "யாரிடம் ஏமாற்றப் பார்க்கிறாய், உன்னுடைய கெட்டிக்கார பொய்கள் என்னிடம் பலிக்காது" என்று கூறி சேவல் சிரித்தது.

கெட்டிக்காரன் புளுகினாலும் அது புத்திசாலியிடம் வெளிப்பட்டு விடும்.

கை.சிவனுகாயினி
தரம் - 05
யா/சுண்டுக்குழி மகளிர் கல்லூரி



நீங்களும் வரைந்து அனுப்ப விரும்பினால் எமது முகவரிக்கு அனுப்பலாம்.

## அப்பா தந்த புத்தகம்



அப்பா வாங்கித் தந்தது
அருமையான புத்தகம்
அதில் இருக்கும் படங்களோ
ஆஹா மிக அற்புதம்!


யானை உண்டு, குதிரை உண்டு
அழகான முயலும் உண்டு
பூனை உண்டு, எலியும் உண்டு
பொல்லாத புலியும் உண்டு

அப்பா வாங்கித் தந்தது
அருமையான புத்தகம்.

குயிலும் உண்டு, குருவி உண்டு
கொக்கரக்கோ கோழி உண்டு
மயிலும் உண்டு, மானும் உண்டு
வாலில்லாத குரங்கும் உண்டு

அப்பா வாங்கித் தந்தது
அருமையான புத்தகம்

வார இதழ்
தீபம்
“யாமார்க்கும் குடியல்லோம்”
21.07.2019 இதழ் -191
gmail:- newsdeepam19@gmail.com
விநியோகம் / விளம்பரம் TP:- 021 4927542, 0771989445



# பாம்பு ஏணி விளையாட்டுக்காட்ட முயல்கிறார் ரணில்!

யாழ்ப்பாணத்தில் கம்பன் விழா கொடிகட்டிப் பறந்தகாலம் அது. ஒருநாள் பேச்சாளர் ஒருவர் தனது உள்ளக் கிடக்கையை வெளியிட்டார்.

‘ஜெயராஜை இல்வாழ்வானாகக்காண ஆசைப்படுகிறோம். அடுத்த ஆண்டு தம்பதி சமேதராக கம்பன் விழாவில் இருக்கும் அக் காட்சியைக் காண விரும்புகிறோம்’ இதற்குப் பதிலளித்த ஜெயராஜ் ‘இதுவெல்லாம் பிரச்சினையில்லை: என்னை முன்பக்கமாகப் பார்த்தால் ஆணாகத் தெரிவேன், பின்பக்கமாகப் பார்த்தால் பெண்ணாகத் தெரிவேன்’ எனத் தனக்கேயுரித்தான பாணியில் குறிப்பிட்டார்.

கல்முனை விவகாரத்தில் ரணிலின் விலாங்கு மீன் நாடகம் இப்படித்தான் நடக்கிறது. தமிழருக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் ஏற்பட்டுள்ள பிணக்கைத் தீர்க்காமல் கொதிநிலையில் வைத்துக்கொண்டே அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரை உங்கள் பக்கம்தான் நான் என்று இரு பகுதி வாக்குகளையும் அறுவடை செய்யக்காத்திருக்கிறார். பண்டாரநாயக்கா, டட்லி, சிறிசேன, ரணில் என எந்தக் காலத்திலும் சிங்களத் தலைவர்கள் தங்களை ஏமாற்றி விட்டார்கள் எனப் புலம்புவதே தமிழ்த் தலைமைகளின் பாரம்பரியமாகி விட்டது. சிங்களவர்கள் எம்மை ஏமாற்றி விட்டார்கள் என்று புலம்பாத ஒரே தலைவர் பிரபாகரன் மட்டுமே.

சமாதான காலத்தில் தெருக்கூத்துக் கலைஞர்களுடனான முழுநாள் சந்திப்பொன்று நடைபெற்றது. அதில் இடைக்கால நிர்வாகம் பற்றிய சந்தேகம் ஒன்றை தலைவர் பிரபாகரனிடம் கேட்டார் ஒரு கலைஞர். அதற்கு அவர் பதிலளிக்கையில். ‘ரணில் ஒரு கொடாக் கண்டன் நான் ஒரு விடாக்கண்டன்’ என திருவள்ளுவர் பாணியில் இரு வரிகளில் பதிலளித்தார். [இச்சந்திப்பு குறித்து எழுதுவதாயின் அதற்குத் தனிக்கட்டுரை தேவை] அவரது வார்த்தைகள் சத்தியமானவை. ரணில் கொடாக் கண்டனாகத்தான் எப்போதும் இருக்கிறார். தற்போது இங்கே விடாக்கண்டன் என எவரும் இல்லை என்பதுதான் தமிழரின் துயரம்.

பாம்பும் ஏணியும் விளையாட்டை அறிந்திருப்பீர்கள். ஏணியின் காலில் காய் வரும்போது அப்படியே மேலே போய்விடலாம். பாம்பின் வாயில் காய் போகும் போது ஒரேயடியாக கீழிறங்கிவிடும்.

கல்முனை விடயத்தில் சுமந்திரன் அரசின் உறுதிமொழியினைக் கொண்டு வந்து வாசித்தார். காய் ஏணி மூலம் மேலே போனது. ஏற்கெனவே தங்களுக்குக் கொடுத்ததாக இவர்கள் சொல்லும் வாக்குறுதிகளுக்கு என்ன நடந்தது என்பதைச் சற்றும் யோசிக்காமலேயே இந்த உறுதிமொழியை வாசித்தார் சுமந்திரன். சில நாட்களிலேயே கணக்காளர் அம்பாறை மாவட்ட செயலகத்திலிருந்து சும்மா சுற்றுலா வருவது போல கல்முனை தமிழ்ப்பிரதேச செயலகத்துக்கு வருகை தந்திருந்தார். அவருக்கான இடமாற்றக்கடிதம் எதுவும் வழங்கப்படவில்லை எனவும் இவர் கல்முனைத் தமிழ்ப் பிரதேச செயலகத்தில் கையொப்பமிடவில்லை என்றும் செய்திகள் வெளியாகின. அதாவது பாம்பின் தலையில் போன காய் அப்படியே கீழிறங்கி வாலுக்கு வந்தது. மீண்டும் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முன்னதாக சுமந்திரன் மீண்டும் கணக்காளர் நியமனம் என உடனடி உத்தரவு அதனைத் தொடர்ந்து இப்பிரேரணைக்கு எதிராக கூட்டமைப்பு வாக்களித்தது என்றும் செய்தி. கணக்காளர் நியமனம் என்றவுடன் தமிழர்கள் வெடிகொழுத்தி ஆரவாரம் செய்தனர். ஆனால் இந்நியமனம் தொடர்பாக முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை எனப் பிரதமர் தம்மிடம் குறிப்பிட்டதாக ஹாரிஸ் எம்.பி. தெரிவித்தார். தொடர்ந்து கணக்காளர் அம்பாறைக் கச்சேரியிலிருந்தே பணியாற்றுவார் எனச் செய்திகள் வெளியாகின. அடுத்து இப்பிரதேச செயலக எல்லை நிர்ணயம் தொடர்பான பிணக்குகள் தொடர்பாக முஸ்லிம் பிரமுகர்கள் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். நிச்சயமாக ஒன்றைக் கூற முடியும். ரணிலின் பதவிக் காலத்தினுள் இவ்விவகாரம் இப்படியே இழுபட்டுப் போகும். தொடர்ந்தும் பாம்பும் ஏணியும் விளையாட்டுத்தான்.

ரணிலைப் பொறுத்தவரை தமிழர்கள் விடுபேயர்கள் என்ற கருத்து அவரது நெஞ்சில் ஆழமாகப் பதிந்து போயுள்ளது. அடுத்தது தமிழர்களின் வாக்குகள் தனது சட்டைப்பையினுள் உள்ளன கொஞ்சம் அதி தீவிர பௌத்தர்களின் வாக்குகளைப் பெற்றால் ஜனாதிபதித் தேர்தலில் வென்றுவிடலாம் என்பது அவரது அசைக்கமுடியாத நம்பிக்கை. புலிகளின் காலத்தில் இந்நம்பிக்கை மிகவும் பலமாக அவருக்கு இருந்தது. யாழ்.நூலக எரிப்பு புகழ் காமினி திஸநாயக்கவின் புத்திர சிகாமணி நவீன் போன்றோர் அதிதீவிர பௌத்த வாக்குகளைக் கணிசமாக அறுவடை செய்து தருவர் என நம்பினார். தமது தலைவரின் ராஜதந்திரம் குறித்து ‘புலிகளில் இருந்து கருணாவைப் பிரித்து வெளியில் கொண்டுவந்தவர்’ எனப் புகழாரம் சூட்டினார் நவீன். அதைப் புன்னகையுடன் ஆமோதித்தார் ரணில்.

இக்காலப் பகுதியில் ஈழநாதம் நாளிதழின் ஆசிரியருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டார் அப்போதைய பிரதியமைச்சர் தியாகராஜா மகேஸ்வரன். அவர் சொன்ன முதல் வசனமே ‘இந்த விசரன் தோக்கப்போறான்’ என்பதாகும். தொடர்ந்து, புலிகளின் ஆதரவைப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனத் தான் ரணிலுக்கு அறிவுறுத்தியதாகவும், அதையெல்லாம் சந்திரசேகரனின் பொறுப்பில் தான் விட்டுள்ளதாகவும் தமிழரின் வாக்குகள் தனக்கே கிடைக்கும் என அவர் நம்பியுள்ளதாகவும் குறிப்பிட்டார். தொடர்ந்து புலிகளைப் பொறுத்தவரை நேரடியாகத் தம்முடன் தொடர்பு கொள்வதையே எதிர்பார்ப்பவர்கள் என்ற வகையில் மூன்றாவது நபரின் உத்தரவாதங்களை அவர்கள் நம்பமாட்டார்கள் : அது அவர்களுக்குப் பிடிக்காது எனத் தான் சுட்டிக்காட்டிய போதும் ரணில் தனது கருத்தைப் புறந்தள்ளினார் எனவும் எனவே ரணில் தோல்வியடைவது உறுதி’என்று வலியுறுத்தினார்.

இன்றும் அதே நிலையில் மாற்றமில்லை. தனக்கு என்ன ஆபத்து வந்தாலும் சுமந்திரன் காப்பாற்றுவார் என்பது ரணிலின் நம்பிக்கை. உயர் நீதிமன்றிலோ பாராளுமன்றத்திலோ ரணிலை சுமந்திரன் காப்பாற்றுவார் என்பது உண்மை தான். அதற்காக தமிழ் மக்கள் தனக்கே வாக்களிப்பார்கள் என நம்பினால் அதைவிட முட்டாள்தனம் வேறெதுவும் இருக்கப்போவதில்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது ரணில் நம்பகரமானவர் எனக் கூட்டமைப்புத் தலைமையோ சரவணபவன் போன்றோரோ குறிப்பிடவில்லை. வேறு வழியில்லாமல் தவிர்க்க முடியாமலேயே இப்பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பதாகவே குறிப்பிட்டனர். முஸ்லிம்கள் கோத்தபாயா மீதான எதிர்ப்பை வெளியிட சில வேளை ரணிலுக்கு வாக்களிக்கலாம். ஆனால் அரசியல் கைதிகளின் விடுதலை, இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு, காணி விடுவிப்பு போன்றவற்றில் ரணிலின் சுத்துமாத்துக்களை மிகத் தெளிவாகவே புரிந்துள்ளனர் தமிழ்மக்கள். அதை விட ஆயிரம் புத்தர் சிலைகளை தமிழ்ப் பகுதிகளில் நிறுவும் ரணிலின் தீர்மானம் குறித்து கடுப்பாகவே உள்ளனர். கன்னியா பிள்ளையார் கோவில் விவகாரம் ரணில் மீது மட்டுமல்ல கூட்டமைப்புத் தலைமையையும் வெறுக்கும் அளவுக்கு கொதிநிலைக்குக் கொண்டு சென்றுள்ளது. திருமலை மணிக்கூட்டுக் கோபுரத்தடியில் நடராசனைச் சுட்டுக்கொன்ற காலத்திலிருந்து கன்னியாவில் இந்து மதகுருமீது வெந்நீர் ஊற்றுவது வரை சிங்களம் என்றுமே தான் மாறப்போவதில்லை என அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துள்ளது. பிக்குகள் விடயத்தில் மனோகணேசன் மட்டுமல்ல எவரும் கோரிக்கை விடலாமேயொழிய சட்டத்தை அமுல்படுத்த உத்தரவு பிறப்பிக்கமுடியாது. முல்லை நீராவியடி, கன்னியா பிள்ளையார் ஆலய விவகாரங்களில் தமது ஆளுமையை நிரூபிக்க முடியாமற்போன ரணில் மற்றும் மனோகணேசன் அரசு கந்தப்பளை மாடசாமி கோயிலில் பௌத்த கொடியேற்றிய தேரர் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்காது. அதுபோல் முல்லை நீதிமன்ற உத்தரவை மதிக்காத தேரர் அத்துமீறி நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் நந்திக் கொடிகளை அறுத்தமைக்காக எந்த நடவடிக்கையையும் எடுக்கப்போவதில்லை. தமது கையாலாகாத்தனத்தை மறைக்க மனோகணேசன் முதலில் திருக்கேதீஸ்வரப் பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள் எனப் பந்தை தமிழர்கள் பக்கமே எறிகிறார். இந்த லட்சணத்தில் இரண்டு வருடத்துக்குள் அரசியல் தீர்வு என்று வாணம் விடுகிறார் ரணில். தமிழ் மக்கள் பற்றி என்ன கருத்தை அவர் கொண்டுள்ளார் என்பதற்கு இக்கூற்று ஒரு உதாரணம். சுமந்திரனோ மனோகணேசனோ மட்டும் தமிழர்களல்ல. தாங்கள் சுயமாக முடிவெடுக்கக்கூடியவர்கள் என்பதை எதிர்வரும் தேர்தலில் தமிழர்கள் ரணிலுக்கு உணர்த்துவர். தனக்கு தமிழரின் வாக்குக் கிடைக்கும் என்ற கனவை விடுத்து பொருத்தமான நடவடிக்கை எடுப்பது அவருக்கும் அவரின் கட்சிக்கும் நன்மை பயக்கும். இல்லையேல்... ஈழநாதம் ஆசிரியருக்கு அமரர் மகேஸ்வரன் சொன்ன முதல் வசனம் மீண்டும் வரலாறாகும்.

**மு.தயாளன்**

# அரசியல் உலகில்...

கலாநிதி கே.ரீ.கணேசலிங்கம்



# ஈரானின் பேச்சுவார்த்தைக்கான அழைப்பு; அமெரிக்காவின் போர் உத்தியை தகர்க்குமா?

ஈரான் -அமெரிக்க உறவு பிராந்திய அரசியலில் மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் அதிக நெருக்கடியை உருவாக்குமென்ற எண்ணம் வளர்ந்து வருகிறது. ஈரான் ஆரம்பத்தில் இருந்த நிலையைச் சற்று மாற்றிக் கொண்டிருப்பதுடன் உலகளாவிய தளத்தில் இரு பக்கங்களையும் வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளது. இது அதன் எதிர்கால இருப்புக்கானதாகவே தென்படுகிறது. கடந்த வாரம் இதே பகுதியில் ஈரானின் பலவீனங்களை அவதானித்தோம். தற்போது அதன் போக்கில் மாற்றம் நிகழ ஆரம்பித்துள்ளது என்பதை நோக்குவது பொருத்தமானதாக அமையும். வெளிப்படையாகக் கூறுவதானால் ஈரான் ஒரு போரைத் தவிர்க்கத் தயாராகி விட்டது. அது தற்போதைய நிலையில் ஈரானின் எதிர்காலத்துக்குப் பாதுகாப்பானது. இக்கட்டுரையும் ஈரானின் பிந்திய உபாயங்களை விளங்கிக் கொள்வதாக அமையவுள்ளது.

ஈரானின் ஜனாதிபதி ஹசன் ருஹானி ஈரான் மீதான பொருளாதாரத் தடையை நீக்கினால் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த ஈரான் தயார் என அறிவித்துள்ளார். தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியின் போதே இது குறித்து அவர் குறிப்பிடும் போது நாங்கள் எப்போதும் பேச்சுவார்த்தையில் நம்பிக்கை கொண்டுள்ளோம் அமெரிக்கர்கள் பொருளாதாரத் தடையை நீக்கித் திணிக்கப்பட்ட பொருளாதார அழுத்தத்தினை முவுக்குக் கொண்டுவந்து ஒப்பந்தத்திற்கு திரும்பினால் இப்போதே எங்கு வேண்டுமானாலும் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருக்கிறோம் எனத் தெரிவித்துள்ளார்.

இது ஈரானின் பிந்திய முடிபாகவுள்ளது. ஈரானைப் பொறுத்தவரை தனது இலக்கை வெளிப்படுத்திக் கொள்வதில் கரிசனை கொண்டு விளங்குகிறது. தன்மீதான பொருளாதாரத் தடையை இல்லாது செய்வதிலும் அத்தகைய கோரிக்கையைக் கைவிடாதும் அதே நேரம் முழுமையாக அமெரிக்காவுடன் பேச்சுக்களை எதிர் கொள்ளவும் தயாராக உள்ளது என்பது அதன் தந்திரோபாய நகர்வாகவே தென்படுகிறது. குறிப்பாக ஈரானின் அரசியலில் தற்போது எழுந்துள்ள பிரச்சினை அணுவாயுதம் என்பதை விடப் பொருளாதார நெருக்கடியாகும். அதனை வெற்றி கொள்வதற்குச் சில உபாயங்களை வகுத்துள்ளது. பேச்சுவார்த்தை பற்றிய முடிவிலும் அமெரிக்காவுடன் பேசுவதென்ற முடிவிலும் ஈரான் தெளிவான கொள்கை வகுப்பினைக் கொண்டுள்ளது. அதாவது தற்போதுதான் ஈரான் சரியான திசையில் அமெரிக்காவையும், மேற்குலகத்தையும் கையாளத் தொடங்கியுள்ளது. சர்வதேச அரசியலில் கையாளுகை என்பது அதி சக்திவாய்ந்த விடயமாகும். ஒரு நாட்டுடன் மோதுவதும் வெற்றி கொள்வதும் தனித்து ஆயுதபலத்தினால் அமைந்து விடுவதில்லை மாறாக உத்திகளாலும் உபாயங்களாலும் வகுக்கப்படும் அணியினாலுமே வெற்றி சாத்தியமாவது உண்டு.

இவ்வாறான அரசியல் நடத்தையைப் பல தலைமைகள் கடந்த நூற்றாண்டில் நிகழ்த்திக் காட்டியுள்ளன. தந்திரமான நகர்வுகளையும் மேற்கு வகுத்துள்ள சட்டவரைபுகளுக்குள்ளும் நிறுவன அமைப்புக்களுக்குள்ளும் நின்று செயல்படுவதே தற்போதைய அரசுகளின் வெற்றி வாய்ப்பாகும். அதற்கான தயாரிப்பினை கொண்டு இயங்க வேண்டிய கடப்பாடு தலைமைகளுக்கே அதிகமுண்டு. அந்த வகையில் ஈரானின் நகர்வுகள் கொள்கையுயும் கோரிக்கையும் விட்டுக் கொடுக்காது அதே நேரத்தில் தந்திரத்தின் மிக உச்சமான பேச்சுவார்த்தை என்பதை முன்னிறுத்திச் செயல்படுவதென்பது மிகச் சிறந்த அரசியல் நகர்வாகத் தென்படுகிறது.

இத்தகைய அறிவிப்பு வெளியானதும் பிரான்ஸ் நாட்டு ஜனாதிபதி இரு நாட்டுக்குமான பேச்சுக்களை நடத்தவும் மத்தியஸ்தராக பணிபுரியவும் தாம் தயாராக இருப்பதாகவும் இரு நாட்டுக்குமான மோதல் உலகளாவிய ரீதியில் ஆபத்தானது எனவும் தெரிவித்துள்ளார். காரணம் அமெரிக்காவினதும் பிரித்தானியாவினதும் நடவடிக்கையால் ஈரான் யூரேனியத்தினை மீளவும் செறிவூட்ட ஆரம்பித்துள்ளது என்ற செய்தியாகும். இது முழுமையாக ஈரானின் அணுவல்லமையை அதிகரிப்பதாக அமைந்துவிடும் என்ற உணர்வின் பிரதிபலிப்பாகவே உள்ளது.

அது மட்டுமன்றி அமெரிக்கா ஈரானின் அணுவாயுத தயாரிப்புக்கான முயற்சியை முறியடிக்கத் திட்டமிட்டுள்ளது என்பதை கடந்தவாரம் குறிப்பிட்டிருந்தோம். ஆனால் அத்தகைய போக்கினைக் கையாளுவதற்கு ஈரான் ரஷ்சியாவின் உதவியை நாடியுள்ளதாகவும் பாதுகாப்பு நடவடிக்கையை ஏவுகணை மூலமும் மற்றும் ஆகாயப் பரப்பில் தடுப்பினை ஏற்படுத்துமளவுக்கு ஈரான் உசாரடைந்துள்ளதாகவும் அமெரிக்கப் புலனாய்வுத் தகவல்கள் பென்ரகனுக்குத் தெரிவித்துள்ளது. அதே நேரம் அமெரிக்காவும் அத்தகைய ஈரானின் முயற்சியை முறியடிக்க பில்லேடனை அழித்த அதே உத்தியைக் கையாள முனையலாம் என்ற ஊகிப்புகளும் இஸ்லாமிய நாடுகள் மத்தியில் காணப்படுகின்றது. எதுவாயினும் பிரான்ஸ்சைப் பொறுத்தவரை மீள ஒரு போர் சூழலைத் தவிர்க்க வேண்டும் என்ற நோக்குடன் மட்டுமன்றி, ஈரானின் அணுவாயுத உற்பத்தியை தடுக்க வேண்டும் என்ற நோக்குடனும் மத்தியஸ்தத்தை திட்டமிட்டுள்ளது. அதில் பிரான்ஸ் மட்டுமல்ல ஜேர்மனி பிரிட்டன் போன்ற நாடுகளும் செயல்படுகின்றன. மீண்டும் ஒரு போர் என்பதல்ல ஈரான் அணு வலுவைப் பெற்றுவிடக் கூடாது என்பதில் ஐரோப்பா கவனமாகச் செயல்படுகிறது.

எனவே ஈரானின் தற்போதைய போக்கு அந்நாட்டுக்கு ஆரோக்கியமான அரசியலை தரவல்லதாக மாறியுள்ளது. அமெரிக்காவின் போக்கிலும் அதிக மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதுடன் ஐரோப்பாவின் நகர்வுகள் ஈரானின் அரசியல் போக்கினைப் பாதுகாப்பதற்கான வாய்ப்பினை தந்துள்ளது. மிகவும் வலுவான இன்னோர் கோரிக்கையை ஈரான் அமெரிக்காவிடம் விடுத்துள்ளது. அதாவது அமெரிக்கா தம்முடன் அணுவாயுதம் பற்றிப் பேசவேண்டுமாயின் தமது பிராந்தியத்தில் ஏவுகணைகளையோ மற்றும் ஆயுதங்களையோ விற்பனை செய்வதையோ அல்லது வினியோகம் செய்வதையோ தவிர்த்துக் கொள்ள வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் அத்தகைய நடவடிக்கைக்கு அமெரிக்கா போகக்கூடாது என ஈரானிய வெளிவிவகார அமைச்சகம் அறிவித்துள்ளது.

எனவே தற்போது தீர்மானம் எடுக்கும் சந்தர்ப்பத்தை ஈரான் அமெரிகாவுக்கு கொடுத்துள்ளது. அதில் அமெரிக்காவின் அடுத்த கட்டம் எதுவாக அமையப் போகின்றது என்பதுவும் ஐரோப்பாவின் நகர்வுகள் எவ்வாறு அமையும் என்பதைப் பொறுத்தே தீர்மானம் சாத்தியமாகும். ஏறக்குறைய ஒரு யுத்தத்திற்கான சூழல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அதற்கான உபாயத்தினை ஈரான் ஆரம்பித்துள்ளது. ஈரானுக்குப் பின்னால் சீனாவும் ரஷ்சியாவும் இருக்கும் வரையும் அமெரிக்காவுக்கு ஏமாற்றமே மிஞ்சியிருக்கும் என்பதை மறுக்கமுடியாது.



# அரசியல் நிலவரம்...



– சிலம்பு

## 'விகார' உருக்கொள்ளும் விகாரம் அமைப்பு விவகாரம்



ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட 2009 இற்குப் பின்னர் தமிழ் மண்ணில் புத்த விகாரங்கள் முளைத்துக் கொண்டு இருக்கின்றன. புத்த தர்மம் அன்பையும் கருணையையும் சகிப்புத் தன்மையையும் போதித்த உயர் தத்துவத்தைக் கொண்டது ஆனால், புத்தரின் சிலைகள் இன்று ஆக்கிரமிப்பின் சின்னமாகத் தமிழ் மண்ணில் நிலைநிறுத்தப்படுகின்றன.

"புத்தம் சரணம் கச்சாமி சங்கம் சரணம் கச்சாமி" என்று குரல் எழுப்பியவாறு புத்த துறவிகள் சொன்னார்கள் யுத்தம் வேண்டாம் என்று. யுத்தத்தால் விளையும் சீரழிவுகளை எடுத்துச் சொன்னார்கள். மக்கள் கொடுமையான யுத்தத்தால் சாவதா? என்று கேட்டார்கள். மக்கள் கொல்லப்படுவார்கள், உடல் உறுப்புகளை இழப்பார்கள், குருதி ஆறாக ஓடும் பெண்கள் விதவைகள் ஆவார்கள், பிள்ளைகள் ஏதிலிகள் ஆவார்கள், யுத்தத்தின் கொடுமைகளைச் சொல்லி மாளாது எனவே படையெடுப்பைக் கைவிடுங்கள் என்று புத்ததுறவிகள் மன்றாடினார்கள்.

அன்பும் கருணையும் சகிப்புத் தன்மையும் புத்தபகவானால் பேணப்பட்டவை, போற்றப்பட்டவை அதற்கமைய மன்றாடிக் கேட்கிறோம், யுத்தம் வேண்டாம் என்று அவர்கள் கேட்டார்கள். இது இங்கு நடப்பதல்ல இது இன்று நடப்பதுவுமல்ல. இது பழைய வரலாறு. அசோகப் பேரரசன் கலிங்கத்தின் மீது படையெடுத்த பொழுது அன்று புத்த துறவிகள் அசோகப் பேரரசனிடம் கேட்டவைகளே இவைகள். ஆனால் அசோகன் அவ்வேண்டுகோள்களைப் புறந்தள்ளிவிட்டு, கலிங்கத்தின் மீது படையெடுத்தான், கலிங்கத்தை வெற்றி கொண்டான். ஆனால் அந்த யுத்த அவலங்கள் அவனை வாட்டியது. யுத்தக் கொடுமையை உணர்ந்தான், தான் தவறு விட்டதை உணர்ந்தான். கலிங்கத்து வெற்றி அவனுக்கு வெற்றியாகத் தெரியவில்லை. அசோகப் பேரரசன் தன்னை மாற்றிக் கொண்டான். புத்தரின் அன்பையும் கருணையையும் சகிப்புத் தன்மையையும் பரப்ப முடிவெடுத்தான். இலங்கைத் தீவுக்கும் புத்தரின் போதனைகளைப் பரப்ப ஆள்களை அனுப்பினான். இது தான் உண்மையான வரலாறாகப் பதிவாகி உள்ளது

அசோகப் பேரரசன் புத்த போதனைகளைப் பரப்ப இலங்கைக்கு மகிந்தனையும், சங்கமித்திராவையும் அனுப்பினான். ஆனால் இங்கு புத்த மேலாதிக்கச் சிந்தனை கலிங்கத்தைப் போன்றே முள்ளிவாய்க்கால் பேரவலத்தை இங்கும் காட்டியது. அசோகன் மனம் மாறினான் ஆனால் இங்கு யுத்த வெறி இன்னமும் அடங்கவில்லை. பௌத்த சிங்கள மேலாண்மையை தமிழ் மண்மீது நிலைநாட்ட புத்த துறவிகள் அடாவடிச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

பேரரசன் அசோகனிடம் யுத்தம் வேண்டாம் என்று கூறிய புத்த துறவிகளையும் சுனாமித் தாக்கத்திலிருந்து மக்களை மீட்டெடுக்க பொதுக் கட்டமைப்பு வேண்டாம் என்றும் தேவை என்றால் துப்பாக்கி ஏந்தவும் இந்தப் பிக்குகள் தயார் என்று கூறும் இலங்கைத் தீவின் இன்றைய பிக்குமாரின் நிலையையும் மக்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். இந்த பிக்குமாரின் நிலை இன்று நேற்றல்ல அநாகரிக தர்மபாலாவின் காலத்திலிருந்தே தொடங்கிவிட்டது என்பதே உண்மை. ஆனால் இன்று அது பெரிய மரமாக வளர்ந்து விட்டது இதைத்தான் இன்று முல்லைத் தீவிலும் கன்னியாவிலும் ஏனைய இலங்கையின் பல பகுதிகளிலும் நாம் கண்டுகொண்டிருக்கிறோம்..

புத்த பிக்குகளும் சிங்கள மொழித் திணிப்பும் வெள்ளையர்களின் ஆட்சி முடிவுக்கு வந்த பின்னர் சிங்களப் பெரும்பான்மையினரிடம் ஆட்சி ஒப்படைக்கப் பட்டது. அப்பொழுது முதன் நிலையிலிருந்த சிங்களத் தலைவர்கள் பெரும்பாலோனோர் கிறிஸ்த்துவ மதத்தையே பின்பற்றியிருந்தனர். ஆனால் இது சிங்கள தேசம் எனவே ஆட்சி சிங்கள புத்தர்களிடமே இருக்க முடியும் என்ற கோட்பாட்டுக்கு அமைய முதலாவது பிரதமராக வந்த டொன் ஸ்டீபன் சேனநாயக்கா அடுத்து வந்த டட்லி சேனநாயக்கா, சேர் ஜோன் கொத்தலாவல பண்டாரநாயக்க ஆகியோர் தமது கிறிஸ்த்துவ மதத்தை விட்டுப் புத்த மதத்துக்கு மாறினார் என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும். இவ்வாறு பதவிக்காக மதம் மாறியவர்கள் தான் தமிழ் மக்களின் மண்ணில் புத்த விகாரைகளைக் கட்டி சிங்கள பௌத்த மேலாண்மையை நிலை நாட்ட முயற்சித்தனர் எனலாம். இதைத்தான் பின்னர் வந்த அனைவரும் பின்பற்றி வந்துள்ளனர்.

தமிழ் மண்ணில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்களை நடத்தி தமிழ் மண்ணை அபகரித்த ஐ.தே.க வின் டி எஸ்.சேனநாயக்கா விகாரைகளுக்கு முடங்கி இருந்த பௌத்த பிக்குகளைத் தமிழர் தாயகத்துப் பள்ளிகளுக்கு அனுப்பிச் சிங்களத்தை தமிழ் மாணவர்கள் மேல் வாழைபழத்தில் ஊசி ஏற்றுவது போல் சிங்கள திணிப்பை மேற்கொண்டார். இதன் பின்னர் பண்டாரநாயக்க புதிய கட்சியைத் தொடங்கி சிங்களத்தை உத்தியோக மொழியாக இருபத்து நான்கு மணி நேரத்தில் கொண்டு வருவதாகக் கூறினார். இந்தத் தேர்தலில் பிக்குகள் எக்சத் பிக்கு பெரமுனா என்ற அமைப்பினூடாக பண்டாரநாயக்காவுக்கு ஆதரவு கொடுத்தனர். இது தான் முதன்முதலாகப் பிக்குகள் அரசியலுக்கு வந்த நிகழ்வாகும். புத்த புக்குகளின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த பண்டாரநாயக்காவால் அமைச்சரவையையும் அவர்களை மீறி அமைக்க முடியாமல் இருந்தார். அரசியலில் வலுவாகக் காலூன்றிய பிக்குகள் ஆட்சியை எவ்வாறு கொண்டுசெல்ல வேண்டும் என்று வழிகாட்டவும் முற்பட்டனர். தந்தை செல்வாவுடன் பண்டாரநாயக்கா செய்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறியவும் இப்பிக்குகளே காரணமாக இருந்தனர். இவ்வாறு பிக்குகளால் பதவிக்கு வந்த பண்டாரநாயக்கா பிக்குகளாலேயே படுகொலையும் செய்யப்பட்டார். பண்டாரநாயக்காவின் வெற்றிக்கு உழைத்த களனி ரஜ மகா விகாரையின் தலைமைப் பிக்குவான புத்தரகித்த தேரரே முதலாவது எதிரியாவார். நான்காவது எதிரியாக சோமராம தேரர் இருந்தார். இவர் மரண தண்டனை நிறைவேற்றப் படும் பொழுது மதம் மாறியதாக அறிவிக்கப்பட்டார். புத்தபிக்கு ஒருவர் தூக்குத் தண்டனை பெற விரும்பாத ஆட்சியினர் சோமராம தேரர் கிறிஸ்த்துவத்துக்கு மாறியதாக அறிவித்து அவரைத் தூக்கில் ஏற்றினர்.

இதன் பின்னர் பிக்குமாரின் செயற்பாடுகளில் கொஞ்சம் தொய்வு இருந்தது. ஆனால் கால ஓட்டத்தில் அது மறைந்து விட்டது. மீண்டும் பிக்குகளின் பங்களிப்பு அரசியல் கட்சிகளுக்குத் தேவைப்பட்டது.

இந்நேரத்தில் தான் தமிழ் மண்ணான சேருவில என்ற இடத்தில் புத்த விகாரை ஒன்று எழுப்பப்பட்டது. பலத்த எதிர்ப்புகள் தமிழ் மக்களால் எழுப்பப்பட்டும் அது ஏற்றுக்கொள்ளப் படவில்லை. பிக்கு அதை கட்டி எழுப்பி அந்தப் புத்த விகாரையின் மணி ஓசை கேட்கும் எல்லை வரை அது புனித புத்த பூமி என்று அறிவித்தார். அதன் பின்னர் அங்கு சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தினார்கள். அது தான் பின்னர் சேருநுவர என்ற பெயருடன் தனி நாடாளுமன்றத் தொகுதியாக வந்தது. தமிழ் மண்ணில் அம்பாறையில் எவ்வாறு சிங்களத் தொகுதி ஏற்பட்டதோ அதையடுத்து தமிழ் மண்ணில் பிக்குகளின் ஏற்பாட்டால் தனிச் சிங்களத் தொகுதி சேருநுவர வந்தது.

1965 இல் ஆட்சிக்கு வந்த டட்லி சேனநாயகா மிகவும் நுட்பமாகச் சிங்களத்தையும் புத்த மதத்தையும் புகுத்த திட்டம் போட்டார். அதுவும் செல்வாவுடன் ஒப்பந்தம் செய்து ஆட்சி அமைத்துக் கொண்டே புத்த பிக்குமார்களின் தலைமையில் புத்தூர் என்ற இடத்தில் மூன்று சிங்கள புத்த பாடசாலைகளை தொடங்கினார். இது ஒரு பாரிய அழிவுத் திட்டமாகும். தமிழ் பிள்ளைகளை பௌத்தர்கள் ஆக்குவதும், சிங்களத்தைக் கற்றுக்கொடுத்து சிங்கள மயமாக்கலுமே அத் திட்டமாகும். ஆனால் அத்தொகுதியின் நாடாளுன்ற உறுப்பினரான சி. கதிரவேலுப்பிள்ளை சட்டமறுப்பாகத் தானே புதிய பள்ளியைத் தொடங்கி சிங்களப் பள்ளிகளுக்குச் சென்ற பிள்ளைகளை வழிப்படுத்தி தனது பள்ளிக்கு வரச் செய்து போராடி வென்றார். ஆனால் இன்று பாரிய வகையில் திட்டமிட்ட வகையில் நடைபெறும் ஆக்கிரமிப்புகளைத் தமிழ்த்தலைமை கண்டுகொள்ளவில்லையே.

ஆட்சியாளர்களின் செயல்கள் அனைத்தும் சிங்கள என்ற மையப்புள்ளியை வைத்தே நகர்த்தப்பட்டன. அரசியல் யாப்பிலேயே பௌத்தத்துக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது.

ஆட்சிக்கு வந்த தலைவர்கள் புத்த சங்கத்தின் வழிகாட்டுதலில் நாட்டைக் மொண்டு செல்வதில் ஆர்வமாக இருந்தார்கள். அவர்களின் ஆசியை வேண்டி நின்றார்கள். தமது முக்கியமான உரைகளை தலதா மாளிகையின் எண்கோண மண்டபத்திளிருந்தே நாட்டு மக்களுக்கு ஆற்றினார்கள். புத்த பீடங்களின் ஆலோசனைகளைக் கேட்பதும் அவர்களின் எண்ணங்களுக்கு மாறாக நடக்க மாட்டோம் என்று உறுதியளிப்பதிலும் தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் பின்நிற்கவில்லை இதன் பின்னர் பிக்குகள் அரசியலுக்குள் நேரடியாக இறங்கினார்கள். தாமே கட்சியைத் தொடங்கி ஆட்சியைப்பிடிக்க முயற்சித்தார்கள்.

தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட அனைத்திலும் பிக்குகளின் முடிவே இறுதியானதாக இருந்தது. இலங்கை ஒரு சிங்கள புத்த நாடு என்றும், பௌத்தம் தீவு முழுவதும் பரவி இருந்தது என்றும், புத்த விகாரைகள் நிறையவே தமிழர் தாயகத்தில் இருந்ததாகவும் கூறி விகாரைகள் கட்ட முனைப்புகள் காட்டப்பட்டன. இதற்குத் துணையாகத் தொல்லியல் திணைக்களம் உறுதுணையாக இருந்து வருகிறது. சிங்கள கட்சிகள் தாங்கள் ஆயிரம் விகாரைகளை தமிழர் தாயகத்தில் கட்டுவோம் என்று உறுதி அளித்து வருகின்றன. இவை யாவும் பிக்குகளுக்கு தனித் துணிவை கொடுப்பதினால் இன்று முல்லைத் தீவில் நீராவியடியில் பிள்ளையார் கோயிலைப் புத்த விகாரமாக்கியுள்ளனர். கன்னியாவில் உள்ள பிள்ளையார் கோயிலையும் இடித்து பெரிய விகாரைகட்ட முடிவு செய்துள்ளனர். மக்கள் அறவழியில் எதிர்ப்புக்காட்ட விடாது காவற்றுறை வழக்கு மன்றில் தடை வாங்கியது. ஏராளமான மக்கள் திரண்டனர். ஆனால் தமிழ் மக்களை உள்ளே செல்ல விடாது தடுத்த காவற்றுறை சிங்கள மக்கள் செல்ல எந்தத் தடையும் செய்யாது இருந்தது. பின்னர் வெந்நீர் ஊற்றுக் காணியின். சொந்தக்காரரான கொகிலரமணி அம்மையாரையும், தென்கையிலை ஆதீனக் குருவான அகர்த்தியர் அடிகளாரையும் எச்சில் தேநீரை ஊற்றி அவமானப் படுத்தியுள்ளனர். இவ்வாறாகத் தான் புத்த மேலாதிக்கம் பிக்குகளின் உதவியுடனாட்சியாலர்களால் தமிழ் மண்ணில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மயிலிட்டியில் தனியார் காணியில் புத்தர் சிலை வைக்கப் பட்டுள்ளது. அதுவும் விரைவில் திறக்கப்படவுள்ளது. வடக்குக் கிழக்கு எங்கணும் இதே நிலை தான் நடந்துகொண்டிருக்கிறது. ஆனால் தமிழர் தரப்பு அரசியல் கட்சித் தலைவர்களுக்கு மட்டும் நடந்துகொண்டிருக்கும் நிலப்பறிப்பும், அதன் ஆபத்தும் தெரியாமல் உள்ளது. மக்கள் போராடிக்கொண்டு இருக்கையில், ஒரு தீர்வு நிலைக்குச் சென்று கொண்டிருக்கும் பொழுது ஆட்சியாளர்களுடன் தாங்கள் பேசியதாலேயே முடிவு வந்தது என்று ஏமாற்றும் அரசியலையே அவர்கள் செய்து வருகின்றனர். ●





# கறுப்பு ஜூலையும் வெள்ளையடிக்க முயலும் ரணிலும்..

**மாசிலான்**

கறுப்பு ஒரு நிறமல்ல. கறுப்பு இருட்டுப்போன்றது. எனவே கறுப்பும் இருட்டும் ஒன்றே ஆகும் என்பார்கள். ஆனால் வெள்ளை என்பது பல வர்ணங்களின் சேர்க்கையே ஆகும். இந்நிலையில் கறுப்பு ஜூலையை வெள்ளை ஜூலை ஆக்க முடியுமா? என்று முயற்சிக்கிறார் ரணில். ..அது முடியாது என்பதும் கறுப்பு ஜூலை உலகத் தமிழர்களின் நெஞ்சங்களில் மட்டுமல்ல உலக மனித உரிமை ஆர்வலர்களின் உள்ளங்களிலும் இருக்கும் கறைபடிந்த மாதமாகும்.

இனப்படுகொலையாளிகளால் தமிழ் மக்களின் செங்குருதி ஓடிக்கறுத்து அது வரலாறாக உள்ளங்களில் நிறைந்து நிற்கிறது..இதனை வெள்ளை ஜூலை என்று கூறி மாற்றிவிடலாம் என்று ரணில் விக்கிரமசிங்க நினைக்கிறார். இக்கறுப்பு அடையாளம் சிங்கள இனம் தமிழினத்திற்குத் தொடர்ச்சியாக இழைத்துவந்த இனப்படுகொலையின் உச்சமேயாகும். ஐம்பத்தாறு ஐம்பத்தெட்டுகளில் தொடங்கிய இனப்படுகொலையின் உச்ச இன அழிப்பே இந்த எண்பத்து மூன்று ஜூலை இனப்படுகொலையாகும்..முன்னைய இரண்டும் பண்டாரநாயக்க காலத்தில் இடம்பெற்றவை ஆகும். ஆனால் ஜே.ஆர் ஆட்சியைப் பிடித்த முதல் திங்களிலேயே எழுபத்தேழாம் ஆண்டு இனப்படுகொலை மேற்கொள்ளப்பட்டது. தமிழ் மக்கள் தமிழீழத்திற்கு ஆதரவாக வாக்களித்ததைப் பொறுத்துக் கொள்ளமுடியாத ஜே.ஆர் ஆட்சியில் இந்த எழுபத்தியேழு இனப்படுகொலை மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாண நகரம் பற்றி எரிந்தது இதன் மூலம் தமிழ் இனத்தை அடக்கி ஒடுக்கி விடலாம் என்பதே ஜே ஆரின் திட்டமாகும். இதன் தொடர்ச்சியாக எண்பத்தொன்றில் இனப்படுகொலையை மலையகத்திலும் பரவச் செய்து அம்மக்களுக்கும் எச்சரிக்கை விடுத்தார். அடுத்து வந்தது தான் எண்பத்துமூன்று ஜூலைப் படுகொலைகளாகும்.

இது நன்கு திட்டமிட்டே நடத்தப்பட்ட இனப்படுகொலையாகும். திருநெல்வேலியில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் உடல்கள் கனத்தை மயானத்தில் ஒன்றாகத் தகனம் செய்யப்பட்டு சிங்கள மக்களுக்கு இனவெறி உணர்வை ஊட்டித் தமிழ் மக்களைத்தாக்கி அழிக்கும் நிகழ்சி நிரலொன்று தயாரிக்கப்பட்டது. வாக்காளர் இடாப்புகள் எடுக்கப்பட்டுக் கொழும்பு நகரில் எந்த எந்த வீடுகளில் தமிழர்கள் வசிக்கிறார்கள் என்று அடையாளப்படுத்தி தமிழர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. தாக்கிவிட்டுச் சென்றார்களா? கொள்ளையடித்து விட்டுச் சென்றார்களா? என்றால் இல்லை.அது அவர்களின் இரண்டாவது நோக்கமேயாகும். தமிழினம் அழிக்கப்பட வேண்டும். உரிமை என்று எதுவும் கேட்கப்படாது என்ற நோக்கிலேயே அத்தாக்குதல்கள் இடம்பெற்றன.பிறந்த குழந்தைகள் கூடத் கொடூரத் தாக்குதல்களில் இருந்து தப்பவில்லை.. வாகனங்கள் எரிக்கப்பட்டன அவ்வாகனங்களுக்குள் குழந்தைகள் பெண்கள் ஆண்கள் என்று பாராமல் தமிழ் மக்கள் உயிருடன் தூக்கிப் போடப்பட்டு எரிக்கப்பட்ட கொடுமையிலும் கொடுமை நடந்தது., ஆட்சியில் இருந்த ஜே ஆர் கலவரம் நடக்கும் இடங்களை அடையாளமிட்டுக் கூறி இதர பகுதிகளுக்கும் அது பரவுவதற்கு தொலைக்காட்சியையும் வானொலியையும் பயன்படுத்தினார். அமைச்சர்கள் நேரடியாக நின்று வன்முறையை வளர்த்து வந்தனர். இராணுவமும் காவற்றுறையும் கலவரத்தைக் கட்டுப்படுத்த எந்த முயற்சியும் எடுக்காததுடன் சிங்கள மக்களுக்கு உதவிகள் செய்து ஊக்கி வந்தன. கொழும்பு மாநகரத்து தமிழ் மக்களின் கடைகள் கொழுந்து விட்டு எரிந்துகொண்டிருந்தன .தீயை அணைக்க யாரும் செல்லவில்லை. நூற்றுக்கணக்கான தமிழ் உயிர்கள் பறிக்கப்பட்டன கோடிக்கணக்கான சொத்துகள் வீடுகள் கடைகள் அழிக்கப்பட்டன. ஜே.ஆர் தன்னை யாரும் கேட்க மாட்டார்கள் என்று வீரம் பேசிவந்தார். இந்திரா காந்தி மூன்றோ நான்கு நாட்களின் பின்னர் தொலைபேசியில் ஜே.ஆரை அழைத்துத் தனது வெளியுறவு அமைச்சர் நரசிம்மராவை அனுப்புவதாகக் கூறிய பின்பே அவர் கொஞ்சம் அடங்கிப் போனார். நரசிம்மராவ் வானூர்தி நிலையத்தில் வந்து இறங்கிக் கொழுந்து விட்டு எரியும் கொழும்பு நகரையும் கண்டுகொண்டார். அவற்றை அவர் இந்தியப் பிரதமரிடம் எடுத்து சொன்னார் என்பது வரலாறு.




இது ஒரு புறம் இருக்க சிறைச்சாலையில் அரசுக் காவலில் இருந்த தமிழ்க் கைதிகள் சிறைச்சாலை ஊழியர்களின் ஆதரவுடன் சிங்களக் கைதிகளால் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். தான் இறந்த பின்னர் தனது கண்களைத் தமிழர் ஒருவருக்குக் கொடுங்கள் அவராவது எனது கண்களால் ஈழத்தைப் பார்க்கட்டும் என்று கூறிய குட்டிமணியின் கண்களைப் பிடுங்கி கைகளில் வைத்துக் கொண்டாடிய கறுப்பு ஜூலையை மறக்குமா தமிழினம். இவ்வாறு தான் தங்கத்துரை ஜெகன் உட்பட ஐம்பத்திரண்டு தமிழ்க் கைதிகள் சித்திரவதை செய்து கொல்லப்பட்டனர். இதற்கு யார் பொறுப்பு? இன்றுவரை எவருமே, இதற்குப் பொறுப்பு ஏற்றதில்லை. இவை தமிழ் மக்களின் உள்ளங்களில் ஏற்படுத்திய கறையை நீக்க ரணில் என்றாவது முயன்றதுண்டா. அவர் இப்பொழுது கறுப்பு ஜூலைக்கு வெள்ளை அடிக்கப் போகிறாராம்.

தமிழ் மக்களின் உள்ளங்களில் இப்படுகொலைகளும் அழிப்புகளும் நீங்காத கறுப்பாக நிலைகொண்டு விட்டன .ஜே.ஆரின் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் நிகழ்ந்த இந்த இனவழிப்பை வரலாற்றிலிருந்து எடுக்கவோ அழிக்கவோ முடியாது. ஆனால் ஜே.ஆர் தன் அரசியல் வாரிசாக வளர்த்தெடுத்த ரணில் விக்கிரமசிங்க இவ்வாண்டு ஜூலையைக் கறுப்பு ஜூலை என்று கருதாமல் வெள்ளை ஜூலை என்று மாற்றலாமா என்று முயல்கிறார்.

கறுப்பு ஜூலையை மாற்றி வெள்ளை ஜூலை ஆக்குவது எப்படி ? இதற்கு உதவப்போகிறவர்கள் யார் என்று பார்த்தால் தமிழ் மக்களின் வீதிகளுக்கு இப்பொழுது மின்குமிழ்கள் பொருத்தி ஒளி பாய்ச்சுகிறார்களே வீதிகளுக்குத் தாரை வார்த்து மண்போடுகிறார்களே கிராமிய எழுச்சித் திட்டத்தை கம்பரேலிய என்ற சிங்களப்பெயருடன் ஏற்றுக்கொண்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்கள் மூலம் கறுப்பை வெள்ளை ஆக்க முடியும் என்று கணக்குப் போட்டுள்ளார் ரணில் விக்கிரமசிங்க. .

அமைதி வழியில் சென்ற இனத்தை அடக்கி ஒடுக்க ஆட்சியாளர் மேற்கொண்ட அரசப் பயங்கரவாதம் தமிழ் இளைஞர்களுக்கு விடுதலை உணர்வை வளர்த்தது. இதன் விளைவே முப்பதாண்டுகாலம் நடந்த வரலாற்றுச் சமர்களாகும். போர் அனைத்துலக கெடுபிடிகளாலும் காட்டிக்கொடுப்புகளாலும் சில நாடுகளின் வஞ்சகத்தாலும் பாரிய பின்னடைவையும் ஆயுத மௌனிப்பையும் ஏற்படுத்தியதால் கறுப்பு ஜூலையையும் மக்களின் மனங்களில் இருந்து அகற்றிவிடலாம் என்று வெள்ளை அடிக்க ரணில் முயல்கிறார்.

நடந்தவைகள் மறக்க முடியாத மாற்ற முடியாத காயங்களாக நெஞ்சங்களில் இருக்கின்றன. அதை இலேசாக சில மென்போக்கான சலுகைகள் மூலம் மாற்றி வெள்ளை ஜூலை ஆக்க ரணில் எடுக்கும் முயற்சிக்கு சில அரசியல்வாதிகள் முண்டு கொடுக்கலாம். காட்டாட்சியிலிருந்து காப்பாற்றி விட்டோம் என்று கூவலாம் அவர்கள். ஆனால் இந்த கறுப்பு ஜூலையின் தொடர்ச்சியே முள்ளிவாய்க்கால் பேரவலம் என்பதைத் தமிழினம் மறக்க மாட்டாது. கறுப்பு ஜூலை என்பது மறக்கவே முடியாத வரலாற்றுப் பதிவு. வெள்ளை அடித்து மறைக்க முடியாத கருமையான வடு அது.

# 5G மனித குலத்தின் எதிரியா?

[தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ
நன்றி : தமிழ் மிரர்]

உலகமே இப்போது, 5G தொழில்நுட்பத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. நான்காவது தொழிற்புரட்சியின், முக்கியமான அம்சமாக அமைந்துள்ள 5G தொழில்நுட்பம், புதிய வாய்ப்புகளையும் சாத்தியங்களையும் உருவாக்கியுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. அதேவேளை, அதற்கு நாம் கொடுக்கும் விலை என்ன? எமது வாழ்க்கையையா விலையாகக் கொடுக்கப்போகிறோம்?

மனிதகுலத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்கக்கூடிய, சர்வரோக நிவாரணியாகத் தொழில்நுட்பத்தைக் கருதுவோர் உள்ளனர். கடந்த சில தசாப்தங்களாக, மனிதகுலம் ஏராளமான புதிய நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறது. அவற்றில் பல, தொழில் நுட்பத்தின் மீது, அளவுகடந்த நம்பிக்கையின் விளைவால் உருவானவை ஆகும். தொழில்நுட்பம், வர்த்தகத்தினதும் இலாபத்தினதும் முக்கிய பங்காளியாகிய நிலையில், மக்களிடமிருந்து அந்நியப்பட்டதாக மாறிவிட்டது. இன்று, பல்தேசியக் கம்பெனிகளின் கைகளில், தொழில்நுட்பம் தங்கிவிட்டது. அந்தப் பல்தேசியக் கம்பெனிகள், அரசாங்கங்களைக் கட்டுப்படுத்துகின்றன. அரசாங்கங்களின் உதவியுடன், பல்தேசியக் கம்பெனிகள், தொழில்நுட்பத்தை நடைமுறைப்படுத்துகின்றன. இதன் ஆபத்துகள் பயங்கரமானவை. இதனை அனுபவிப்பதற்காக நாம் கொடுக்கப்போகும் விலைப் பெறுமானம் எதிகமெனலாம். அவ்வாறானதொரு விலையைக் கொடுத்து, இந்தத் தொழில்நுட்பத்தைப் பெறுவது பயனுள்ளதா? இந்தத் தொழில்நுட்பம் இல்லாமல் மனிதகுலத்தால் தப்பிப்பிழைக்க முடியாதா? இவை நாம் கேட்க வேண்டிய கேள்விகள்.

**5G**: சில அடிப்படைகள் தொலைத்தொடர்புத் துறையில், 1970களில் முக்கியமான திருப்பமொன்று ஏற்பட்டது. அலைபேசிகளின் அறிமுகம், கம்பிகள் இல்லாத தொலைபேசி உரையாடலைச் சாத்தியமாக்கியது. இது '1ஜி' எனப்பட்டது. 'ஜி' என்பது, தலைமுறையைக் குறித்தது **(G- Generation)**. தொலைத்தொடர்புத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி, அடுத்தடுத்த கட்டங்களுக்கு நகர்த்தியது. 'அனலொக்' தொழில்நுட்பத்தில் இருந்து, டிஜிட்டல் தொழில்நுட்பத்துக்கான மாற்றம் '2ஜி' எனப்பட்டது. அதைத் தொடர்ந்து, திறன்பேசிகளின் வருகை, '3ஜி'யை நோக்கி நகர்த்தியது. வேகமான இணையப் பாவனையைத் சாத்தியமாக்கிய தொழில்நுட்ப மாற்றம், '4ஜி' எனப்பட்டது. இதன், அடுத்த கட்டமான நகர்வே '5ஜி' ஆகும். இந்த 5G தொழில்நுட்பமானது, அதிவேக இணையப் பாவனைக்கு வழிவகுக்கிறது. இது அனைத்தையும் இணையத்தின் வழி செயற்படுத்துவதற்கு உதவும்.

பொருள்களின் இணையம் **(Internet of Things - IOT)**, தானியங்கி வாகனங்கள், தீவிர உயர் வரையறை காணொளி **(ultra high-definition video)** உட்பட்ட பல நவீன தொழில்நுட்பங்களை, நடைமுறைப்படுத்துவதற்கான அடிப்படையே 5G ஆகும். இன்னும் தெளிவாகச் சொல்வதென்றால், நாம் தற்போது காண்கின்ற நான்காவது தொழிற்புரட்சியை, முழுமையாக நடைமுறைப்படுத்த 5G அவசியமானதாகும்.

அனைத்திலும் மெய்நிகர் உலகைப் படைப்பதற்கு, அதிவேக இணையம் அவசியம். அந்த மெய்நிகர் உலகம், யதார்த்தத்திலிருந்தும் நடைமுறையிலிருந்தும் மனிதர்களை அகற்றுகிறது. இந்த, மெய்நிகர் உலகைப் படைக்க வேண்டிய தேவை, பல்தேசியக் கம்பெனிகளுக்கும், அவை இயக்குகின்ற அரசாங்கங்களுக்கும் அத்தியாவசியமானது. பல்தேசியக் கம்பெனிகள், செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தையும் தானியங்கல் தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்துவதன் மூலம், ஏராளமான வேலையிழப்புகளைத் தோற்றுவித்துள்ளன. இதன் விளைவால் ஏற்படக்கூடிய அமைதியின்மையையும் எழுச்சிகளையும் தடுப்பதற்கான வழிகளையும் தொழில்நுட்பத்தின் உதவியுடனேயே, இந்தக் கம்பெனிகள் உருவாக்கியுள்ளன. அதில் ஒன்றே மெய்நிகர் உலகு.

**5G**: ஆபத்துகள்

5G பற்றிய எதிர்பார்ப்புகள் அதிகரித்துள்ள நிலையில், பல நாடுகளின் தொலைத்தொடர்பு நிறுவனங்கள், இத்தொழில்நுட்பத்தை நடைமுறைப்படுத்தத் தொடங்கியுள்ளன. இந்நிலையில், 5Gயை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அதற்கு ஆதரவு திரட்டும் இயக்கமொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவர்களால், 'மண்ணிலும் விண்ணிலும் 5Gயை நடைமுறைப்படுத்துவதைத் தடுப்பதற்கான சர்வதேச அழைப்பு' **(International Appeal to Stop 5G on Earth and in Space)** விடுக்கப்பட்டுள்ளது. இந்த அழைப்பில், இதுவரை 187 நாடுகளைச் சேர்ந்த ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் கையொப்பம் இட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக தகவல்களை **www.5gspaceappeal.org** என்ற இணையத்தளத்தில் காணமுடியும். 5G தொழில்நுட்பமானது, மக்களை மின் உணர்திறன்மிக்கவர்களாக **(electro-hypersensitive EHS)** மாற்றிவிடும். மின்காந்தப் புலத்தின் **(Electromagnatic Field -EMF)** தாக்கத்துக்கு உள்ளாகுபவர்கள், மின் உணர்திறன் மிக்கவர்களாக மாறுகிறார்கள்.

இதனால் ஏராளமான பாதிப்புகள் ஏற்படுகின்றன. மறதி, கவனஞ்செலுத்த இயலாமை, இதயத்துடிப்பு அதிகரித்தல், சோர்வும் களைப்பும், காது, கண் போன்றவற்றில் வலி ஏற்படுதல், வீங்குதல் போன்றன இதன் சில பாதிப்புகள் ஆகும். இதன் ஆபத்து யாதெனில், இது பலசமயங்களில் நிரந்தரமான உடலியல் உபாதைகளுக்கு வழிவகுக்கும். தொலைத்தொடர்பு துறையில் ஏற்பட்டு வரும் நவீனமயமாக்கலின் விளைவால் மின்காந்தப்புலம், வானொலி அதிர்வெண் **(Radio Frequency - RF)** கதிர்வீச்சு, தொடர்ச்சியான அதிகரித்து வந்துள்ளது. வலுவான தொலைத்தொடர்பு சைகைகள், வேகமான இணையம் போன்றன அதிகரித்த வானொலி அதிர்வெண் மற்றும் மிகை அளவிலான மின்காந்தப்புலம் ஆகியவற்றின் விளைவாலேயே சாத்தியமாகின. ஆனால் இதனால் ஏற்படும் மருத்துவஞ்சார் பிரச்சினைகள் குறித்துப் பேசப்படுவது குறைவு.

2015ஆம் ஆண்டு, தொலைத்தொடர்புத் துறையினர் பொறுப்பற்ற முறையில் அலைக்கற்றையின் அளவை அதிகரிப்பதானது சாதாரண மக்களுக்கு ஏராளமான நோய்களையும் நிரந்தரக் குறைபாடுகளையும் ஏற்படுத்தும் என மின்காந்தப்புலத்தின் நிபுணத்துவம் பெற்ற 230 சர்வதேச விஞ்ஞானிகள், ஐக்கிய நாடுகள் சபைக்கு கடிதம் எழுதினார்கள். அதில், 'மின்காந்தப்புலமானது மனிதர்களின் உடற்பகுதிகளில் நிரந்தரமான உடற்பாதிப்புகளை ஏற்படுத்தி விடுகிறது என்பதை, அறிவியல் ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

தொலைத்தொடர்புத் துறையின் நவீனமயமாக்கலின் பெயரால் பொறுப்பற்ற முறையில் அதிகளவிலான மின்காந்தப்புலமானது உமிழப்படுகிறது. இது புற்றுநோய், உயிர்மப் பாதிப்புகள், மரபணுச் சிதைவுகள், மீள் உற்பத்திச் செயன்முறையில் நிரந்தரமான கட்டமைப்பு மற்றும் செயற்பாட்டு மாற்றங்கள் என்பவற்றை ஏற்படுத்தும். இதன் பாதிப்புகள் மனிதகுலத்துக்கு மட்டுமன்றி, தாவரங்கள், விலங்குகள், பறவைகள் என மொத்தப் பூமிப்பந்தையே பந்தாடவல்லன' எனக் குறிப்பிட்டுள்ளனர்.

5Gயை நடைமுறைப்படுத்துவதை உடனடியாக நிறுத்தக்கோரி, 2017 செப்டெம்பரில் 35 நாடுகளைச் சேர்ந்த 180 விஞ்ஞானிகளும் மருத்துவர்களும் அழைப்பொன்றை விடுத்திருந்தார்கள். அவ்வழைப்பில் 'மின்காந்தப்புலமானது மோசமான பாதிப்புகளை மனிதகுலத்துக்கு ஏற்படுத்தும் என்பது, விஞ்ஞான ரீதியாக நிறுவப்பட்டுள்ள நிலையில், 5Gயை நடைமுறைப்படுத்துவதால் ஏற்படப்போகும் ஆபத்துகளை முழுமையானதும் சுதந்திரமானதுமான விசாரணை மூலம் அறிக்கைப்படுத்தும் வரை 5G நடைமுறைப்படுத்தல் தள்ளி வைக்கப்பட வேண்டும்.இந்த விசாரணை, தொலைத்தொடர்புத் தொழிற்றுறையால் அன்றி, சுயாதீனமாகச் செய்யப்பட வேண்டும்' என்றும் கோரியிருந்தார்கள்.


5G நடைமுறைப்படுத்தல் குறித்து கருத்துரைத்துள்ள ஹவார்ட் பல்கலைக்கழகத்தின் பிரயோகப் பௌதீகவியல் விஞ்ஞானி றொனால்ட் பவல், "மனிதகுலச் சூழலில், பாதுகாப்பான முறையில் 5Gயை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியம் இல்லை. ஆனால், இதை நடைமுறைப்படுத்துவதற்கான 'மோசமான' மற்றும் 'மிகமோசமான' வழிமுறைகள் உள்ளன. எனவே, பாதுகாப்பான 5G நடைமுறைப்படுத்தல் என்பது மோசடியே" என்று தெரிவித்துள்ளார்.

சட்டரீதியாக இதைக் கையாள்வதற்கான வழிவகைகள் குறைவானவே காணப்படுகின்றன. பல மேற்குலக நாடுகளிலேயே, தொலைத்தொடர்பு தொடர்பான சட்டங்கள் மிகப் பழையன-வாக
இருந்து வந்துள்ளன. எனவே, அதன் துணையுடன் 5Gயின் பாதிப்புகளை அறியும்வரை, அதைத் தடுப்பது மிகப்பெரிய சவாலாக உள்ளது. பெல்ஜியம், சுவிஸ்லாந்து போன்ற நாடுகள் 5G நடைமுறைப்படுத்தலைப் பிற்போட்டுள்ளன.

வாஷிங்டன் பல்கலைக்கழக மருத்துவ இரசாயனவியல் பேராசிரியர் மார்ட்டின் போல், இந்த மின்காந்தப்புல கதிர்வீச்சுகள் என்ன வகையான இரசாயன மாற்றங்களை உடலுக்கு ஏற்படுத்துகின்றன என்பதை, ஆய்வு செய்து வெளியிட்டுள்ளார். நாம் பயன்படுத்தும் அலைபேசிகள், இணையத்தைப் பெறப் பயன்படுத்தும் 'ரவுட்டர்கள்' என்பவற்றின் கதிர்வீச்சானது, எமது இழையங்களில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இந்தக் கதிர்வீச்சானது எமது இழையங்களுக்கு, அசாதாரண அளவிலான கல்சியத்தை உட்செலுத்தி, அதன்மூலம் நைட்ரிட் ஒக்சைட்டையும் மிகைதிறன் ஒக்சைட்டையும் உருவாக்குகின்றன. இது உடலில் பெரொக்ஸி நைட்ரேட்ஜ உருவாக்குகிறது. இது மிகவும் மோசமான விளைவாகும் என்பதோடு, இன்று ஏற்படும் மோசமான பல நோய்களுக்குக் காரணமாக அமைகிறது. இதைச் சக்தி குறைந்த வானொலி அலைகளே செயற்படுத்தும். எனவே, சக்தி கூடிய கதிர்வீச்சானது, இதன் பாதிப்புகளைப் பன்மடங்காக்கும்.

**5G radiofrequency** கதிர்வீச்சானது மூன்று வகையான கதிர்வீச்சுகளைப் பயன்படுத்துகிறது. முதலாவது, குறைந்த சக்தியுள்ள வானொலி அலைகள். இரண்டாவது, அதைவிட அதிக சக்தியுள்ள நுண்ணலைக் கதிர்வீச்சு. மூன்றாவது, மிக அதிக அளவில் சக்தியைக் கொண்ட மில்லிமீற்றர் அலைகள். இதில் கவனிக்க வேண்டியது யாதெனில், மில்லிமீற்றர் அலைகள், 5ஜியிலேயே முதன்முறையாகப் பயன்படுத்தப்படுகின்றன. 4Gயானது **6 GHz** வரையான அதிர்வெண்களைப் பயன்படுத்துகிறது. அதேவேளை, 5Gயானது **30 GHz** முதல் **100 GHz** வரையான அதிர்வெண் அளவில் செயற்படுகிறது. மனித குலம், இதுவரை இவ்வளவு அளவிலான அதிர்வெண்ணுக்கு உட்பட்டது கிடையாது.

குறிப்பாக, இவ்வளவு அதிகளவிலான அதிர்வெண்ணைச் சாத்தியமாக்கும் மில்லிமீற்றர் அலைகள், மனித உடலின் தோலின் இழையத்தின் உள்ளே, 2 மில்லிமீற்றர் வரை ஊடுருவக் கூடியவை. இவை, உடலில் எரிவை ஏற்படுத்தும் உணர்வை ஏற்படுத்த வல்லவை. இதனாலேயே மேற்குலக நாடுகளில் கலகத் தடுப்பு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் மில்லிமீற்றர் அலைகளைக் கொண்டவை. அதேவேளை, விமான நிலையங்களில் உள்ள முழுஉடலையும் 'ஸ்கான்' செய்யும் கருவிகளும் இதையே பயன்படுத்துகின்றன. மில்லிமீற்றர் அலைகள் மிகவும் ஆபத்தானவை. இன்றுவரை 5G ஏற்படுத்தும் பாதிப்புகள் குறித்த செய்திகள் எதுவும் பொதுவெளியில் பரவாமல் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் பார்த்துக் கொள்கின்றன. 5G உலகையே மாற்றிவிடும் என்ற பிம்பம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இதன் மிகப்பெரிய ஆபத்து யாதெனில், கதிர்வீச்சோ, மின்காந்தப்புலமோ, அதிர்வெண்ணோ எம் கண்களுக்குத் தெரிவதில்லை. எனவே, எதையும் கட்டுப்படுத்தும் வலு எம்மிடம் இல்லை. 5Gயின் பெயரால் மனிதகுலத்துக்கு எதிரான சத்தமில்லாத போர் அரங்கேறுகிறது. இலாபவெறியும் அதிகார வேட்கையும் இதைச் சாத்தியமாக்குகின்றது.





# ஊடுருவி உலகநாதன்

வடமாகாணத்தில் கல்வியில் முறைகேடுகள் அதிகமாக இடம்பெற்று வருகின்றன. ஆனால் அவற்றை கட்டுப்படுத்தும் திராணியற்ற வர்களாக கல்வி நிர்வாகம் இருப்பது கவலை தரும் விடயமாகும். தமது பதவியை தக்கவைப்பதற்காக என்ன வேண்டுமென்றாலும் செய்யத் துணியும் அதிகாரிகள் உள்ள இந்த மண்ணில் சிறந்த அதிகாரிகளுக்கு இடம் கிடைப்பது மட்டுமல்ல சிறந்த நிர்வாகத்தை கட்டி யெழுப்புவது என்பதுவும் கேள்விக்குறி யாக இருக்கப் போகிறது.

ஏனைய துறைகள் போல் கல்வித் துறை விளங்குவதில்லை. அனைத்து துறைகளையும் வளர்ப்பதற்கு கல்வித் துறை விளங்குகிறது. கல்வியித்துறையில் இருப்பவர்கள் செய்யும் முறைகேடுகள் என்பது கல்வித்துறைக்கு மட்டுமல்ல சமூகத்துக்குமே பாதிப்பை ஏற்படுத்தும்.

வடமாகாணத்தில் கல்வி வீழ்ச்சிக்கு கல்வி நிர்வாகமும் ஒரு காரணமாக இருக்கிறது. நிர்வாகத்துறையில் இருப்ப வர்கள் தமது வேலையைச் சரியாகச் செய்வார்கள் ஆயின் ஆசிரியர் இடமாற் றங்களில் இருந்து பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் அதிபர்கள் வெற்றி டங்களைக் கூட நிவர்த்தி செய்யக் கூடிய அளவில் மேலோங்கி விளங்கும் என்பதில் மறு கருத்தில்லை.

ஆனால் நிர்வாகத்தில் உள்ளவர்கள் தமது கையில் இருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி செயற்பாடுகளை செய்வதற்கு பயப்படுகிறார்களா? அல்லது அசமந்தப் போக்குடன் இருந்து விடுகிறார்களா? என்பது இன்று வரை கேள்விக்குறியாக இருக்கிறது. ஆனாலும் நிர்வாகத்தில் உள்ளவர்கள் தமது சேவையைச் சரிவர செய்ய வேண்டும் அவர்கள் விடும் தவறு கல்வி வீழ்ச்சிக்கே வித்திடுகிறது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பாடசாலைகளில் குழப்பங்கள் ஏற்படின் அந்தக் குழப்பங்களுக்கு நியாயத்தைத் தேடி அதற்கேற்ப முடிவுகளை எடுக்காமல் தப்புச் செய்பவர் காப்பாற்றப்படுகிறார் என்றால் அவர் பின்னே அரசியல்வாதி அல்லது மத்திய அரசின் செல்வாக்கு இருக்கிறது என்பது வெளிப்படை.

வடமாகாண கல்வி அமைச்சராக வந்தவர் கல்விக்கு அவர் செய்த வேலை என்னவென்றால் பாடசாலை ஒன்றில் ஏற்பட்ட அதிபர் பிரச்சினையில் எவருடைய ஆலோசனையும் இன்றி மாகாண சபையில் தீர்மானத்தைக் கொண்டு வந்து தனது உறவினரை அதிபர் ஆக்கிய பெருமை இவருக்கு இருக்கிறது. இவர் மட்டுமல்ல இன்று கல்வித்துறையில் பதவியில் இருக்கும் அனைவரும் இதைத் தான் விரும்புகிறார்கள்.

தாங்கள் படித்து பதவியில் இருக்கி றோம். இவர்கள் யார் கேள்வி கேட்பது என்று கல்வி வீழ்ச்சி பற்றியே கவலை படாது செயற்படும் கல்வி அதிகாரிகள் இன்று அதிகம் இருக்கிறார்கள். அதனால் தான் பல வருடங்களாகியும் இடமாற்றமில்லாமல் பல ஆசிரியர்கள் அதிபர்கள் இருக்கிறார்கள்.

பின்தங்கிய பாடசாலைகளுக்கு வரவேண்டிய உதவித்திட்டங்களைத் தடுத்து நிறுத்தி பல வசதிகளுடன் இருக்கும் பாடசாலைகளுக்கு அந்த உதவித்திட்டங்களை பெற்று அளவுக்கு அதிகமான வசதிகளைப் பெறுவதற்கு காரணமாக இருக்கும் நிர்வாகம் இருந்தும் என்ன? இல்லாவிட்டாலும் என்ன? என்று தான் எண்ணத்தோன் றுகிறது.

பாடசாலை ஒன்றில் முறைகேடாக நடந்த அதிபர் ஒருவர் கையும் களவு மாக பிடிபட்டு அந்தப் பாடசாலையில் இருந்து வெளியேற்றப்பட்டு குறுகிய காலப் பகுதியில் மீண்டும் அந்தப் பாடசாலைக்கு அதிபராக வருகிறார் என்றால் நிர்வாகம் ஒன்று இருக்கிறதா? என்ற கேள்வி எழுகிறது.

வலிகாமம் கிழக்கு பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. நிதி மோசடியில் ஈடுபட்ட தாக இந்த பாடசாலை அதிபர் வெளியேற் றப்பட்டு கோட்டத்தில் வைத்திருந்து இப் பொழுது மீண்டும் அதே பாடசாலைக்கு அதிபராக வந்துள்ளார்.

இதனால் அந்தப் பாடசாலை ஆசிரியர் கள் மத்தியில் விசனம் எழுந்துள்ளது. அதாவது அந்தப் பாடசாலை முன்னேற் றத்திற்காக பாடுபடும் ஆசிரியர்கள். இனி வரும் காலங்கள் தாங்கள் எப்படி செயற் படப் போகிறோம் என்ற ஐயம் எழுந்துள் ளது. இந்த நடவடிக்கை மற்றவர்களை யும் தப்புச் செய்யத் தூண்டும் நடவடிக் கையாகப் பார்க்கப்படுகிறது.

இப்படியாக பல பிரச்சினைகள் கல்வித் துறையில் இடம்பெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன. நிர்வாகத்துறையினரின் இப்படிப்பட்ட நடவடிக்கையால் தான் மேலும் முறைகேடுகள் எழுகிறது.


அரசியல் செல்வாக்கு உடையவர்கள் தமக்குத் தெரிந்தவர்கள் என்று கல்வித்துறையில் இருப்பவர்களை அவர்களின் விருப்பின் பெயரில் தொழிற்பட விடுவது கல்வித்துறைக்கு எவ்வளவு பாதிப்பு என்பது கண்முன்னே தெரிகிறது. தெரிந்தும் தமது பதவிக்கு ஆபத்து என்ற காரணத்தால் அதிகாரிகள் பலர் கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள்.

இது சம்பந்தமாக தெரிந்த அதிகாரிகளி டம் கேட்டால் எமக்கு பிள்ளை குட்டிகள் இருக்கிறது இதனை கண்டுகொள்ளாதே' என்ற பதில் தான் வருகிறது. இதற்காகவா நீ அதிகாரியாக வந்தாய்? என்று கேட்டால் எல்லோரும் போகும் வழியில் போக வேண்டும். நான் மட்டும் கேள்வி கேட்டால் என்னாகும் என்று உனக்குத் தெரியும் தானே? என்று பதில் சொன்னான்.

அந்தளவுக்கு கல்வி அதிகாரியின் நிலை இருக்கிறது. அன்று ஊருக்கு ஒரு ஆசிரியர் இருக்கும் போது கல்வி முன்னணியில் இருந்தது இதற்கு என்ன. காரணம் என்றால் முறைகேடுகள் இடம்பெறவில்லை. இன்று வீட்டுக்கு ஒரு ஆசிரியர் இருக்கும் போது கல்வி பின்னுக்கு செல்வது. மட்டுமல்ல முறைகேடுகளும் தங்குதடையின்றி இடம்பெறுகிறது.




## இக்காலத்துக்கும் பொருத்தமான சிரித்திரன் சுந்தரின் அக்காலக் கருத்தோவியங்கள்










நல்லதோர் வீணை செய்தே – அதை
நலங்கெடப் புழுதியில்
எறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி – எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்.
வல்லமை தாராயோ, – இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?
சொல்லடி, சிவசக்தி – நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ?

விசையுறு பந்தினைப்போல் – உள்ளம்
வேண்டிய படிசெலும் உடல்கேட்டேன்,
நசையறு மனங்கேட்டேன் – நித்தம்
நவமெனச் சுடர்தரும் உயிர்கேட்டேன்,
தசையினைத் தீசுடினும் – சிவ
சக்தியைப் பாடும்நல் அகங்கேட்டேன்,
அசைவறு மதிகேட்டேன் – இவை
அருள்வதில் உனக்கெதுந் தடையுளதோ?

பாரதி...


அரிஸ்ரோட்டில்

மனிதனை
மனிதனாக்குபவை
உதவிகளும்
வசதிகளும் அல்ல...
இடையூறுகளும்
துன்பங்களுமே




தமது வசதி வாய்ப்புக்கேற்றவாறு மனிதர்கள் எப்படி, எப்படியெல்லாம் மாறிப்போய்விடுகி றார்கள், பார்த்தீர்களா? மிகவும் கேவலம் கெட்டவர் கள். "நியாயத்தின் காவலன் நான்" என்று இருந்த வர்கள் சந்தர்ப சூழ்நிலையால் தலை கீழாக மாறிக் கதை சொல்வதையும், கருத்தைச் சொல்வதையும் ஏற்றுக் கொள்ள முடியாதிருக்கிறது. "வேண்டும் என்றால் அவர்கள் தனிப்பட்ட முறையில் ஏதாவ தைச் சொல்லித் தொலையட்டும். பொது வெளியில் அப்படி நடந்து கொள்ள வேண்டாம்" என்று சொல்லுகிறேன்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் வெளிவந்த தென்னிந்திய வார சஞ்சிகையான ஆனந்த விகடனில் ஒரு பேட்டி. அது ஈழத்துக் கவிஞன் வ.ஐ.ச.ஜெயபாலனினுடையது. "போரில் தோற்றாலும் நாங்கள் எழுச்சிமிக்கவர்கள்" என்ற தலைப்பில் அப்பேட்டி வெளியாகியிருந்தது. தலைப்பைப் பார்த்துவிட்டுச் சந்தோஷத்துடனும், மிக்க ஆர்வத்துடனும் உள்ளே சென்ற எனக்கு ஏமாற்றமும், வேதனையும்தான் மிகுதியாயிற்று. நான் குறிப்பாக இத்தகையதொரு பேட்டியை ஜெயபாலனிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. தன்னை இந்திய மண்ணிலே தக்க வைத்துக் கொள்ள அவர் ஒரு இந்திய ஏகாதிபத்தியச் சார்பு நிலையை எடுக்க வேண்டியவராக, அவர் அந்தப் பேட்டியிலே "2009-ல் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதுடன் போராட்டம் முடிவுக்கு வந்தது." என்று குறிப்பிட்டிருக்கிறார். "போராட்டம் முடிவுக்கு வந்தது என்று அவர் குறிப்பிடுவது தவறு. போராட்டத்தின் வடிவம் மாறி இருக்கிறதே தவிர முன்னையவிடப் போராட்டம் கனதியாக நடைபெற்றிருக்கிறது, ஜனநாயக வழியில்" என்றதை அவர் குறிப்பிட்டிருக்க வேண்டும். போராட்டம் இன்னும் நின்றுவிட வில்லை. சிங்களப் பேரினவாத அரசுக்கும், ஜனநாயகத்தைத் தமது சுய அரசியல் லாபங்களுக்காகக் குழிதோண்டிப் புதைக்க நிற்கும் வல்லாதிக்க சக்திகளுக்கும் எதிராகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். "எமது மக்கள், எமது இருப்பையும், அடிப்படைக் கலாசாரத்தையும் குழிதோண்டிப் புதைப்பதைப் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளிடம் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறோம்" என்றது ஜெயபாலனுக்கு வெளிச்சமான விடயம். ஆனால் அவர் இந்தியாவுக்குப் பலமானதாகப் பக்கப்பாட்டைப் பாடுவதைப்போல கருத்தினைச் சொல்வதுதான் வேதனை தருகிறது! என் செய்வேன்?

அடுத்ததாக ஜெயபாலனின் வார்த்தைகள் என்னை "சுர்"ரென்று தைத்துவிடுகிறது. எமது முழு இனத்தினது எதிர்பார்ப்பையும், அபிலாஷைகளை யும் புழிதோண்டிப் புதைத்த பெருமை சம்பந்தர் தலைமையினாலான தமிழர் கூட்டமைப்பைச் சாரும். தற்போது ஆட்சியிலுள்ள ரணில் தலைமை லான அரசுக்குப் பலமான தடிகள் கொண்டு, ஒரு தமிழருக்கெதிரான அரசை முண்டு கொடுத்தது நிமிர்த்தி வைத்துக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள். அப்படிப்பட்டவர்களைப் பற்றி போய்... "இப்போது தமிழர் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர் தமிழர்களை ஒருங்கிணைத்து, இந்தியா, மேற்கு அமெரிக்கா போன்ற நாடுகளின் உதவியோடு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து மெதுவாகத் தமிழர் வாழ்க்கையைச் செம்மைப்படுத்திட முயற்சி செய்கிறார். அவரது முயற்சிகளை இந்தியா ஆதரிக்க வேண்டும். ஆனால், தலைமையில் இருக்கும்போது விமர்சனங்கள் என்பது வரத்தானே செய்யும்! என்கிறார் ஜெயபாலன். இன்னும் ஜெயபாலன் உறக்கத்திலேயே இருப்பதாக நான் நினைக்கிறேன். கவிஞர் ஜெயபாலனே! எப்போதையா சம்பந்தர் கூட்டணியினர் தமிழர்களை ஒருங்கி ணைத்தனர்? கனவில் கூட ஒருங்கி ணைக்கலாம் என்று யோசித்துப்பார்த் திருப்பார்களோ தெரியவில்லை! முன்னாள் முதலமைச்சர் சொன்னது போல "அரசுக்கு மாமா வேலை அல்லவா செய்து கொண்டிருக்கிறார்கள்" என்று சொன்னதை நிரூபிப்பதுபோல... தம்மால் கொண்டுவரப்பட்ட தமது சகாவான சி.விக்கினேஸ்வரனைக் கூடக் காக்கா குயிலைக் கொத்திக் கலைப்பதை ஒத்ததாகக் கொத்தித் தள்ளிவிட்டார் கள். விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பைக் கூட அவர்களால் சரிவர முன்கொண்டு செல்ல முடியவில்லை. அதில் இருந்த கஜேந்திர குமார் அணியினரைக் கூட ஒன்றிணைத்துக் கூட்டிக் கொண்டு முன்செல்ல முடியவில்லை. எப்போது அவர்கள் அரசுக்கு அழுத்தம் கொடுத்தனர்? அரசுதான் இவர்களை அழுத்தி வைத்திருக்கிறதே ஒழிய, இவர்களால் அரசுக்கு ஒரு செக்கனேனும் அழுத்தம் கொடுக்க முடியாது. "இவர்கள் அரசிடம் நாவிழந்தவர்கள், எப்படி அவர்களைக் கேள்வி கேட்பது?, அரசுக்கு


கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன்



அழுத்தம் கொடுப்பவர்களில் வல்லவர்கள் முஸ்லிம் அரசியல்வாதிகள் என்று சொல்லுங்கள். அதை ஏற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு திருப்பத்திலும் அவர்கள் தமது இனத்துக்காகப் பேரம் பேசுவார்கள். ஏன்? குண்டு வெடிப்புக்குப் பின்னால் கூட அவர்கள் எப்படிப் பேரம் பேசினார்கள், பார்த்தீர்களா? ஆனால் எமக்குக் கிடைத்த பல சந்தர்பங்களில் அபிவிருத்தி என்ற போர்வையில், பணத்தை மட்டும் வாங்கிக் கொண்டு அதனை தவறவிட்டவர்கள் கூட்டமைப்பினர்.

அடுத்தது சம்பந்தர் தமிழர்கள் வாழ்வைச் செம்மைப்படுத்த முயல்கிறார் என்று ஜெயபாலன் சொல்வது. எப்போது அவரும் அவர்களது அணி யினரும் இந்த நல்ல காரியத்தைச் செய்தனர்? முள்ளிவாய்க்கால் இறுதிச் சமர் நடந்து கொண்டிருக் கும்போது தமக்கும் அதற்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று கூட்டமைப்பினர் மௌனம் காத்தது தமிழர்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்திய விடயம். இன்னும் மக்கள் சந்தேகப்பட்டுக்கொண் டிருக்கின்றனர்.தமிழர்கள் நிலங்கள் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாய்ப் பறி போய்க் கொண்டிருக்கிறது. தமிழர் பிரதேசமான நாவற்குழியில் ஒரு பாரிய பௌத்த விகாரை ஒன்று கட்டப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சிவபூமியாகிய திருக்கோணமலையில் உள்ள இராவணன் கட்டியதாகச் சொல்லப்படுகிற சுடுநீர்க் கிணற்றடியில் தொன்றுதொட்டு இருந்த இந்து ஆலயத்தை அகற்றும்பணி தொடருகிறது. மட்டக்களப்பில் தமிழர்கள் மிகவும் தாழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது போன்ற பல விடயங்களில் சிலவற்றிற்காவது கூட்டமைப்பினர் அழுத்தத்தைப் பிரயோகித்திருக்கலாம். இல்லையே! அவர்களால் அழுத்தம் கொடுக்க முடியவில்லை. காரணம் ரணிலின் புறங்கையைக் கூட விடாது நக்கிவிட்டார்களே? வேணுமானால் சுமந்திரன் சம்பந்தரை மட்டுமல்ல, மாவையோடு சேர்த்து முழு கட்சியையும் அழுத்தத்தில் வைத்திருக்கிறார் என்று சொல்லுங்கள். அது உண்மை. பிறகென்ன ஜெயபாலன் சம்பந்தர் தமிழருக்காக அழுத்தம் கொடுப்பதாகச் சொல்வது! மொத்தமாக அந்த நேர்முகத்தில் ஜெயபாலன் எம்மை ஏமாற்றிவிட்டார்.

# தவறாகப் பேசுகிறவர்களும் புது அணுகுமுறையும்



தங்களைப் பற்றித் தவறாகப் பேசுகிறவர்களை மனிதர்களுக்கு இருவிதமாகத்தான் கையாளத் தெரிந்திருக்கிறது.

முதல் இரகத்தினர்: என்னைப்பற்றி நீ எப்படி அந்த மாதிரிச் சொல்லப் போயிற்று?' என்று சண்டை போடுகிறவர்கள்.

இரண்டாவது இரகத்தினர்: "ச்சே:" அவர்கள் முகத்திலேயே விழிக்கக்கூடாது என்று ஒதுங்கி விடுகிறவர்கள்.

என்னைப் பொறுத்தவரை மூன்றாவது வழி ஒன்று உண்டு.

நம் தலையைக் காணாவிட்டால் நமக்கெதிரான கருத்தை அத்துணைபேரும் சொல்கிறார்கள். ஒரு தாயேகூடத் தன் மகளைப் பற்றிய மனக்குறைகளை அவனிடத்தில் நேரிடையாகச் சொல்லுவது இல்லை.

வேறு விதமாகச் சொல்வது என்றால் முகத்திற்கு நேரே எவருமே எதுவுமே சொல்லாமல் முகத்திற்குப் பின்னால்தான் சொல்லுகிறீர்கள்.

ஒன்றை வெளிப்படையாகவே கேட்கிறேன். நம்மைப் பற்றிய குறைபாடுகளைக் கேட்டுக்கொள்ளும் மனநிலை அவரவர் வாயிலாகவே – நேரிடையாகக் கேட்டுக்கொள்ளும் மனநிலை நமக்கு உண்டா? ஒருபோதும் கிடையாது. எவருக்குமே கிடையாது. இதனால்தான் மற்றவர்கள் நாம் இல்லாதபோது நம்மைப் பற்றிய மனக்குறையை வெளியிடுகிறார்கள்.

எனவே நம்மைப் பற்றித் தவறாகப் பேசுகிறவர்களி டமிருந்து நாம் விலகுவது அல்லது அவர்களுடன் சண்டை போடுவது என்று ஆரம்பித்துவிட்டால் அது கட்டுப்படியாகாத விஷயமாகிவிடும்.

முதல் கட்டமாக, இடைப்பட்டவர்கள் நம்மைப் பற்றிப் பிறர் சொன்னதை மிகைப்படுத்தியிருப்பார்கள் அல்லவா, அதை நன்கு விசாரித்துக் கழித்து நீக்கிவிட்டு, மிகச் சரியாக என்ன சொல்லப்பட்டது என்பதை தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும்.

சொல்லப்பட்டதில் சிறிதளவேனும் உண்மை இருந்தால் நம்மை நாமே திருத்திக்கொள்ள வேண்டியதுதான்.

உண்மையாக இருந்தாலும் பேசியவர் யாரோ என்றால் நாம் புறக்கணித்துவிடலாம். இவர்களுக்கெல்லாம் விளக்கம் தரவேண்டிய அவசியம் நமக்கு இல்லை.

நமக்கு வேண்டியவர்கள் என்றால் மட்டும், 'நீங்க என்னைப் பற்றி இப்படிச் சொன்னீங்களென்று சொன்னாங்க. நான் அதை நம்பேல்லை. காரணம் அதை என்கிட்ட நேரடியாக சொல்ற உரிமை எங்களுக்கு உண்டு' என்று ஆரம்பித்து அவர்களைத் தர்மசங்கடத்திற்கு ஆளாக்கி நெளிய வைக்க வேண்டும். இன்னும்கூட நாகரிகமான ஓர் அணுகு முறையும் உண்டு.


'என்னைப் பற்றி இப்படி ஒரு தவறான கருத்து உண்டு என்பது எனக்கே தெரியும். ஆனா உண்மை என்னென்றால்...' என்று ஆரம்பிக்க வேண்டும்.

இந்த மூன்றாவது அணுகுமுறைதான் மற்றவர்களின் வாயை நிரந்தரமாக அடைக்குமே தவிர, முதல் இரண்டு அணுகுமுறைகளும் முன்னிலும் அதிகமான அளவிற்கு நம்மைப்பற்றி மற்றவர்களைத் தவறாகப் பேசச் செய்யும்!


லேனா.தமிழ்வாணன்

# சர்ச்சைகளையும் சந்தேகங்களையும் எழுப்பும் முகிலனின் கைது விவகாரம்

துன்னாலைச் செல்வம்



சுற்றுச் சூழல் செயற்பாட்டாளரான முகிலன் மீது பெண் ஒருவர் பாலியல் குற்றச்சாட்டை சுமத்தியதால் முகிலன் மீது வழக்கு தொடரப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அவர் அனுப்பப் பட்டுள்ளார். அரசினதும், அரச அதிகாரி களினதும் பல ஊழல் குற்றச்சாட்டுக்களை மக்களுக்குத் தெரியப்படுத்தியவர் என்ற வகையில் திட்டமிட்டுப் பலவிதமான வழக்குகள் அவர் மீது போடப்பட்டன. இவர் மீது 15க்கும் மேற்பட்ட தேசத் துரோக வழக்குகளைப் பொலிஸார் பதிவு செய்திருக்கின்றனர். அப்படியான பொய்




வழக்ககளில் ஒன்றாகவே இந்தப் பாலி யல் குற்றச்சாட்டும் பார்க்கப்படுகிறது.

ஈரோடு மாவட்டம் சென்னிமலையைச் சேர்ந்தவர் முகிலன். பொதுப்பணித்துறை யில் பொறியாளராக பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்றவர். இவர் தமிழ்நாடு சுற்றுச் சூழல் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் ஆவார். கூடங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராட்டம், ஜல்லிக்கட்டு போராட்டம், ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்டம், மணல் கடத்தலுக்கு எதிரான போராட்டம், கெயில், ஹைட்ரோ கார்பன் திட்டங்க ளுக்கு எதிர்ப்பு எனப் பல்வேறு போராட்ட அமைப்புக்களின் முன்னணியில் ஈடுபட்ட வர் தான் சமூக செயற்பாட்டாளரும், சுற்றுசூழல் ஆர்வலருமான முகிலன்.

காவிரி படுகையில் மணல் அள்ளுவதற்கு எதிராக போராட்டம் நடத்தியவர். கூடங்குளம் அணுஉலைக்கு எதிராக போராட்டம் நடத்தியதற்காக தேசதுரோக வழக்கில் கைது செய்யப் பட்டார். தூத்துக்குடி ஸ்டெர்லைட் போராட்டத்தின் போது 14 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதை எதிர்த்தும் முகிலன் போராடினார். கலவரத்தில் ஈடுபட்டவர்கள் பொதுமக்கள் அல்ல என்று கூறினார்.

திருப்பதி ரயில் நிலையத்தில், மத்திய மாநில அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பிக் கொண்டிருந்த ஆண் நபர் ஒருவரை ரயில்வே பாதுகாப்புப்படை பிரிவினர் அப்புறப்படுத்த முயன்றபோது அவர் அங்கிருந்து விலக மறுத்ததாகவும் விசாரித்தபோது அவர் தனது பெயர் முகிலன் என்றும் வேலூர் காட்பாடிக்கு செல்ல விரும்புவதாகவும் தெரிவித்தார் என்றும் கூறப்பட்டுள்ளது. இரவு 10.30 மணிக்கு காட்பாடி ரயில் நிலையத்திற்கு வந்தடைந்த அந்த நபரை சிபிசிஐடி அதிகாரிகள் நேரடியாக பார்த்து அவர் காணாமல் போன முகிலன் தான் என்பதை உறுதி செய்தனர். அவருக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் எழும்பூரில் உள்ள குற்றபிரிவு குற்றபுலனாய்வுத்துறை தலைமை அலுவலகத்திற்கு கொண்டு வரப்பட்டார். அவர் காணாமல் போன காலக்கட்டத்தில் எங்கிருந்தார் என்பது குறித்து கேட்ட போது பதிலளிக்க மறுத்துவிட்டார அவர் காணாமல் போனதற்கு என்னவெல்லாம் காரணம் இருந்திருக்கலாம் என்று பல கோணத்தில் சி.பி.சி.ஐ.டி விசாரித்து வருகிறது. தனிப்பட்ட அளவில் சமூக இயக்கங்கள் ஒன்றிணைந்து முகிலன் மீட்பு இயக்கம் அமைக்கப்பெற்று அதன் குழுவும் இதுபற்றி விசாரித்து வருகிறது.

கடந்த 2017-ம் ஆண்டு செப்டம்பர் 18-ம் தேதி கூடங்குளத்திற்கு எதிரான போராட்டம் தொடர்பாகக் கைது செய்யப் பட்டார் முகிலன். பின்னர் கடந்த ஆண்டு செப்டம்பர் 27-ல் விடுதலை செய்யப்பட்டார். தூத்துக்குடியில் நடந்த துப்பாக்கிச் சுடு குறித்துப் பொலிஸாருக்கு எதிராகப் பல்வேறு குற்றசாட்டுகளை அவர் முன்வைத்தார். “கொளுத்தியது யார்..? மறைக்கப்பட்ட உண்மைகள்” என்ற ஆவணப்படத்தையும் வெளியிட்டார் முகிலன். தூத்துக்குடியில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற போராட்டத்தில் துப்பாக்கிச்சூடு எப்படி நடத்தப்பட்டது..? அதில் காவல்துறை உயர் அதிகாரிகளின் பங்கு என்ன? இந்த ஆவணப்படத்தை வெளியிடுவதால் தன் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்பதையும் அந்த பத்திரிகையாளர் சந்திப்பிலேய முகிலன் கூறியிருந்தார். அவரின் இந்த ஆவணப்படத்தின் மீது விசாரணை நடத்தினால் காவல்துறை உயர் அதிகாரிகள் பலர் சிக்குவார்கள் என்று கூறப்பட்டது.

கடந்த 16-ம் திகதியிலிருந்து காணாமல் போன முகிலனை காவல் துறையினர் சட்டத்திற்கு விரோதமாக கைது செய்திருக்கக்கூடும் என்று கூறுகின்றனர் சமூக ஆர்வலர்கள். இதனைத் தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்றத்தில் முகிலன் காணாமல் போனது குறித்து ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம் பெப்ரவரி 22-ம் திகதிக்குள் காவல்துறை பதிலளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. கடந்த் 2012-ஆம் ஆண்டு முகிலன் காவல்துறை யினரால் சட்ட விரோதமாக கைது செய்யப்பட்டதாக கூறும் அவரது குடும்பத்தினர் தற்போதும் அதே போல் நடந்திருக்கலாம் என்று தெரிவிக்கின்றனர்.

சுற்றுப்புற சூழலுக்காக போராடியவர் மீது தேசத் துரோக வழக்கு தொடுக்கும் இந்த நாட்டில் மக்களாட்சி தான் நடைபெறுகிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. நிலையில், காணாமல் போன முகிலனுக்கு எந்த ஆபத்தும் ஏற்படக்கூடாது என்பதே அனைவரின் விருப்பமாக இருந்தது. கடந்த பெப்ரவரி 2019ல் காணாமல் போன முகிலன் திருப்பதி ரயில் நிலையத்தில் கண்டுபிடிக்கபட்டதை அடுத்து, அவரை சென்னைக்கு கொண்டுவந்த தமிழக குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். ●

---




**மி**க இளம் வயதில்; விருப்பத்துக்கு மாறாக திருமணம் செய்விக்கப்பட்டது. அவளுக்கு; ஆகவே அந்த உறவு நீடிக்காது மண முறிவு ஏற்பட்டது.

காதலிக்கிற பருவம் வரும்போது கல்லூரியில் தத்துவம் பயின்று கொண்டிருந்தாள். தன்னுடன் படித்த பலரை அவள் காதலித்தாள். தத்துவம் பிடிக்காது ஜென் மாணவியாகத் தீர்மானித்து அவள் போனபோது சக மாணவர்கள் அவளைக் காதலித்தனர்.

காதல் என்பது திகட்டி; மரத்துப் போன போது உண்மையில் ஜென் கற்க முடிவு செய்தாள். ஒரு நல்ல கூட்டாளி கிடைத் தான். இருவரும் சேர்ந்து கற்றனர். மடத்தின் தலைமைத் துறவியின் மனை விக்கு இந்தப் பெண்ணின் அழகிலும் அவளுக்குக் கிடைத்த மதிப்பிலும் பொறாமை உண்டாயிற்று. அவளைப் பற்றியும் அவள் கூட்டாளியான பையனைப் பற்றியும் வாந்திகளைப் பரப்பி இருவரும் வெளியேற்றப்படும்படி செய்தாள்.

தனக்கும் தன் தோழனுக்கும் இழைக் கப்பட்ட அநீதியில் ஆத்திரமடைந்த அந்தப்பெண்; துறவியின் மனைவி கோயிலில் இருக்கக்கூடாது என்று முடிவு செய்தாள். கோயிலைக் கொளுத்தினாள். காவலர்கள் அவளைத் தண்டிக்க அழைத் துப்போனார்கள். அவளைக் காப்பாற்ற முன்வந்த வழக்கறிஞர்களைத் தடுத்து; ‘என்னைக் காப்பாற்ற முயற்சிக்காதீர்கள். மறுபடி ஏதாவது செய்து விட்டு இங்கேதான் வருவேன்’ என்றார். ஏழாண்டுகள் தண்டனை தரப்பட்டது.

விடுதலையானபோது அவளை யாரும் மதிக்கவில்லை. சிறைப் பறவையாக முத்திரை குத்தி அநாகரிகமாக நடத்தினார்கள்.

அவமானத்திலும் வருத்தத்திலும் முப்பதாவது வயதிலேயே அவள் செத்துப்போனாள்.

தன் கதையை ஒரு தோழி மூலம் எழுதி வைத்திருந்தாள். அவள் மரணத்திற்குப் பின் அது வெளியாயிற்று. அவளை அவமானத்துக்கும் துன்பத்துக்கும் உள்ளாக்கியவர்கள் அதை மிகுந்த சோதனையோடும் கண்ணீரோடும் படித்தார்கள்.

நூற்றுக்கணக்கான வருக்ஷங்களுக்கு முன்னால் வாழ்ந்ததாகச் சொல்லப்படும் மகான்களை ஆராதிப்போம். அதிலிருக்கின்றவர்களை நேசிக்க மாட்டோம். ஆயிரம் prejudice கள் இருக்கும். ‘Love thy neighbor’ என்று ஏசுநாதர் சொன்னால் ‘அவள் புருக்ஷன் கோபப்பட்டால் என்ன பண்ணுவது?; என்று கேட்போம்.

மனிதர்களின் உன்னதங்களும்; நியாயங்களும் அவர்கள் வாழ்கின்ற காலத்தில் நமக்குப் புரிவதில்லை

# சுற்றுலா மையமாகும் செர்னோபில்

உலகத்தின் மிக மோசமான அணு விபத்து ஏற்பட்ட செர்னோபில் மற்றும் அதன் சுற்றுவட்டாரத்தை சுற்றுலாத் தலமாக மாற்றப் போவதாக உக்ரைனின் அதிபர் தெரிவித்துள்ளார்.

அதிபர் வாலடிமியர் செலன்ஸ்கி புதனன்று செர்னோபிலைச் சுற்றுலாத் தளமாக மாற்ற கையெழுத்திட்டார்.



"செர்னோபில் குறித்த எதிர்மறையான எண்ணத்தை மாற்ற நேரம் வந்து விட்டது" என செலன்ஸ்கி கூறியுள்ளார்.


செர்னோபிலில் ஏப்ரல் 1986ல் அணு உலை விபத்து ஏற்பட்டது. இந்த விபத்து ஐரோப்பா முழுவதும் கதிர்வீச்சைப் பரப்பியது. ஐ.நாவின் கூற்றுபடி, 50,000 சதுர கிலோமீட்டர் நிலம் வீணாகியது. இந்த விபத்தில் 31 பேர் உயிரிழந்தனர். அதுமட்டுமல்லாமல் அதனுடைய பாதிப்பு இன்றுவரை அங்கு இருப்பதாக தெரிகிறது.

"மனிதன் ஏற்படுத்திய ஒரு பேரழிவுக்குப் பின் இந்த பிரபஞ்சத்தில் மீண்டும் உயிர்த்தெழுந்த இடம் செர்னோபில்" என செலன்ஸ்கி கூறியுள்ளார். "இந்த இடத்தை விஞ்ஞானிகள், சுற்றுச்சூழல் நிபுணர்கள், வரலாற்றாளர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் என அனைவரையும் அழைத்துவந்து காட்ட வேண்டும்" என அதிபர் கூறியுள்ளார். கதிர்வீச்சு அதிகம் இருந்தாலும் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மக்கள் ஏற்கெனவே செர்னோபிலுக்கு வந்து கொண்டிருக்கின்றனர்.

இந்த புதிய ஆணை செர்னோபிலுக்கு நீர் வழிப் பயணம் செய்யவும், ஆங்காங்கே சோதனைச்சாவடிகள் ஏற்படுத்துவதற்கும் வழி வகுக்கும். அது மட்டுமல்லாமல் அங்கே புகைப்படம் எடுப்பதற்கு இருந்த தடையும் நீக்கப்படுகிறது.

"பார்வையாளர்களுக்கு மின் நுழைவுச்சீட்டுக் கொடுப்பதால் அங்கே நடக்கும் ஊழலையும் தடுக்க முடியும். ஒரு தடை செய்யப்பட்ட பகுதி எப்போதும் ஊழல் மிக்கதாக இருக்கும் .இதில் சுற்றுலா பயணிகளிடமிருந்து அரசு அதிகாரிகள் வாங்கும் லஞ்சமும் அடங்கும். இது விரைவில் நிறுத்தப்படும்" எனவும் செலன்ஸ்கி கூறியுள்ளார்.

அதிபர் செலன்ஸ்கி விபத்து ஏற்பட்ட அணு உலையை மூடிவைக்க புதிய இரும்பு கூரையை மக்களுக்கு அர்ப்பணித்தார். அந்த கவசம் 1.7 பில்லியன் டாலர் செலவில், கதிர்வீச்சு மேலும் பரவாமல் தடுக்கத் தயாரிக்கப்பட்டு, 2016ல் அங்கே கொண்டுவரப்பட்டது. இது 275 மீட்டர் அகலமும் 108 மீட்டர் உயரமும் கொண்டது.



இந்த விபத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை பிரச்சினைக்குரியதாக இருக்கிறது. இதுவரை 5000 பேருக்கு தைராய்டு கேன்சர் வந்து அதற்கு சிகிச்சை அளித்து சரி செய்யப்பட்டுள்ளது. வேறு விதமான புற்றுநோய்களுக்கான சாத்தியம் இருப்பதாகப் பலர் சந்தேகிக்கின்றனர் ஆனால் அவற்றுக்கு ஆதாரம் கிடைக்கவில்லை.

அதுமட்டுமல்லாமல் வேறு சில உடற் பிரச்சனைகள் மற்றும் பிறக்கும் போது ஏற்படும் குறைகள் எனப் பலவற்றிற்கான வாய்ப்புகள் உள்ளதாக அறிக்கை இருந்தாலும் இவற்றிற்கு இந்த கதிர்வீச்சு தான் காரணமா என்பது 'குறித்து யாரும் தெளிவாக இல்லை.

**(நன்றி – இணையம்)**

---

# குமண முருகன் கோவிலும் கதிர்காம யாத்திரீகர்களும்...

வடகிழக்கு மற்றும் மத்திய மாகாணப் பகுதிகளில் இருந்து 26396 கதிர்காம யாத்திரிகள் கடந்த 7ஆம் திகதி மாலை 3 மணிக்கு வடமேற்கு மாகாண ஒகந்தவில் உள்ள குமண தேசிய பூங்கா வழியாக உள்ளே வந்ததாக குமண தேசிய பூங்கா முகாமையாளர் கூறினார்.




இம்மறை 1984ஆம் ஆண்டை விட இரு மடங்கு யாத்திரிகள் கதிர்காமம் நோக்கி மூன்று மாகாணங்களிலிருந்து குமண தேசிய பூங்கா வழியாகச் சென்றுள்ளனர் என மேலும் தெரிவித்த அவர் யாத்திரிகள் யாழ்பாணம், நயினாதீவு, முல்லைதீவு, திருகோணமலை, வாகரை, கல்குடா, மட்டக்களப்பு, தொப்பிகல, கல்முனை,அம்பாறை,அக்கரைப்பற்று, சிவனடிபாதமலை,மஸ்கெலியா,ஹற்றன், தலவாக்கலை, நுவரெலியா, வெலிமடை, கண்டி, கலஹா, தெல்தொட்ட மற்றும் ஹேவாஹெட ஆகிய பகுதிகளைச் சேர்ந்த யாத்திரிகள் ஒகந்த முருகன் ஆலயத்திற்கு வருகை தந்து அங்குள்ள முருகனைத் தரிசித்த பின்னர் குமண தேசிய பூங்கா வழியாகப் பாதுகாப்புடன் கதிர்காமக் கந்தனை வழிபடச் சென்றுள்ளனர்.

இம்முறை கதிர்காமம் நோக்கிச் சென்ற யாத்திரிகள் நலன் கருதி கடந்த ஜீன் 27ஆம் திகதியன்று குமண தேசிய பூங்கா வழி கதவுகள் திறக்கப்பட்டதாக மஸ்கெலியா களனிவத்தை தோட்ட உரிமையாளர் முருகையாபிள்ளை பாலேந்திரன் கூறினார். அன்றைய தினத்தில் 3705 யாத்திரிகள் உள்ளே வந்ததாகவும்,மறுநாள் 8273 பேர் உள்ளே வந்ததாகவும் தெரிவித்ததுடன் அது கடந்த காலங்களை விட அதிகமானவர்கள் என பதிவாகியுள்ளது வன பாதுகாப்பு அதிகாரி தெரிவித்தார்.



ஒகந்த முருகன் தேவாலய உற்சவம் தொடர்ந்து இடம்பெற்றதாகவும் அங்கு அதிக அளவில் யாத்திரிகர்களின் வருகை காணப்பட்டதால், குடிநீர் பற்றாக்குறை காணப்பட்டதாகவும். அவர்களுக்கான முதலுதவி செய்வதற்காக வைத்திய குழுவும் அங்கு கடமையில் ஈடுபட்டிருந்ததாகவும் தெரிகிறது. அத்துடன் கதிர்காம யாத்திரை காலம் முடியும் வரை அங்கு மருத்துவ முகாம் நடைபெற்றதாகவும் அதுவரை அவர்களுக்கு குடிநீர் மற்றும் தேவையான மருத்துவப் பொருட்கள் மற்றும் உணவு போன்றவற்றை ஒரு குழு வழங்கியதாகவும், மேலும் 15000 பேர் முதல் வழியைக் கடந்து கதிர்காமம் நோக்கிச் சென்றுள்ளதாகவும் இவ்வழியில் சென்ற யாத்திரிகள் அனைவரும் குமண பூங்கா வழியாகச் சென்றதாகவும் அறியப்படுகிறது. அத்துடன் 10000 யாத்திரிகள் யால வனப் பூங்காவில் தங்கி சென்றவர்கள் எனவும் கடந்த முறை 21 நாட்கள் இவ்வழி திறந்திருந்த போதும் இம்முறை 14 தினங்கள் மட்டுமே திறந்து இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

மருத்துவ முகாமில் பணியாற்றிய வைத்திய குழுவும் இராணுவத்தினரும் மிகவும் சிரமத்திற்கு மத்தியில் யாத்திரிகளுக்கு குடிநீர் வழங்கியதாகவும் அப்பகுதியில் கடும் வரட்சியான காலநிலை நில்வி வந்ததால், இராணுவத்தினர் மற்றும் திருகோணமலை சிவ தொண்டர் அணியும் இணைந்து பவுசர்களின் மூலமாக யாத்திரிகளுக்கு நீர் வழங்கிய போதும் நீர் பற்றாக்குறை ஏற்பட்டதாக களனிவத்தை தோட்ட முகாமையாளர தெரிவித்தார்.

ஆகையால் அடுத்த வருடம் கதிர்காம யாத்திரீகர்களின் நலன் கருதி, இந்து கலாச்சார அமைச்சு அல்லது அகில இலங்கை இந்து மாமன்றம் முன்வந்து இப்பகுதிக்கு குமண வனப் பகுதியில் உள்ள முருகன் ஆலயத்திற்கு பவுசர் மற்றும் அவற்றைக் கொண்டு செல்ல உழவு இயந்திரங்களை வழங்கி வைக்குமாறு யாத்திரிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

தீபச்சிறுகதை

# சிரஞ்சீவி

என்.எஸ்.எம்.ராமையா

கணக்குப்பிள்ளைக்கு வெள்ளைக்காரத் துரையிடமிருந்து கடிதம் ஒன்று வந்திருக்கிறது.

"காலை ஏழு மணியிருக்கு சங்கு ஊதியதும் ஒவ்வொரு தொழிலாளியும் வேலை ஸ்தலத்தில் இருக்கவேண்டுமென்பது சட்டம். ஆனால் மேற்படிச் சட்டம் தொழிலாளர்களால் புறக்கணிக்கப்படுகின்றது. இது உங்கள் நிர்வாக ஒழுங்கின்மையைக் காட்டுகிறது. எனவே இது தவிர்க்கப்படாவிட்டால் உங்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்" என்று இருந்த அந்தக் கடிதம், தனது முப்பது வருட சர்விஸை முப்பது வினாடியில் விழுங்க வந்திருக்கும் எமனாக இருப்பதைக் கண்டு அவருக்கு வயிறு கலங்கியது.

உயிர் நாடியில் அடித்து வேலை வாங்கும் இந்த வழக்கம் அவருக்கு முன்பே பழக்கந்தான். ஆயினும் இது பற்றிக் கவலை கொள்ளாமலும் இருக்கவில்லை.

எது பாம்பு, எது கழுதை என்று கணிக்கமுடியாத 'தனி' உலகமாயிற்றே அது!

ஏதேனும் நடவடிக்கைதான் இந்தக் கடிதத்துக்குரிய பதிலே ஒழிய, இன்னுமொரு கடிதம் அல்ல என்பதை நன்றாக உணர்ந்திருந்த அவர் காலை 'மஸ்டரி'ன் போது எல்லோருக்கும் ஒரு 'லெக்சர்' அடித்துவிட்டு, மஸ்டர் கணக்குக் கொடுத்த கையோடு அவசர அவசரமாக ஒருவாய் தேநீரைக் கொட்டிக் கொண்டு மலைக்குப் புறப்பட்டார்.

இந்த ஒரு சட்டம் மட்டும் எங்கும் எவராலும் சாதிக்க முடியாத ஒன்று என்பது அவருக்குத் தெரியும். இன்று காலையில் அடித்த 'லெக்சரோடு' அன்றி இனிமேல் போடப்போகும் கஜகர்ணங்களோ, எதையும் சாதித்துவிடப் போவதில்லை என்பதும் தெரியும். இருந்தும் தலையில் துணியைக் கட்டிக்கொண்டு அதிகாலையிலேயே புறப்பட்டார். வேறு வழி.

காலந்தான் எவ்வளவு மாறி விட்டது. ஒரு காலத்தில் கணக்குப் பிள்ளை இப்படி 'வெள்ளென' புறப்பட்டுவிட்டார் எனறால் தோட்டமே அலறி புடைத்துக் கொண்டு நிற்கும். தலை பழுத்த கிழவன்கூட, அவருக்குப் பின்னால் மலைபோய்ச் சேருவது மகாப் பாவம் என்பது போல் உயிரைப் பிடித்துக்கொண்டு ஓடுவான். சந்து பொந்துகளிலும், குறுக்குப் பாதைகளிலும் ஆட்கள் ஓடுவதைப் பார்க்க வேண்டுமே! ஆனால் இப்போதோ?

பின்னால் வந்துகொண்டிருக்கும் அவருக்கு ஒதுக்கி வழிவிட்டு, வெற்றிலைப் பையை துழாவிக் கொண்டும், பீடியைப் புகைத்துக்கொண்டும், நடந்துகொண்டிருந்தார்கள்.

காலத்தின் வளர்ச்சி!

இது அவருக்குப் புரிந்தது. மாறிக்கொண்டு வரும் சமூகநிலை தவிர்க்க முடிாதது மட்டுமல்ல, அவசியமானதுங் கூட என்று எண்ணிக்கொள்வார். சில வேளைகளில் மகிழ்ந்து கொள்வார். அதற்காக ஆனால் யாருக்கு இது புரிய வேண்டுமோ அவர்களுக்கு இது புரியவில்லையே என்பது அவர் ஆதங்கம்.

புரியாதது போல இருக்கிறார்கள் என்பது அவருக்குதான் புரியல்ல.

மணி ஏழு பதினைந்து. காடாக மண்டிப் போயிருந்து முருங்கை மரங்களை வெட்ட வேண்டிய பகுதியில் வந்து நின்றார். இரண்டு மூன்று பேர்கள்தான் முன்னதாக வந்திருந்தார். அவர்கள் ஆளுக்கொரு கல்லில் உட்கார்ந்திருந்தவாறு பீடியை இழுத்துக்கொண்டிருந்தார்கள். கங்காணி ஒருவர் தோயிலைக் கொடியின் மறைவில் உட்கார்ந்து அவர்களுடன் எதையோ பேசிக்கொண்டிருந்தான்.

இவரைக் கண்டதும் சலிப்போடு எழும்பி தோளில் கிடந்த துண்டை உதறி முண்டாஸ் சாகக் கட்டிக்கொண்டார்கள்.

கையில் இருந்த கம்பைப் பக்கத்தில் அடக்கியவாறு கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு நடப்பவற்றுக்குச் சாட்சிபோல ரோட்டில் நின்று கொண்டிருந்தார் கணக்குப்பிள்ளை.

அவருக்குப் பின்னால் வந்துகொண்டிருந்த ஆட்கள் அதே அமைதியோடு வந்து நிறையில் குமிழிக்கொண்டிருந்தார்கள். அவர்களிடம் புதிதாக எந்தவொரு பரபரப்பையும் காணாதது அவருக்குச் சற்று ஏமாற்றமாகவும் எரிச்சலாகவும் இருந்தது. முகத்தில் லேசாக கடுமை பரவி நின்றது. வந்த ஆட்கள் அனைவரும் முறைகேட்டு வேலை தொடங்கும்போது கணக்குப்பிள்ளை கையைப் ரட்டிப்பார்த்தார்.

மணி எட்டுக்குப் பத்து நிமிடங்கள் இருந்தன.

வேலை சூடு பிடிக்க ஆரம்பித்தது. நன்றாகக் கிளை பரப்பி செழித்து நின்ற முருங்கை மரங்களின் கிளைகளை ஒரே அளவுக்கு வைத்து இரண்டே வெட்டில் வெட்டித் தள்ளிக் கொண்டும் அலாக்காக



கீழே விழும் வாதுகளைத் துண்டம் துண்டமாக வெட்டி தேயிலைச் செடியின் அடியில் புதைத்துக்கொண்டும் முன்னேறிக்கொண்டிருந்தனர் தொழிலாளிகள்.

சற்று நேரம் வேலை நடைபெறுவதையே பார்த்துக் கொண்டிருந்த பின்னர் கங்காணிமார்களுக்கு வேலைக்கான குறிப்புகள் கொடுத்துவிட்டு அடுத்த வேலைத்தளம் செல்ல முற்பட்டார்.

அப்போது தூரத்தில் ஒருவன் வந்துகொண்டிருப்பது அவர் கண்களில் பட்டது. இதேவேலைக்கு வருபவனாகவும் இருந்தது. அவனையே கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவன் அருகில் வந்து நிறைக்குள் இறங்கும் போது அது யாரது. இப்ப வாறது? என்றார். அவன் நின்று அவரை ஏறிட்டுப் பார்த்தான். ஒழுங்காக வாரி விடாத புதர்போல் இருந்த தலைக்குக் கீழ் கடுமையான மௌடீகமும் கலந்த முகத்தில் இருந்த அவனது சிவந்த விழிகள் கணலை உமிழ்ந்தன.

"என்ன இப்பத்தா வர்றே?" என்றார் கணக்குப்பிள்ளை.

"பின்னே எப்ப வர்றது? என்று திருப்பிக் கேட்டான் அவன். ஏற்கனவே எரிச்சலோடு நின்றவருக்கு இந்த எதிர்க்கேள்வி சினத்தை மூட்டியது. சுணங்கி வந்ததுமில்லாமல் என்ன திமிர்?

காலையிலையே பெரட்டிலேயே வைத்து நான் என்ன சொன்னேன் என்றார். 'அது சரி! வெள்ளன வாடா'ன்னு நடந்ததான் வர்றதா? எனக்கிட்டே என்ன காரா இருக்கு. ஏழுக்குப் பொறப்பட்டு ஏழேகாலுக்கு மலையிலே நிக்க?' என்றான்.

யாரோ சிலர் சிரித்தனர்.

'இது பேச்சு இல்லே' என்றார். கோபத்தினால் காலைக் குளிரிலும் உடம்பு சூடேறியது. அவன் தோளில் கிடந்த படங்குச் சாக்கை உதறி கையில் எடுத்துக் கொண்டு நிறைக்குள் இறங்கினான். கணக்குப்பிள்ளை குரலில் கண்டிப்பும் கடுமையும் தொனிக்க 'செதம்பரம்! நான் கேட்டதற்கு நீ சரியான பதில் சொல்ல இல்லே!' என்றார். ஆவர் சொல்வதை சிறிதும் லட்சியம் செய்யாமல் அவன் நிறைக்குள் வேகமாக இறங்கினான். தேயிலைச் செடிகள் சலசலத்தன. 'கங்காணி!' என்றார் கணக்குப்பிள்ளை. இதுவரை நடந்தவற்றை கவனித்துக் கொண்டிருந்த கங்காணி அவசரமாக 'ஐயா' என்றான்.

'மணி என்ன இப்ப?'

கங்காணி கோட்டின் உள் ஜேபியில் அடங்கியிருந்த சங்கிலி கோர்த்த கடிகாரத்தைத் தூக்கிப் பார்த்து 'மணி சரியா எட்டுங்க' என்றான்.

'பத்துப் பதினைஞ்சு நிமிஷம் சுணாங்கினா பொறுத்துக்கலாம். செதம்பரம் ஒரு மணி நேரம் சுணங்கி வந்திருக்கிறான். அவனுக்கு நெறை குடுக்க வேண்டாம்' என்றார். குரல் உயர்ந்து கம்பீரமாக உலகத்துக்கு பறை சாற்றுவதுபோல் ஒலித்தது.

காங்காணி பணிவோடு 'சரிங்க' என்றான்.

கணக்குப் பிள்ளை நடக்கத்துவங்கினார்.

ஒருக்கால் அவன் பின்னால் வரக்கூடும், வந்த மன்னிப்பு கேட்கட்டும் என எதிர்பார்த்தார். வந்துகேட்டால் மன்னிக்கும் மன நிலையில் இருந்தார். ஆனால் அவன் வரவில்லை.

மாறாக, நிலையில் நின்றவாறு மட்டமான வார்த்தைகளால் அவரை திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தான்!.

உச்சியில் வெய்யில் 'சுள்'ளென்று உறைத்துக் கொண்டிருக்கும் வேளையில் கணக்குப்பிள்ளை வீடு நோக்கி நடந்துகொண்டிருந்தார். உடல் பூராவும் வியப்பை பொங்கிக் கொண்டிருந்தது. தலையிலிருந்த முட்டாசு சற்று மேலேறி இருந்தது. இடுப்பு வேஷ்டி பாதியாக மடிந்து, முன்நுனிகள் இரண்டும் இரண்டு கைகளுக்குள் அடங்கி, கைகளின் வீச்சுக்கேற்ப ஆடிக்கொண்டிருந்தன. நந்தி நந்தியாக இருந்த மலைகளின், வளைந்து செல்லும் பாதையில் ஆயிரம் சிந்தைகளோடு நடந்து கொண்டிருந்தார். இரண்டொரு குருவிகளின் கீச்சொலிதவிர மற்றும்படி நிசப்தத்தின் தீர்க்கமான ஆட்சியில் மூழ்கியிருந்தது சூழ்நிலை. ஏதோ நினைவுக்குவர சற்று நின்றார். காலையில் ஒருவனின் வேலையில் 'மண்' விழுந்த இடம் அங்குதான் சற்று கீழே இருந்தது. பாதையின் ஓரமாக வந்துநின்று கீழே எட்டிப் பார்த்தார். காடு மண்டிப்போயிருந்த முருங்கை மரங்கள் வெட்டப்பட்டு, பந்தல் பிரித்த கல்யாண வீடுபோல இருந்தது.

பார்வையின் ஒரு வீச்சில் வெட்டப்பட்ட ஏக்கர் கணக்கை அளந்துகொண்டு மீண்டும் நடக்கத் துவங்கினார். பாதையின் ஒரு வளைவில் திரும்பும் போது, சற்றுமுன் யாரோ ஒரு நபர் எட்டிப்பார்த்துவிட்டு மறைந்து கொண்டது போன்ற பிரமை ஏற்பட்டது. அது பிரமையா அல்லது உண்மையா என்று ஒரு முடிவுக்கு வருவதற்குள் - அந்தவளைவில் திரும்பிக் - கொண்டிருக்கையில் - அவன் - காலையில் விரட்டப்பட்டவன்- கையிலிருந்த கத்தியை ஓங்கிக்கொண்டு அவர் மீது பாய்ந்தான். திகைத்துப்போன கணக்குப்பிள்ளை, தன்னைச் சமாளித்துக்கொண்டு நிதானிப்பதற்குள், அவரது கை நிதானித்துவிட்டது! கத்தி பிடித்திருந்த கையில் அவரது கைக்கம்பு சுளீரென்று விழுந்தது. வலதுகை துவண்டு, கத்திப்பிடியிலிருந்து நழுவி விழுந்தபோதிலும் அவன் ஆக்ரோஷத்துடன் பாய்ந்தான்.

இருவரும் நிலத்தில் புரண்டனர். கோபத்தில் அவன் வாயிலிருந்து வந்த வார்த்தைகளிலிருந்து அன்று அவன், அவரைத் தீர்த்துக் கட்டும் முடிவோடு இருக்கிறான் என்பதை உணர்ந்துகொண்டார்.

அடி விழுந்து துவண்டு போயிருந்த அவனது வலது கை அவருக்குத் துணைபுரிந்தது.

அசந்தர்ப்பமான ஒரு மலையில் அவனது வலது கையை முறிப்பதுபோல் திருகி அவன் முதுகுப்புறமாக வைத்துக் கொண்டு எழும்பி உட்கார்ந்தார். தலையில் கட்டியிருந்த முட்டாசுத் துணியை இழுத்து எடுத்து இரண்டு கைகளையும் பின்புறமாக வைத்துக் கட்டினார். வெறியாலும், களைப்பாலும் அவனுக்கு புஸ் புஸ்ஸென்று மூச்சு வேகமாக வந்தது. கணக்குப்பிள்ளை எழும்பி, இந்த ரகளையில் எப்போதோ அவிழ்ந்து, மண்ணில் புரண்டு, ஒருபுறமாக மிதிபட்டுக்கிடந்த தனது வேஷ்டியை எடுத்து உதறிக் கட்டிக்கொண்டார். வேஷ்டியில் ஈரமண் திட்டுத் திட்டாக அப்பியிருந்த பேனா, பென்சில் நோட் புத்தகங்களை, ஜேபியில் பொறுக்கிப் போட்டுக் கொண்டார். கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டபோது, நெஞ்சை அடைத்துக்கொண்டு அழுகைவந்தது. கைக்குட்டையால் முகத்தைப் பொத்திக்கொண்டார்.



சத்தம் கேட்காத அந்த மௌன அழுகையால் அவர் உடலும் வயிறும் குலுங்கியது: ஈரம் கசிந்த விழிகளைத் துடைத்துக்கொண்டார். விழிகள் 'ஜிவ்' வென்று சிவப்பேறின.

அவன் காலடியில் கிடந்த கத்தியை எடுத்து வைத்துக்கொண்டு அவனைப் பார்த்தார். கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டுக் கிடந்த அவன், எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். மனதில் எழும்பிய புயல் தணிந்திருப்பது போலும்.

என்ன செய்கிறோம் என்பதை உணராமல் செய்துவிட்டு, என்ன செய்தோம் என்கிற பிரக்ஞையின் வலுவை உணராத மௌடீகம் முகத்தில் தெரிந்தது. ஏராளமான குற்றங்கள் இப்படித்தானே இடம்பெற்று விடுகின்றன?

'ஏய்' என்றார் கணக்குப்பிள்ளை.

கண்கள் கத்தியை மீண்டும் நோட்டமிட்டன. அவன் முகத்துக்கு முன்னால் கத்தியை நீட்டி 'நீ என்ன செய்ய நினைச்சே?' என்றார்.

அவன் எதுவும் பேசவில்லை. பார்வை மட்டும் சற்றுத் தாழ்ந்தது. கோட்டின் உள் ஜேபியில் கையை விட்டு, டயறியை எடுத்து, அதிலிருந்து ஒரு பத்து ரூபாய்நோட்டை எடுத்து முன்னால் போட்டு 'இந்தா எடுத்துக்க. என்றார். கணக்குப்பிள்ளை. 'இன்னைக்கு ஒனக்கு மூணு ரூபா நஷ்டம் இல்லையா? நான் மூணு நாள் சம்பளம் தர்றேன். வச்சுக்க. ஆனா நாளைக்கு கணக்கி வந்தேன்னா நாளைக்கு வெரட்டத்தான் செய்வேன். என்னை வெட்டிக்கொன்னு போட்டுடலாம். நாளைக்கு என்க்கு பதிலா இன்னொருத்தன் வருவானே, அவனும் இதைத்தான் செய்வான். அவனையும் கொன்னுப்போட்டுட்டா, அவ்னுக்குப் பொறகு வர்றவனும் இதையேத்தான் செய்வான் எங்களை வெட்டிக் கொல்லலாம். நாங்க செத்துப்போகலாம். ஆனா சட்டம் என்னைக்கும் சாகாது. சுட்டத்தை வெட்டிக் கொல்ல ஏலாது. நீங்கள்ளாம் அதைத்தான் தெரிஞ்சுக்கணும்!' என்றார்.

அமைதியாகவும் ஆணித்தரமாகவும் அவர் பேசியது அவன் நெஞ்சைத் தொட்டிருக்க வேண்டும், தலை குனிந்திருந்தது. முகத்தில் நிதானமும் அமைதியும் தவழ்ந்தது.

கணக்குப்பிள்ளை கத்தியை ஜேபியில் வைத்துக்கொண்டு, அவன் கைக் கட்டை அவிழ்த்து விட்டார். அவன் அமைதியாக எழும்பி நின்று வலது கையைத் தடவி விட்டவாறு ஒதுங்கி நின்றாள்.

கணக்குப்பிள்ளை நடக்கத் துவங்கினார்.

# தந்தை வழியில் தேவியின் இலக்கியப் பணி

"குழந்தைகளுக்கான நூல்களை எல்லாம் தொகுத்து ஒரு களஞ்சியம் போல உருவாக்க வேண்டும் என்பது அப்பாவின் ஆசை. ஆனால் அது நிறை வேறவில்லை. அதற்காகப் புத்தகங் களைச் சேகரிக்கும்போது அவர் இறந்துவிட் டார்" குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா வின் மகள் தேவி நாச்சியப்பனிடமிருந்து வருத்தம் தோய்ந்த வார்த்தைகள் வருகின்றன".

சாகித்ய அகாடமி சிறந்த குழந்தை இலக்கியப் படைப்பாளிகளுக்கு வழங்கி வரும் 'சாகித்ய பால புரஸ்கார்' விருதை பெற்றவர் தேவி நாச்சியப்பன். தமிழில் இந்த விருதைப் பெற்ற முதல் பெண் படைப் பாளி இவர் எனத் தமிழ் உலகம் பெருமைப் படுகிறது. இவரது தகப்பனார் மறைந்த குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா. தமிழ் உலகம் போற்றும் குழந்தைக் கவிஞர் அவர்.

**உங்கள் தகப்பனாரைப் பற்றி உங்கள் நினைவுப் பதிவுகள் எப்படி இருக்கின்றன?**

'குழந்தைகளுக்கான பாடல்கள், கவிதைகள், கதைகள் என்று நிறைய எழுதியிருக்கிறவர் எங்கள் தகப்பனார். அவர் அவற்றை எல்லாம் பாடியும் நடித்தும் காட்டுவார். அவருடைய படைப்புகளை என்னிடம் கொடுத்து வாசிக்கச் சொல்லி கருத்துகள் கேட்பார். சரியாகச் சொன்னால் ஏற்றுக்கொள்வார். சிறுபிள்ளைத்தனமாக இருந்தால் அதற்கு விளக்கம் கொடுத்துப் புரியவைப்பார். இப்படித்தான் எனக்கு இலக்கியம் அறிமுகமானது. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளைதான் அப்பாவின் மானசீகக் குரு. அவருடைய பெயரில் 'கவிமணி குழந்தைகள் சங்கம்' என்று குழந்தைகளுக்காக ஒரு சங்கம் தொடங்கினார், அப்போது எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டி ருந்த என்னை அதன் அமைப்பாளராக நியமித்தார். அந்தச் சங்கத்தின் எல்லா உறுப்பினர்களுமே குழந்தைகள்தான். எங்களையெல்லாம் கவிதை எழுதச் சொல்வார். அதில் இருக்கும் பிழைகளைத் திருத்தி, எழுத்துப் பயிற்சி கொடுப்பார். கொஞ்ச நாளிலேயே பட்டி மன்றத்தில் பேசுகிற அளவுக்கு, அந்த சங்கம் என் தன்னம்பிக்கையை வளர்த்தது. சங்கத்தின் சார்பில் கவிதைப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகளை வாங்க ஆரம்பித்தேன்.

கல்லூரிக் காலத்தில் கவிஞர் மேத்தாவின் தாக்கத்தில் புதுக்கவிதை மோகம் வந்தது. அப்பாவோ, 'புதுக்கவிதைகளில் தீர்வே இல்லையம்மா... மரபுக் கவிதைகளை எழுது' என்று சொன்னதால் புதுக்கவிதையை அத்தோடு விட்டாயிற்று! அதன் பிறகு ஏனோ கவிதைகளும் நிறைய எழுதவில்லை. கதைக்கான எழுத்து நடையைப் பழக, ஆங்கிலக் கதைகளை தமிழில் மொழியாக்கம் செய்யச் சொன்னார். மொழியாக்கம்தான் எனக்கு எழுத்து நடை, கவிதைகள், சிறுகதைகள் எழுதுவதற்கு அடித்தளமாக அமைந்தது. கல்லூரி பருவத்தில் ஆங்கிலத்தில் உள்ள தேவதைக் கதைகள், நாட்டுப்புறக் கதைகளை தமிழில் மொழி பெயர்த்தேன். அந்த மொழிபெயர்ப்பு, இரண்டு பாகங்களாக என் திருமணத்தன்று வெளியிடப்பட்டது. அதுதான் என் முதல் நூ ல் வெளியீடு. என் கணவர் நாச்சியப்பன் கவிதைகள் எழுதுவார். அவர் எழுதிய 'மௌன ராகம்' என்னும் கவிதைத் தொகுப்பும் திருமணத்தில் வெளியிடப்பட்டது. எனக்குத் தெரிந்து, மணப்பெண், மாப்பிள்ளை எழுதிய நூல்களை வெளியிடும் அரங்கமாக மணமேடை மாறியது என் திருமணமாகத்தான் இருக்கும்" என்று பலமாகச் சிரிக்கிறார் தேவி. அப்பாவுக்குப் பிறகு, கவிஞர் செல்ல கணபதி, டாக்டர் பூவண்ணன், ரேவதி (ஹரிஹரன்), பி.வெங்கட்ராமன் போன்றோர் என்னை ஊக்கப்படுத்தி எழுதவைத்தார்கள். என் கணவர் தனியார் வங்கியில் திருப்பத்தூரில் வேலைபார்த்தார்.

1990-ம் ஆண்டு முதல் நான் கீழச்சீவல் பட்டியில் உள்ள ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வர் மேல்நிலைப்பள்ளியில் தமிழ் ஆசிரியரா வேலை பார்த்து ஓய்வு பெற்றேன்" என்கிறார் தேவி நாச்சியப்பன்.

**குழந்தைகளுக்கு இலக்கியத்தைக் கொண்டுசேர்க்கும் தங்கள் பணிகள் எப்படி**



**இருக்கிறது?**

ஹஎன் திருமணத்துக்குப் பிறகு 12 வருஷம் 'கவிமணி குழந்தைகள் சங்கம்' செயல்படவில்லை. பிறகு நான் அதற்கு மீண்டும் உயிர்கொடுத்து, குழந்தைகளுக்குப் பட்டிமன்றம், கவிதைகள், கதைகள், பாடல்கள் உள்ளிட்ட பயிற்சிகளைக் கொடுக்க ஆரம்பித்தேன். இப்போதுவரை கொடுத்துக் கொண்டிருக்கிறேன். அவர்களுக்கு நண்பர்களாக நிறைய புத்தகங்களையே அறிமுகப்படுத்துகிறேன். நான் படிப்பித்த பள்ளி மாணவர்களைக் கதை, கவிதைகள் எழுத ஊக்கப்படுத்துறேன். பள்ளியில் பிள்ளைகளுக்குப் பாடத்தையே எளிமையான இலக்கிய நடையில்தான் நடத்துவேன்" என்கிற தேவி, 'பந்தும் பாப்பாவும்', 'பசுமைப் பட', 'புத்தகத் திருவிழா', 'பேசியது கைப்பேசி', 'பட்டிமன்றம்', 'கடவுளைக் கண்டவர்கள்' உட்பட இதுவரை குழந்தைகளுக்காக 12 நூல்கள் எழுதியிருக்கிறார். காரைக்குடியில் குழந்தைகளுக்கான போட்டிகள், புத்தகத் திருவிழா மற்றும் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம் ஆகியவற்றையும் 16 ஆண்டுகளாக நடத்தி வருகிறார். தேவியின் மகன் வருண், சுட்டி விகடனின் 'சுட்டி ஸ்டார்' என்ற தேவி நாச்சியப்பனிடம் தொடர்ந்து பேசினோம்.

**2012-ம் ஆண்டு, தமிழக அரசு சார்பில் நல்லாசிரியர் விருதும் 2017-ம் ஆண்டு தமிழக அரசு வழங்கிய தமிழ்ச் செம்மல் விருதும் [சிவகங்கை மாவட்டம்] பெற்றிருக்கிறீர்கள். இப்போது சாகித்ய அகாடமி விருது பெற்றி ருக்கிறீர்கள். அவை பற்றியும் குழந்தை இலக்கியம் பற்றியும் சொல்லுவீர்களா?.**

"இந்த விருதின் பெருமையை என் தந்தைக்குத்தான் அர்ப்பணிக்கிறேன். என்னை இப்படி உருவாக்கியது அப்பாதான்! குழந்தை இலக்கியம், குழந்தைகளுக்கான படைப்பாளிகள் என்று அந்தச் சூழலிலேயே வளர்ந்தேன். அவருடைய பிள்ளைத் தமிழ்தான் என்னை வளர்த்தது. அதற்கான பொது அங்கீகாரம்தான் இந்த விருது... அப்பா இப்போது இல்லையென்றாலும், செய்தி வந்த நொடியிலிருந்து அவரைத்தான் மனம் நினைத்து நினைத்து நன்றி சொல்கிறது" என நெகிழ்ந்து கூறுகிறார்.

**"படைப்புகள் தவிர குழந்தைகளுக்காக தங்கள் தந்தையைப் போல வேறு ஏதேனும் செயல்பாடுகளைத் தொடர்கிறீர்களா?"**

"ஆமாம். அப்பாவுக்குப் பிறகு கவிமணி குழந்தைகள் சங்கம் நின்றுவிட்டதால், 'வள்ளியப்பா இலக்கிய வட்டம்' என்ற குழந்தைகளுக்கான அமைப்பை நிறுவி னார் கவிஞர் செல்லகணபதி. நான் அதன் அமைப்பாளராக இருக்கிறேன். 1993-ல் தொடங்கினோம். 1994 முதல் ஆண்டுதோறும் 'குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா கலை இலக்கியப் பெருவிழா' என்று ஏதேனும் ஓர் ஊரில் ஒரு நாள் நிகழ்ச்சியாக நடத்துகிறோம். அந்த மாவட்டத்தின் அனைத்துப் பள்ளிக் குழந்தைகளையும் வரவழைத்து, கலைப்போட்டிகளை நடத்தி, அவர்களின் திறமைகளை அரங்கேற்றி, பரிசுகள் வழங்குகிறோம். அதே விழாவிலேயே, முதுபெரும் குழந்தை எழுத்தாளர் மற்றும் பதிப்பாளருக்கு 'வள்ளியப்பா' விருதும் வழங்கப்படுகிறது."

இப்போது குழந்தை இலக்கியத்தின் நிலை அந்தக் காலம் போல இல்லையே!"

மிக வருத்தமான உண்மைதான்... 1950களில் மிகச் சிறப்பாக இருந்தது. குழந்தைகளுக்கான இதழ்களும் நிறைய வெளிவந்தன. குழந்தை இலக்கியத்தை, குழந்தைகளிடம் கொண்டுபோய்ச் சேர்க்க பல படைப்பாளிகள் உற்சாகப் பணிசெய்தார்கள். பள்ளிகளில் நீதிபோதனை வகுப்புகள் இருந்தன. ஆனால், 70 -களுக்குப் பிறகு இந்நிலை மெல்ல மெல்ல மாறி, தேய ஆரம்பித்துவிட்டது. சிறுவர்களுக்கான இதழ்களும் குறைந்துவிட்டன.

ஆனால், இப்போது மீண்டும் ஓர் ஆர்வம் துளிர்விடத் தொடங்கியுள்ளது. அதற்கு இந்த பால புரஸ்கார் விருதும் ஒரு காரணமாக இருக்கலாம். இந்த விருது, படைப்பாளிக்கான மிகப் பெரிய அங்கீகாரம், 50,000 ரூபாய் ரொக்கப் பரிசும் விருதும் கொண்டது. இப்போது பள்ளிகளில் போட்டிகளில் வெல்லும் மாணவர்களுக்குப் பரிசாக புத்தகங்களைக் கொடுக்கிறார்கள். அது ஓர் ஆறுதலான செய்கை. ஆனால், அவற்றை குழந்தைகள் படிக்க வைக்க வேண்டும். அப்போதுதான் அந்த நோக்கம் முழுமைபெறும்".

**குழந்தை இலக்கியக் களத்தில் உங்கள் கனவு..?"**

அப்பாவின் வழியில், குழந்தைகளுக்காக எழுதுதல், குழந்தைகளுக்கான சங்கம், குழந்தை எழுத்தாளர்களை ஊக்குவித்தல், குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகளில் பங்கேற்பு என்று என்னால் முடிந்தவரை குழந்தை இலக்கியத்துக்கு பங்களித்து வருகிறேன். எழுதும் திறமை உள்ள பிள்ளைகளுக்கு, குழந்தைப் பருவத்திலேயே பயிற்சி கொடுக்க வேண்டும். வார்த்தை அமைப்பு, எளிமையான நடை போன்றவற்றை சொல்லிக் கொடுக்க வேண்டும். அதற்கான பயிற்சிப் பட்டறை நடத்த வேண்டும் என்கிற ஆசை இருக்கிறது. குழந்தைகள் கூடும் இடத்தில் கதை சொல்வ தில் எனக்கு விருப்பம் அதிகம். கதைப் புத்தகம் வாசித்தலின் பால் ஈர்க்கவேண்டும் என்பதுதான் அதன் அடிநாதம். முடிந்தவரை சிறுவர், சிறுமியரை வாசிக்கவைத்தல், திறமை இருக்கும் குழந்தைகளை எழுத வைத்தல், இரண்டுமே என்னுடைய கனவெனச் சொல்லலாம்!"

**உங்கள் இலக்கியச் சேவைக்கு குடும்பத்தினர் உதவுவதுண்டா? உங்கள் உடன்பிறந்தோர் மற்றும் வாரிசுகள் எழுதுகிறார்களா?"**

என் கணவர் இப்பணிகளில் எனக்கு உற்ற துணை. முழுமையான ஆதரவு அவரிடம் கிடைப்பதால்தான் நான் இவ்வளவு தூரம் ஈடுபட முடிகிறது. என் படைப்புகளைப் படித்துப் பார்த்து பிழை திருத்துதல், நிகழ்ச்சிகளுக்குப் போகுமிடங்களுக்கு உதவி செய்தல், விழா ஏற்பாடுகளில் முழுமூச்சாக இறங்கிப் பணியாற்றுதல் என்று அவர்தான் எனக்கு எல்லாமே! அவருக்கும் தமிழார்வமும், எழுத்தார்வமும் இருப்பதால்தான் இந்த ஒத்திசைவும் ஆதரவும் எனக்குக் கிடைத்திருக்கிறது. என் சகோதரர் அழகப்பன் அப்பாவைப் போலவே நன்கு கவிதைகள் எழுதுவார். என் மகளுக்கும் எழுத்தில் ஈடுபாடு உண்டு. மகனும் பத்திரிகையாளராகச் செயல்படுகிறார்."



குழந்தைக் கவிஞர் அழவள்ளியப்பா

**அவள் விகடன் வாசகிகளுக்கு ஒரு பெண் படைப்பாளியாகத் தங்கள் செய்தி...?"**

குழந்தைகளுடன் அதிகமாகத் தொடர்பில் இருப்பவர்கள் பெண்கள்தான். ஆனால், குழந்தை இலக்கியத்தில் பெண் படைப்பாளிகள் என்று பார்த்தால் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவில் மிகவும் குறைவாகவே உள்ளனர். ஆண்களே குழந்தைகளுக்காக இவ்வளவு சிறப்பாக எழுதும்போது, பெண்களாலும் முடியும். இன்னும் பல பெண்கள் இந்தத் துறையில் வர வேண்டும் என்பதே என் ஆசை!"" திறமையும் ஆர்வமும் உள்ள சகோதரி- களை இலக்கிய உலகுக்கு இருகரம் நீட்டி வரவேற்கிறார் குழந்தைக் கவிஞரின் திருமகள் தேவி நாச்சியப்பன்.

**சங்கம் அமைத்து குழந்தை இலக்கியம் வளர்த்து... பெண்களால் குழந்தை எழுத்தாளராக ஜொலிக்க முடியும் என்று நம்புகிறீர்களா?**

எங்கள் தந்தையார் எழுதியது சுமார் 1000 குழந்தைப் பாடல்கள், கதைப்பாடல் கள், தனிப்பாடல்கள், ஈசாப் கதைப் பாடல் கள், பழைய கதை புதிய பாடல், வாழ்க்கை வரலாறு, சிறுகதை, நாடகம் என அப்பா தொடாத துறையே இல்லை. 1950-ம் ஆண்டிலேயே குழந்தை எழுத்தாளர்களுக் காக முதன் முதலில் சங்கம் தொடங்கியவர் அழ.வள்ளியப்பா. 'உலகிலேயே குழந்தை எழுத்தாளர்களுக்கு இதுதான் முதல் சங்கம்' என்று அப்பாவுக்குப் புகழாரம் சூட்டியிருக்கி றார் மன்றோ லீஃப் என்னும் அமெரிக்க எழுத்தாளர். தமிழ்நாட்டில் எட்டு முறை குழந்தை இலக்கிய மாநாடு நடத்தி சாதனை படைத்தவர் அப்பா. கவியரங்கம், நூல் வெளியீடு, புத்தகக் காட்சி, புகைப்படக் காட்சி, சிறந்த நூல்களுக்கு ஏவி.எம் அறக்கட்டளை பரிசு என மாநாடு மிகச் சிறப்பாகக் களைகட்டும். குழந்தைகளுக்கான கையெழுத்துப் பிரதிக ளுக்குக்கூட பரிசுகள் வழங்கப்பட்டன. அந்த எட்டு மாநாடுகளையும் நான் பதிவு செய்திருக் கிறேன். அப்பாவுக்குப் பிறகு அந்த மாநாடு நடத்தப்படவில்லை.

– நன்றி , அவள் விகடன்

# போர் எதிர்ப்புப் போராளி ஓவியர் மருது

உலகில் தோன்றிய முதல் கலை ஓவியக்கலை என்பது ஆய்வறிஞர்களின் முடிவு. அதற்குச் சான்றாகப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வரையப்பட்ட பாறை ஓவியங்களை அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

காலம், ஓவியக் கலையை வெவ்வேறு சிகரங்களுக்கு உயர்த்தி விட்டிருக்கிறது. கலை நுட்பங்கள், வடிவங்கள், புதிய பரிசோதனைகள் என்ற நீண்ட பயணம் அக்கலையை ஈர்க்கத்தக்கதாக உருமாற்றி உள்ளது. மாற்றங்களை உள்வாங்கி அவற்றைத் தன் மயமாக்கிக் கொண்டவர்களே காலத்தை வென்ற கலைஞர்களாகத் திகழ்கின்றனர்.

மரபான ஓவியத்தோடு மட்டும் தேங்கி நின்று விட்டவரல்ல ஓவியர் மருது. கோட்டோவியம், உள்ளடக்கத்தை மையமாகக் கொண்ட நுண்கலை **(Abstract Art)** கணனி வரைகலை **(Computer Graphics)** எனப் பல்வேறு கூறுகளையும் கற்றறிந்து, அதன் வழியாகத் தனது ஓவியத்தை நவீனமாக்கிக் கொண்டார் அவர். அதிலும் பல்லூடக வெளிப்பாட்டில் **(Multimedia)** வித்தகராகவும் திகழ்கிறார். ஏனெனில், "பல்லூடகம் என்பதே ஒரு தனித்துவமான மொழி" **(Multimedia itself is a language")** என்பது அவரது நிலைப்பாடு. அதனால்தான் உலக அளவிலான சிறந்த படைப்புகள் பலவற்றில் இவரது ஓவியங்களும் இடம்பெற்றுள்ளன.

இப்படித் தனது கலைக் கிடங்கில் பல்வேறு அம்புகளை அணியமாக வைத்துள்ளவர் ஓவியர் மருது. தனது கலையை நவீனமயமாக்கிக் கொண்டவர்கள் இவரைப் போல பலர் இருக்கின்றனர். ஆனால் அவர்களிடமிருந்து வேறுபடும் ஒரு புள்ளி அவரிடம் உள்ளது. அந்தக் குறிப்பான கூறு என்ன? அதுதான் பிடிவாதமாகத் தனது மரபைக் கைவிட மறுக்கும் கலை வைராக்கியம். மரபையும் நவீனத்துவத்தையும் சரிவிகிதத்தில் கலந்து தமிழ் அடையாளத்தைத் தன் படைப்பில் அடர்த்தியாக வெளிப்படுத்துவது ஓவியர் மருதுவின் தனித்தன்மை. அவரது அனைத்து ஓவியங்களிலும் இந்தச் சுவட்டினை எளிதாக நீங்கள் அடையாளம் காண முடியும்.

தவிரவும், உருவத்தைப் போலவே உள்ளடக்கத்திலும் கூடுதல் கவனம் செலுத்தக் கூடியவர் அவர். அரசியலைச் சுமக்கும் கூலியாளாகக் கலையை மாற்றி விடாதீர்கள் எனச் சில புனிதவாதிகள் கூக்குரல் எழுப்பக் கூடும். ஆனால் இந்தச் சலசலப்பு உண்மையான மக்கள் படைப்பாளிகளிடம் எடுபடாது. ஏனெனில் கருத்திற்கும் கலை நுட்பத்திற்கும் இடையேயான இயங்கியல் உறவை அவர்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.

கலைநேர்த்திக்கு ஊனம் விளைவிக்காமலும், தான் முன்னிறுத்த விழையும் அரசியலை விட்டு விலகி விடாமலும் இருக்கக் கூடிய படைப்பு ஒழுக்கம், இந்தத் தூரிகைப் போராளியிடம் மேலோங்கி நிற்கிறது.

தனது சொந்த வாழ்வு அல்லது சமூகத்தின் வாழ்வு போன்றவற்றில் ஏற்படும் ஒரு நிகழ்வு, ஒரு படைப்பாளியின் கச்சாப் பொருளாக ***(Raw material)*** அமைகிறது. செம்மைப் படுத்தப்படாத இந்த அனுபவத்தை ஆழ்மனதில் தேக்கி, ஒரு தவம் போல அதைச் சிறிது சிறிதாகச் செழுமைப்படுத்தி, அழகானதோர் படைப்பாக வெளிப்படுத்துவதுதான் படைப்புச் செயற்பாடு எனப்படுவது. இதில் வேதனை இருந்தாலும், மகழ்ச்சியும் கூடவே இருக்கிறது.

"பட்டுப்புழு,பட்டை உருவாக்குவது போன்ற செயற்பாடுதான் கலைப்படைப் பாக்கம்" எனப் பேரோசான் மார்க்ஸ் இதைத்தான் குறிப்பிடுகிறார். சிப்பியிலிருந்து முத்து உருவாவதும், சேற்றிலிருந்து நெல் விளைவதும் கூட இப்படிப்பட்ட செயற்பாடுகள்தான் எனக் கூற முடியும். கடந்து சென்று விடக் கூடிய ஓர் அனுபவத்தை நிரந்தர அனுபவமாக மாற்றுகிறது கலை. தனி மனித அனுபவமாக இருந்தாலும், அதைச் சமூகச் சொத்தாக விரிவாக்குகிறது கலை.






- கண. குறுஞ்சி -

ஆனால் இந்தப் பரிணாமத்தை அடைய ஓர் அறிதுயில் **(Hybernation)** தேவைப்படுகிறது. பிறகு இடம், பொருள், காலம் அறிந்து அது பாய்ச்சலுடன் பீறிட்டு வெளியே வருகிறது. அத்தகையதோர் காத்திருப்புக்குப் பிறகு வந்திருக்கும் ஓவியத் தொகுப்புத்தான் மருதுவின் " மாவீர நடுகற்கள்" எனும் கலை ஆவணம். இதைத் தனது முன்னுரையில் ஓவியர் மருதுவே தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

"மாவீரர்களின் உயிர்க்கொடையும், முள்ளிவாய்க்கால் துயரமும் கடந்த 10 ஆண்டுகளில் ஏற்படுத்திய அழுத்தத்தின் வெளிப்பாடே இந்த ஓவியங்கள்" என்பது அவரது வாக்குமூலம். 114 பக்கங்களில் 91 ஓவியங்களைத் தாங்கி வந்துள்ள இந்நூல் அச்சு நேர்த்தியோடும், கலை வடிவோடும் நமது கரங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் அவலம், ஓவியர் மருது அவர்களின் தனித்துவமான கோட்டோவியப் பாணியில் இந்நூலில் பரிணமிக்கின்றன." கோட்டோவியம், ஓர் ஓவியத்தின் முதுகெலும்பு போன்றது" என்பது அவரது நிலைப்பாடு. முள்ளிவாய்க்காலின் அவலத்தைச் சித்தரிப்பதன் ஊடாகப் போர் எதிர்ப்பு ஓவியங்களாகவும் இவை திகழ்கின்றன. ஓவிய வரலாற்றில் இதற்கு நிறைய முன் உதாரணங்கள் உள்ளன.

போர் எதிர்ப்பு ஓவியங்களில் மிகவும் பரவலாகப் பேசப்பட்டது பிக்காசோவின் "குவேர்னிகா" ஓவியம். **(GUERNICA - 1937 )** பாசிச இத்தாலி மற்றும் நாஜி ஜெர்மனி ஆகியவற்றின் இராணுவம், ஸ்பெயின் நாட்டின் குவெர்னிகா கிராமத்தின் மீது நடத்திய கொலை வெறித் தாக்குதலில் அப்பாவிப் பொது மக்கள் - குறிப்பாக பெண்களும், குழந்தைகளும் - எண்ணற்றோர் படுகொலை செய்யப்பட்டனர். பிக்காசோவின் காலத்தில் குவெர்னிகாவுக்கு ஏற்பட்ட கொடிய நாசத்தை எதிர்த்து அவர் வரைந்த ஒரே வரலாற்றுக் குறியீட்டு ஓவியம் அது.

போரின் கொடூரத்தை இந்த ஓவியம், மனதைக் குலுக்கும் வண்ணம் வெளிப்படுத்துவதால், ஐ.நா.வின் பாதுகாப்பு கவுன்சிலில் இது தொங்கவிடப்பட்டது. ஆனால் ஈராக் போரின் பொழுது இந்த ஓவியத்தைக் காணச் சகிக்காமல், அமெரிக்க வல்லரசு அதை மூடி வைக்க உத்தரவிட்டது வரலாறு.

ஸ்பானிய ஓவியர் பிரான்சிஸ்கோ கோயாவின் " மே மூன்றாம் நாள்" **(The Third of May - 1808)** எனும் ஓவியம், சிறந்ததோர் போர் எதிர்ப்பு ஓவியமாக இன்றும் கருதப்படுகிறது. நெப்போலியனின் படைகள் ஸ்பெயின் மக்களைக் கொன்று குவித்ததை இந்த ஓவியம் சித்தரிக்கிறது. இதைப் போல சர்வதேச அரங்கில் பல்வேறு போர் எதிர்ப்பு ஓவியங்கள் காணக்கிடக்கின்றன.

ஈழத்தில் நடைபெற்ற இனப்படுகொலையை 27 ஒற்றை வண்ண ஓவியமாகவும், 64 பல் வண்ண ஓவியமாகவும் மருது நம் முன் படைக்கிறார். இதில் போரில் மக்கள் படும் துயரம், மகளிரின் அவலம், காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களின் கையறு நிலை, போரைத் தடுக்க முனையாமல் ஆண்ட, ஆளும் கட்சிகளின் திசை திருப்பல், ஒருவர் மற்றொருவர் மீது குற்றஞ்சாட்டிக் கொண்டே மக்களை ஏமாற்றியது, மாவீரர்கள் மகளிருக்குத் தந்த முன்னுரிமை மற்றும் பாதுகாப்பு, மாவீர நடுகற்களின் பெருமை, இடப்பெயர்வின் சோகம் எனப் பல்வேறு பரிமாணத்தில் போரின் கொடூரத்தை மருதுவின் ஓவியங்கள் துலக்கமாக வெளிப்படுத்துகின்றன.

இந்த ஓவியங்கள், செவ்வியல் மரபையும், நாட்டுப்புற மரபையும் சரிவிகிதத்தில் கரைத்து கொண்டு சமாதானத்தின் இன்றியமையாமையைப் பார்வையாளர்களின் மனதில் ஆழமாகப் பதிவு செய்கின்றன. நவீன ஓவியமாக இருந்தாலும், மரபின் வேர்களை இழக்காமலிருக்கத் தொன்மங்களையும் தனது படைப்பில் இணைத்தே நெய்துள்ளார் ஓவியர் மருது. "எனது ஸ்கெட்ச் புத்தகங்களில் நிரம்பி இருக்கும் சித்திரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சித்திரக் கோவையே இப்புத்தகம் " என்பது அவரது விளக்கம்.

சமகாலத்தின் ஆவணமாகத் திகழும் இப்படைப்பு, ஒரு மாற்றுக் காட்சிக் கலாச்சாரத்தை நம்முள் விதைக்கிறது. எங்கெல்லாம் போரின் அவலங்களாலும், இனப்படுகொலையின் கொடூரத்தாலும் மானுடம் துன்பத்தில் உழல்கிறதோ, அங்கெல்லாம் மருதுவின் ஓவியங்கள், ஒரு படைக்கலனாகப் பயன்படும். தமிழர்களுக்கோ அவரது படைப்புகள், மரப்பொந்திடை பொதித்து வைத்த அக்னிக் குஞ்சாகக் கனன்று கொண்டிருக்கும்.

நன்றி இணையம்



தர்மதாஸ்

# இலங்கை இனத்துவ முரண்பாட்டு அரசியலில் கேலிச்சித்திரங்கள்

**பகுதி IX**

இவ் ஓவியர் யாழ்ப்பாணத்து இடப்பெயர்வால் ஈர்க்கப்பட்டு தனது ஆழ்மன உணர்வில் பதிந்தவற்றை ஓவியமாக ஒரு தாயின் பிரசவ வேதனையை மேற்கத்தேய சாயலில் படைத்துள்ளார். இங்கு மக்களுடைய அவலத்தினை, துன்பத்தினை வெளிப்பத்தியுள்ள போதும் எமது இனத்தின் அடையாளம், பண்பு அடியுண்டு போனது ஓர் பலவீனமே. இங்கு ஓவியருடைய மனவெழுச்சி முக்கியமானது.

**ஓவியர் ரமணி**

சமகால ஓவியர்களிடையே தனித்துவத்துடன் வேறுபட்டு நிற்பவர். ஓவியத்தில் அதிக பரீட்சயமில்லாதவர்கள் கூட இவரது ஓவியங்களை இலகுவில் புரிந்து கொள்ளக் கூடும் பாரம்பரிய ஓவியப்பயிற்சியும் நவீன ஈடுபாடும் ஒரு ஜனரஞ்சகப் போக்கில் மனித மனங்களை வென்று நிற்கிறது. மரபு வழி ஓவியக் கருப்பொருளாக இருந்தாலும் முற்றிலும் வித்தியாசமான புதிய பாணியிலான முறையில் வரைவது இவரது சிறப்பியல்பின் ஆதார சுருதியாகும். ரமணியினுடைய ஓவியங்களில் ரேகைகளே முதன்மைக் கூறுகளாக காணப்படுகின்றன். கோடுகளின் சுதந்திரமான சரளமான பயணத்தில் ஓர் ஒத்திசைவான லயத்தோடும் மற்றும் துண்டுபட்ட கோடுகளும் அவற்றிற்கிடையேயான வெளியுகமாக அதிர்வியக்கத்தோடு வெளிப்படுவது கோட்டோவியத்தில் இவருடைய மேதமை எவரையும் ஈர்க்கக் கூடியது. இவருடைய கோடுகள் சலனிக்கக் கூடியவை. இச்சலனம் தான் கோடுகளின் சுதந்திர ஜீவிதம். கோடு ஒரு தனித்துவமிக்க கலை மொழியாக இவரிடம் வெளிப்படுகிறது.

போர் சார்பான படைப்புகள் என்னும் வகையில் இவர் பங்களிப்பு அதிகம் அது அட்டைப் படங்களாகவும், சுவரொட்டிகளாகவும், போர்கால சிற்பங்களாகவும் இவரது படைப்புக்கள் விரிவடைகிறது.

இவரது போர் சார்பான ஓவியங்களில் “இடப் பெயர்வை” சித்தரிக்கும் அட்டைப்பட ஓவியம் சிறப்பானது தமிழர் வரலாற்றிலேயே என்றும் நிகழாத மனிதப் பேரவலமாக இந்த இடப் பெயர்வு நிகழ்ந்தது. சிங்கள ஆக்கிரமிப்பாளர்களால் தமது உயிருக்கு நிகழப் போகும் ஆபத்தை உணந்து ஒட்டுமொத்த சனத்தொகையும் கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு வீதிகளில் இறங்கினார். இந்த அவல நிகழ்வின் உணர்வு, அழுத்தம், அவலம் என்பவற்றை ஓவியர் தனது தூரிகையில் பதிவாக்கியுள்ளார். இவரது தூரிகை வீச்சும், நிறப்பயன்பாடும் விலக்கத்தக்கவை மேலும் இவரது ஓவியத்தில் இனத்துவ அடையாளங்களை வெளிப்படுத்துவதில் ஏனைய ஓவியர்களிலிருந்து வேறுபடுகின்றார். இது இவரது தனித்துவமான கையாள் கையாகவுள்ளது.

மேலும் ஓவியரின் கைவண்ணத்தில் நவாலி தேவாலய படுகொலை பதிவையும் காணலாம். ஏகாதிபத்திய சிங்களக் கொலை வெறியர்களின் விமானக் குண்டு வீச்சில் அப்பாவிப் பொதுமக்கள் உடல் சிதறிப் பலியான பதிவை ஓவியர் “போரே, நீ போ” எனும் அட்டைப்பட ஓவியமாக சித்தரித்துள்ளார்.இங்கு குண்டு வீச்சின் கொடூரம், மக்களின் அவல ஓலம் வானைப் பிளக்கும் தொனியை உணர்வின் மூலம் காட்டியிருப்பது சிறப்பு.

மேலும் ஓவியனை ஏனையவர்களிடமிருந்து வித்தியாசப் படுத்துவது ரேகைகளின் அசைவே. இது வேகம், வீச்சு என்பவற்றுடன் ஓவியத்தின் ஜடத்தன்மையை உடைத்து ஒரு நகர்வை ஏற்படுத்தும்.

மனித இருப்புக்கான மாறுபட்ட சாத்தியப்பாடுகளை கற்பனையில் தன் படைப்புலகம் சார்ந்த உள்ளார்ந்த பயணத்தின் மூலம் ஓவியரின் போராட்ட ஓவியப் படைப்புகள் கோட்டோவியங்களாக, போஸ்ரர்களாக, புத்தக அட்டைகளாக எண்ணற்ற ஓவியங்கள் எம் கண் முன் விரிந்து கிடக்கிறது. “ஓவியத்தின் சிறப்பியல்பு அதன் எளிமையிலேயே தங்கியுள்ளதெனக் கூறும் இவர் வர்ணச் சேர்க்கையில் எந்தவிதமான கட்டுப்பாடுகளுக்கும் உட்படாது பொருத்தமான வர்ணச் சேர்க்கையே ஓவியத்திற்கு இன்றியமையாதது” என்கிறார். பிற ஓவியங்களுடைய செல்வாக்கிற்கு உட்படாத தனக்கேயுரிய பாணியை வகுத்துள்ளார். மரபுடன் கூடிய அருவ வெளிப்பாடுகளில் வண்ணங்களின் ஒத்திசைவில் கூடிவரும். இசைமையை வசப்படுத்தும் படைப்பாக்கங்களில் முனைப்புடன் ஈடுபடும் இவருக்கு உருவ வெளிப்பாட்டுத் திறன் உள்ளார்ந்த பலமாக துணை நிற்பதாகவே தோன்றுகிறது.
மேலும் இத்தகைய படைப்பாக்கங்களும் ஈழத்தின் ஆத்மார்த்தமான பதிவுகளை அகப்படுத்துவதுடன் அதன் இன அடையாளங்கள், மரபுகள் கூடிய புனைவுகளாகவே படைப்பு இவரிடம் உருவாகிறது.

**ஓவியர் கைலாசநாதன்**

“சமர்” “அலை” சஞ்சிகைகள் மூலமும் “திசை” பத்திரிகை மூலமும் பரவலாக அறிமுகம் பெற்ற கைலாசநாதன் புதிய தலைமுறை ஓவியர்களில் வித்தியாசமானவர். ஓவியம் பற்றிய விழிப்புணர்வுடன் செயற்பட்டு வரும்



இவரின் படைப்புகள் சமகாலத்தவரின் ஓவிய ஆக்கங்களிலிருந்து பெரிதும் வேறுபட்டு தனித்துவமுடையவனாக காணப்படுகின்றன. வெளிகளில் எங்கள் இருப்பு நழுவிப் போய்விடுகிறது. ஒரு பெரும் துயரம் எம்முள்ளும், வெளி முழுவதும் வியாபகம் கொள்கிறது. இந்த வெளி - இது தானா கைலாசநாதன் காட்டும் வெளி? சொல்லத் தெரியாத ஒரு துயரத்தை அல்லது புதினத்தை, புதிரை கைலாசநாதன் வெளிக்குள் புதைத்து விடுகின்றாரா? சாதனத்தின் ஒரு பகுதியை மட்டும் வடிவங்களால் நிரப்பிவிட்டு மிகுதியை வெளியாக விடும் போது அந்த வெற்றிடத்தின் அர்த்தம் தான் என்ன? என்றவாறான பல கேள்விகள் இவரது ஓவியத்தில் எழாமலில்லை. எனினும் வெளி பற்றிய பிரக்ஞை அவரிடமிருப்பது தற்செயலான ஒன்றல்ல. ●



## மழையின் பாடல்

கடவுள்கள், சுவர்க்கத்திலிருந்து தொங்கவிட்ட
வெள்ளிச் சரடு நான்.
தனது தோட்டங்களையும், பள்ளத்தாக்குகளையும்
அழகு படுத்துவதற்காக
இயற்கை என்னை ஏற்றுக்கொண்டது.

இஸ்தாரின் மணிமுடியிலிருந்து
விடியலின் புதல்வி.
தோட்டங்களை அழகு படுத்துவ்தற்காகப்
பறித்து வீசிய அழகு முத்தங்கள் நான்.

நான் சிரிக்கும் போது மலைகள் அழும்,
நான் அடங்கியிருக்கும் போது மலர்கள் மகிழும்,
நான் தலை வணங்கும் போது எல்லாமே உயரும்.

நிலமும் மேகமும் காதலர்கள்,
அவர்களுக்கிடையில் நான் கருணைத் தூதுவன்.
அவர்களில் ஒருவரின் தாகத்தைத் தீர்க்கிறேன்,
முற்றவரின் வேதனையைப் போக்குகிறேன்.

இடியின் குரல் என் வரவுக்குக் கட்டியம் கூறுகிறது,
நான் புறப்பட்டு விட்டதை
வானவில் முன்கூட்டிச் சொல்லிவிடுகிறது.

பைத்தியக்காரப் பஞ்ச பூதங்களின்
காலடியில் பிறந்து
மரணத்தின் விரித்த சிறகுகளின் கீழ் மடியும்
பூமி வாழ்வு போன்றது என் வாழ்வு.

நான் கடலின் இதயத்திலிருந்து தோன்றி
தென்றலுடன் மேலெழுந்து பறந்தேன்.

தாகித்து நிற்கும் நிலம் கண்டால்
நான் இறங்கி வருவேன்,
மலர்களைத் தழுவிக் கொள்வேன்,
மரங்களை இலட்சக்கணக்கான
விதங்களில் அரவணைத்துக் கொள்வேன்.

சாளரங்களை என் மெத்தென்ற
விரல்களால் மெல்லத் தொடுவேன்.
என் அறிவிப்பே ஒரு வரவேற்புப் பாடல்தான்.
எல்லோரும் என் பாடலைக் கேட்க முடியும்.
ஆனால் உணர்வு மிக்கவர்களால் மட்டுமே
அதை உணர்ந்துகொள்ள முடியும்.

காற்றின் வெப்பம்தான் என்னைப் பெற்றது.
ஆனால், நான் அதைக் கொன்று விட்டேன்,
ஒரு பெண், ஆடவனிடத்திலிருந்தே
வலிமை பெற்று அவனையே வெல்வது போல.

நான் கடலின் பெருமூச்சு
நிலத்தின் சிரிப்பு
வானத்தின் கண்ணீர்.

இதே போல்தான் நான் அன்பிலும் –
ஆழமான பாசக்கடலின் பெருமூச்சு.
உயிரின் வண்ண வயலின் சிரிப்பு,
எல்லையற்ற ஞாபக வானத்தின் கண்ணீர்.

கலீல் ஜிப்ரான்
தமிழில் கவிஞர் புவியரசு

## ஜெருசலேம் யாத்திரை – 20
## பயண அனுபவங்கள்

– ஏ.ஜே.ஞானேந்திரன்


# கிறிஸ்மஸ் கால யாத்திரை


பொதுவாகவே நத்தார் பெருநாள் என்பது எந்த மதபேதமுமின்றி எவரும் மகிழ்ச்சியோடு கொண்டாடும் ஒரு பெருநாளாக மாறிவிட்டது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் இந்தப் பெருநாள் காலத்தில், அனேகமானோர் வீடுகளில் ஜோடித்து, ஒளியூட்டப்பட்ட மரங்கள் வரவேற்பறைகளில் நாட்டப்பட்டிருப்பதைக் காணலாம். சிறுவயது தொடக்கம் எனக்கும் இந்தப் பெருநாளில் நிறைய மோகம் இருக்கின்றது. இந்தப் பயணமும் கிறிஸ்மஸ் காலத்திலேயே இடம்பெற்றது . டிசம்பர் 25 நள்ளிரவு பூசைப் பலிக்காக 50 வருடங்களுக்கு மேலாக ஊர்த் தேவாலயங்களுக்கும், இலண்டன், சுவிஸ், குவெத் தேவாலயங்களுக்கும் சென்றிருந்த எனக்கு பெத்லகேம் நகரத் தேவாலயத்திற்குச் செல்லலாம் என்ற நிஜம் பெரு மகிழ்வைத் தந்தது. அநேக மக்களுக்கு கிறிஸ்மஸ் ஏராளமான பொருட்களை அர்த்தப்படுத்துகிறது. வெகுமதிகள், கிறிஸ்மஸ் தாத்தா, புத்தாடை போன்றவற்றை இந்நாள் பலருக்கு ஞாபகப்படுத்துகின்றன. இருப்பினும், இந்நாட்களில் மக்கள் கிறிஸ்மஸ் எதைக் குறிக்கிறது என்பதைக் குறித்தும், அதை அவர்கள் ஏன் கொண்டாடுகின்றனர் என்பதைக் குறித்தும் வெகு அரிதாகவே சிந்திக்கின்றனர். அப்படி அவர்கள் அதைப் பற்றி சிந்தித்தாலும்கூட, அதை இயேசு கிறிஸ்துவின் பிறந்த நாளாகவும், குடும்பம் ஒன்றுசேரும் நேரமாகவும், ஏராளமான வெகுமதிகள் கைமாறும் சமயமாகவும் பொதுவாக நினைக்கின்றனர். கிறிஸ்மஸ் தினம் இயேசுவின் பிறந்தநாள் அல்ல என்பது மட்டுமல்லாமல், முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் அதைக் கொண்டாடவேயில்லை. டிசம்பர் 17-ல் ஆரம்பித்து டிசம்பர் 25-ல் முடிவடைந்த பண்டைய ரோம பண்டிகையாகிய சாட்டர்நேலியா, 'தோற்கடிக்கப்படமுடியாத சூரியனின் பிறந்தநாளில்' அது அதன் ஆரம்பத்தைக் கொண்டிருந்தது. நான்காம் நூற்றாண்டில் ரோம அதிகாரி ஒருவர் இயேசுவின் பிறந்தநாளை டிசம்பர் 25-ல் கொண்டாடத் தீர்மானித்தார், ரோமர்களின் பண்டிகையை பரிசுத்தப்படுத்துவதற்காக ஒருவேளை அப்படிச் செய்திருக்கலாம்.இந்தப் பண்டிகை ஒவ்வொரு வருடமும் வியாபார உலகிற்கு மிக அதிகமாகத் தீனிபோட்டுக் கொண்டே வருகிறது. மேற்கத்திய நாடுகளைப் போல், கிறிஸ்மஸ் காலம் உற்பத்தியாளர்களுக்கும், மொத்த விற்பனையாளர்களுக்கும், வணிகர்களுக்கும் கொள்ளை லாபம் சம்பாதிப்பதற்குரிய மிகச் சிறந்த காலமாக ஆகிவிட்டிருக்கிறது. கிறிஸ்து பிறந்த ஆண்டு சரியாக தெரியவில்லை என்பதால், கி.மு., 7க்கும் கி.மு., 2க்கும் இடைப்பட்ட காலத்தில் அவர் பிறந்திருக்கலாம் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். யூதர்களின் நாட்காட்டி மூலம் கணக்கிட்டு, யூகத்தின் அடிப்படையில் டிச.25 கிறிஸ்துமஸ் கொண்டாடப்படுவதாக சிலர் தெரிவிக்கின்றனர். கிறிஸ்துமஸ் பண்டிகையை முதலில் 4வது நூற்றாண்டை சேர்ந்த மேற்கத்திய கிறிஸ்தவர்கள் கொண்டாடியதாக வரலாற்று குறிப்புகள் உள்ளன. ஆனால் வேறு சிலர் ஜன.6ல் இயேசு பிறந்ததாகவும் கொண்டாடினர். ஆனால், தற்போது டிச.25ல் கிறிஸ்துமஸ் உலகம் முழுவதும் சிறப்பான நாளாக கொண்டாடப்பட்டு வருகின்றது.



### பெத்லகேம் தேவாலயம்...

கிபி 399 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட இக்கோவில் தீயில் அழிந்ததை அடுத்து 6ம் நூற்றாண்டில் மீளக் கட்டப்பட்டது. இது கிறித்தவர்களின் புனித இடமாக உள்ளது. யெருசலேமில் இருந்து பெத்லகேம் வரையான பயணப்பாதையில் ஒரு சிறிய பகுதியூடாக மேரியும், யோசெப்பும் கிறிஸ்மஸ் நாட்களில் ஊர்வலமாகச் செல்வர் என்று கூறப்படுகிறது.இயேசு கிறிஸ்து பிறந்த இடத்தின் அருகாமையில் மிகப்பழமையான ஒரு தேவாலயம் அமைந்துள்ளது. 'நேட்டிவிட்டி சர்ச்' என்றழைக்கப்படும் இந்த தேவாலயத்தை தரிசிக்கவும், இங்கு பிரார்த்தனை செய்யவும் ஆண்டுதோறும் உலகம் முழுவதிலும் இருந்து லட்சக்கணக்கான மக்கள் வந்து செல்கின்றனர். இதை நேரில் கண்டோம். உலக நாடுகள் எலலாமே திரண்டு வந்து பெத்லகேம் தேவாலயத்தில் சங்கமித்து விட்டதோ என்ற பிரம்மையே எம்முள் ஏற்பட்டது. குறிப்பாக, கிறிஸ்துமஸ் தினத்தன்று இங்கு நடைபெறும் பிரார்த்தனை கூட்டம் மிக சிறப்பான நிகழ்வாக கருதப்படுகிறது.கிறிஸ்மஸ் தினத்திற்கு முதல் நாளன்று, காலை இந்தத் தேவாலயம் இருந்த பகுதிக்கு வந்தோம். நடந்து சென்று அழகிய இந்தத் தேவாலயத்தை நேரில் சுற்றிப் பார்த்தபோது, என் கண்களை என்னால் நம்பமுடியவிலை. பிரசித்தமான மதத்தோடு ஒன்றித்த ஒன்றை காலங்காலமாக மனதுள் உருவகப்படுத்திக் கொண்டு இருந்துவிட்டு, அதையே நேரில் பார்க்கும்போது எப்படியான உணர்வுக்கு உட்படுவோம் என்பது வெறும் வார்த்தைகளால் விபரிக்க முடியாதது. "அட அதுவா இது" என்ற மலைப்பே மனதுள் மேலிடுகின்றது. பாரிஸ் நகரக் கோபுரம், நியூயோர்க் நகர சுதந்திர சிலை, கனடாவின் நயாகரா நீர்வீழ்ச்சி, சுவிஸ் நாட்டின் ஐ.நா.அலுவலகம்... என்று பலவற்றை வாழ்வில் நேரில் பார்த்து வியந்தமை போல, மதத்தோடு இணைந்த இந்தத் தோவாலயம், என்னைப் பெரிதாகப் பரவசப்படுத்தியது. இரண்டாவது தடவையாக இரவு பத்து மணியளவில் எல்லோரும் அளவு கடந்த உற்சாகத்துடன், (டிசம்பர் 24 அன்று) பெத்லஹேமில் உள்ள பெரிய தேவாலயத்தைக் நோக்கி பயணமானோம்.. இயேசுவின் பெற்றோர்கள் நாசரேத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும் இயேசு பிறந்தது பெத்லஹேம் நகரில்தான்!. அங்கு அவர் ஒரு மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார் என்று சொல்வார்கள். அவர் பிறந்ததாகக் கூறப்படும் இடத்தில் ஒரு வெள்ளி நட்சத்திரம் நட்டு வைக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு குகை போன்ற பகுதியில் அமைக்கப்பட்டிருக்கிறது. கி.பி. 160-இல் இந்த இடம் இயேசு பிறந்த இடமாக அடையாளம் பெற்றது. ஆனால் 326-இல் தான் ரோமானிய அரசன் கான்ஸ்ட்டாண்டின் இங்கு ஒரு கோயில் கட்டும்படி ஆணையிட்டான். கி.பி.530-இல் இது மறுபடி புதுப்பிக்கப்பட்டது. பின்னால் 10-ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவ சிலுவைப் போராளிகள் **(Crusaders)** அதை மேலும் அழகுபடுத்தினார்கள். அதன் பிறகு இது பல முறை அழகுபடுத்தப்பட்டது. இப்போது பெரிய தேவாலயமாகக் காட்சியளிக்கிறது. பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட பிரமாண்டமான தூண்களோடும் சாண்டிலியர் விளக்குகள் பொருத்தப்பட்ட கூரைகளோடும் மிக அழகாக காட்சியளிக்கிறது. பெத்லஹேம் ஊரின் மையப் பகுதியில் மேஞ்சர் ஸ்கொயர் **(Manger Square)** என்னும் இடத்தில் இது அமைக்கப்பட்டிருக்கிறது. இத் தேவாலயத்தின் வித்தியாசமான நுழைவாயில் பற்றி உங்களுக்குச் சொல்லியே தீரவேண்டும். நீள்சதுர வடிவில் அமைந்துள்ள இந்தச் சிறிய நுழைவாயிலை **Door of Humility** என்று ஆங்கிலத்தில் அழைக்கிறார்கள். ஒட்டோமன் ஆட்சிக்காலத்தில் நிறுவப்பட்டது பெரிய வண்டிகளில் திருடர் கும்பல் உள்ளே நுழைவதைத் தடுக்கவே இத்தனை சிறிய நுழைவாயிலை அமைத்திருந்தார்கள். முக்கியமான எவர் வந்தாலும், குதிரையிலிருந்து இறங்கியே தீரவேண்டும். நாம் குனிந்தபடிதான், உள்ளே சென்றோம்.





பெத்லஹேம் நகரம் ஜெருசலேம் போன்று பலர் ஆட்சியின் கீழ் இருந்திருக்கிறது. இது கிறிஸ்தவர்களுக்குரிய புண்ணிய ஸ்தலம் என்பதால் இதில் வசிப்பவர்களில் பெரும்பாலானோர் கிறிஸ்தவர்களாக இருந்தார்கள். இப்போது இஸ்ரேலிலிருந்து பல பாலஸ்தீன அகதிகள் வந்திருப்பதால் முஸ்லீம்களின் எண்ணிக்கை கிறிஸ்தவர்களை விட அதிகமாக இருக்கிறது. பிறப்பிடத் தேவாலயம் **(Church of the Nativity)** உலகிலுள்ள பழைமையானதும் தொடர்ந்து செயற்பாட்டிலுள்ளதுமான தேவாலயங்களில் ஒன்றாகும். பாலஸ்தீன ஆட்சிப் பகுதியில் உள்ள பெத்லேகேமில் அமைந்துள்ள இத்தேவாலயம் இயேசு பிறந்த இடமாகக் கருதப்படும் தளத்தில் குகையின் மேல் கட்டப்பட்டுள்ளது. யுனெஸ்கோ நிறுவனத்தின் உலகப் பாரம்பரியக் களக் குழு 2012ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் நாள் கூட்டத்தில், 36ஆம் அமர்வின்போது இயேசு பிறந்த இடக் கோவில் உலகப் பாரம்பரியக் களம் என்று அறிவித்தது. ரோமப் பேரரசரான காண்ஸ்டண்டைன் மன்னரின் தாய் ஹெலன் அரசி இயேசு பிறந்த இடத்தில் ஒரு கோவில் கட்டி எழுப்ப ஏற்பாடு செய்தார். அவ்வாறே 327-333 ஆண்டு காலத்தில் முதல் கோவில் கட்டப்பட்டது.அக்கோவில் 529இல் நிகழ்ந்த சமாரியர் கலகத்தின்போது அழிந்தது. அதே இடத்தில் பெரிய அளவில் புதிய கோவில் ஒன்றினை முதலாம் ஜஸ்டீனியன் பேரரசர் 565இல் கட்டி எழுப்பினார். அக்கோவில் இன்றுவரை நிலைத்துள்ளது.

இந்த யாத்திரை வாழ்வில் மறக்க முடியாத ஒன்றாக அமைந்து விட்டதே உண்மை. கடந்த காலங்களில் பல உலக நாடுகளுக்குப் பயணஞ் செய்திருந்தாலும், இந்தப் பயணத்தில் ஒரு தனித்துவம் இருந்தது. பெரு வியப்பூட்டிய பல சரித்திரத் தகவல்களை நேரில் காண முடிந்தது. மேலும் பலவற்றை அறிய வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டியது பல நூறு பக்கங்களை வாசிக்க வைத்தது. படித்தவற்றை, பார்த்தவற்றை உங்களுடன் பகிர்ந்து கொண்டது பரவசமூட்டுகின்றது.....

*-நிறைந்தது-*

*இன்னொரு பயணமுடிவில் சந்திப்போம்...*



# எழுதும் பெண்களும் எழுதப்படும் பெண்களும் - 8

அ.ராமசாமி

ஒரு விடுமுறையில் அத்தையின் வீட்டிற்குப் போனபோது அத்தையின் கணவன் - மாமாவின் பேச்சும் உடலும் ஏற்படுத்திய உணர்த்துதல்கள் அவை

அந்தப் பயணம் அவளுக்குப் பிடித்திருந்தது. நகர்கிற மரங்கள் காற்றின் உல்லாசம் மலைகளின் நீலச்சாய்வு. எல்லாமும் புத்தம் புதிது.

அம்மா வற்புறுத்தி உடுத்திவிட்ட கரும்பச்சைப் பாவாடையில் அனுவின் வளர்த்தியை மாமாவும் வியந்தார். பார்த்த கணத்திலிருந்தே மாமாவிடம் இருந்து தன்பால் எதுவோ பாய்வதை உணர்ந்து அவள் கூசினாள். 'எந்த கிளாஸ் நீ? எய்த்தா, நைன்த்தா?' என்று கேட்டுவிட்டு பதிலைக் காதில் வாங்காமல் கழுத்துக் கீழே தேங்கிய மாமாவின் பார்வையில் அது நெளிந்தது. ' எப்படி மாறிட்டே? மூக்கொழுகிக்கிட்டு, சின்ன கவுன் போட்டிருந்த குட்டிப் பொண்ணா நீ?' என்று அவள் இடுப்பைத் திமிறத் திமிற இழுத்துக் கொஞ்சியபோது மூச்சின் அனலில் அது ஊர்ந்தது. 'சட்டை இந்த இடத்தில் இறுக்குதா?' கேட்டு தொட்டுத் தொட்டு மேலும் கீழும் அழுத்தித் தேடிய உள்ளங்கையில் இருந்து அது நசநசவென்று பரவியது. மாமாவின் கைகளில் இருந்து தன்னை உருவிக்கொண்டு ஓடினாள் அனு.

கொட்டும் முத்தங்கள் - கன்னத்தில், உதட்டில், கழுத்தில், அவளுள் தளிர் விடுகிற அல்லது விதையே ஊன்றாத எதையோ தேடுகிற விரல்களின் தடவல், மாறாக அதை நசுக்கிச் சிதைக்கிறது. சிறிய மார்பகங்கள் கசக்கப்பட்டப்போது அவள் கதறிவிட்டாள். வார்த்தைகளற்ற அந்த அலறலில் அத்தைக்கு விழிப்புத் தட்டியது. காய்ந்த கீற்றுப் படுக்கைமீது அனுவின் உடல் சாய்க்கப்பட்ட போது அவள் நினைவின்மையின் பாதாளத்துள் சரிந்தாள். கனமாக அவள் மேல் அழுத்தும் மாமாவின் உடல். அத்தை ஓடிவரவும் மாமா அவசரமாக விலகினார். அத்தையின் உலுக்கல் 'அனு, என்ன அனு!' அவளிடம் பேச்சு மூச்சில்லை. 'பாத்ரூம் போக வந்தப்ப விழுந்துட்டா போல.' மாமாவின் சமாளிப்பு. அத்தை மௌனமாக அவளை அணைத்துத் தூக்கிப் படுக்கையில் கிடத்துகிறாள்.

தொடர்ந்து அத்தையின் வீட்டில் இருந்து மாமாவினால் தடவப்படும் உடலாக - அத்துமீறப்படும் உடலாக இருந்துவிடக்கூடாது என்று உடலே சொல்லிக் காய்ச்சலை வரவழைத்துக் கொள்கிறது. குடும்ப உறவுகளால் அத்துமீறப்படும் பெண் உடலின் வேதிவினையைக் கவனமாக எழுதிக் காட்டும் உமா மகேஸ்வரி அதற்கான மருத்துவம் அவளது கற்பனை உலகில் - மரப்பாச்சி மூலம் உருவாக்கிக் கொண்ட கற்பனை வெளியில் இருப்பதாகக் காட்டியிருக்கிறார். அத்தை வீட்டிலிருந்து காய்ச்சலோடு திரும்பிய அந்தச் சிறுபெண் மரப்பாச்சியையே தேடுகிறாள்

அனுவின் கண்களில் நீர் கோர்த்தது. அழுகையோடு படுக்கையில் சரிந்தபோது மரப்பாச்சி சன்னலில் நின்றது. ஆனால் அது அனுவைப் பார்க்கவேயில்லை. அவளையன்றி எங்கேயோ, எல்லாவற்றிலுமோ அதன் பார்வை சிதறிக் கிடந்தது. அனுவின் தொடுகையைத் தவிர்க்க அது மூலையில் ஒண்டியிருந்தது. அதனோடான நெருக்கத்தை இனி ஒரு போதும் மீட்க முடியாதென்று அவள் மனம் கேவியது. உற்றுப் பார்த்தபோது மரப்பாச்சியின் இடை வளைந்து, உடல் மறுபடியும் பெண் தன்மையுற்றிருந்தது. மீண்டும் முளைக்கத் தொடங்கியிருந்த அதன் முலைகளை அனு வெறுப்போடு பார்த்தாள். எனக் கதையை முடித்திருக்கிறார்.

உயிரியல் இவ்வுலகின் உயிரிகளை ஆணென்றும் பெண்ணென்றும் வகைப்படுத்திக் காட்டப் பெரிதும் பயன்படுத்துவது அவற்றின் உடல் அடையாளங்களே. ஆணுறுப்போடும் பெண்ணுறுப்போடும் பிறப்பதின் வழியாக வேறுபடும் உடல்களில் ஆண்மையை உணர்தலும் பெண்மையை உணர்தலும் நிகழும் காலகட்டம் முக்கியமான காலகட்டம். வயதுக்கு வருதல் என்ற சொற்களால் குறிப்பிடப்படும் அந்தக் காலகட்டத்தில் பெண்ணுடலில் ஏற்படும் பருண்மையான மாற்றம் முலை முளைத்தல். அதுபோன்றதொரு பருண்மையான உடல் மாற்றம் ஆணுக்கு இல்லை. இதனாலேயே பெண்ணுடலின் மீதான ஈர்ப்பை ஆணுடல் அவாவுகிறது என்று கூடச் சொல்லலாம் இதை ஒருவித உயிரியல் நடவடிக்கையாக மட்டும் கணித்துப் பேசுவது உடலியல் மருத்துவம். ஆனால் அந்தப் பதின் பருவத்தில் மனவியல் மாற்றங்களும் தன் உடலின் புதிர்களையும் ரகசியங்களையும் தானே கண்டுபிடித்துவிடும் எத்தணிப்புகளும் ஆணுக்கும் இருக்கின்றது பெண்ணுக்கும் இருக்கின்றது. கண்டுபிடிப்பதோடு எதிர்பாலினருக்குக் காட்டிவிடும் எத்தணிப்புகளும் நடக்கின்றன என்கிறது உளவியல் மருத்துவம்.

உடலியல் மருத்துவமும் உளவியல் மருத்துவமும் அவற்றை அணுகும் முறைமைகளிலிருந்து இலக்கியப் பனுவலாக்கம் வேறுபடுகிறது. தனிமனிதர்கள் உருவாக்கிக் கொள்ளும் அந்தரங்க வெளிக்குள் சமூகத்தின் - உறவுகளின் நுழைவு திசைமாற்றத்தை ஏற்படுத்திவிடக்கூடும் எனக் கரிசனம் கொள்கின்றன. உமாமகேஸ்வரியின் இவ்விரு சிறுகதைகளும் அத்தகைய விரிவான அலசல்களுக்குள் நுழையும் நோக்கம் கொண்டன அல்ல. இக்கதைகளின் நோக்கம் உடலில் ஏற்படும் மாற்றத்தை உணரும் பெண்ணின் இருவேறு கட்டங்களைச் சொல்வது மட்டுமே. எழுதத் தொடங்கிய காலகட்டத்தில் எழுதிய மரப்பாச்சி(2002) தோன்றுதலின் - முலை முளைத்தலின் கிளர்ச்சியைச் சொல்கிறது. 14 ஆண்டுகளுக்குப் பின் வந்த குளவி அதன் இழப்பைப் பேசுகிறது. பெண் உடலின் மாற்றங்களை அதன் நுட்பங்களோடும் உடலைப் பேசும் பெண்ணியச் சொல்லாடல்களின் விவாதங்களைக் கதைக்குள் கொண்டுவராமல் அனுபவங்களின் வெளிப்பாடாகக் கதையாக்கிய உமா மகேஸ்வரிக்குப் பெண்ணிய எழுத்துப் பரப்பில் முக்கியமான இடமுண்டு.

---

# தாயுமானவன்!

அவன் முழு வளர்ச்சியடையாத சிசுவாக பிறந்திருந்தான். அவன் என் மகன். பிஞ்சுக் கால்கள் நோஞ்சானாக இருந்தன. முற்றாத மெல்லிய எலும்புகள் தோலால் போர்த்தப்பட்டிருந்தன. அசைக்கவும் தெம்பில்லாத தேகம்.பாலுக்காக செவ்விதழ்கள் விரிய அழுது கொண்டிருந்தான். சத்தம் வரவில்லை.

**Yes! he is a premature baby.** அவன் போதிய வளர்ச்சி அடையாத குழந்தைகளுடன் இருந்தான். ஜீவ மரணப் போராட்டம்.

மனைவியைத் தேடினேன். "இது தன் பிள்ளையே இல்லை" என்று வெறி கொண்ட மட்டும் உதறிவிட்டுப் போயிருந்தாள்.

"குழந்தையை என்ன செய்வது? யாருக்காவது கொடுத்து விடவா ?" என்று தலைமை மருத்துவர் வினாக்களுடன் என் கண்களுக்குள் ஊடுருவினார்.

"இல்லை இந்த எலும்புகளும், தோலும் என் உயிரணுக்களின் பிரதிகள். எனக்கு இவன் வேண்டும்" என்றேன்.

"சற்றே சவாலான பணிதான். சாதித்துத் தான் பாருங்களேன்" சாதாரண பிள்ளைகளைப் போல் வளர்க்கும் பணியில்லை.

கங்காரு தன் குட்டியை சுமப்பது போது என் மார்புடன் பிணைத்து விட்டார்கள். மூக்கிலும் கை கால்களிலும் ஏதேதோ குழாய்கள், பெயர் சொன்னார்கள், புரியவில்லை. இனி வரும் நாட்கள் சுமந்து வந்த கேள்விகளுக்கும் விடையில்லை.

கழிவறைக்கும் போகவே முடியாத நிலை. எப்படி தொழில் செய்வது? என்னோடு அவனையும் பராமரிக்க வேண்டியிருந்தது. உலகம் சிக்கலாய் தோன்றியது.

நகரத்தின் ஓர் எல்லையில் ஒரு எரிபொருள் நிரப்பும் நிலையத்தை ஒட்டியிருந்த, சக்கரங்களுக்கு காற்று நிரப்பும் என் கடையை விற்று விடுவதென தீர்மானித்தேன். பணத்தை வைப்பிலிட்டு செலவுகளை சமாளித்தேன். வைத்தியர் என்ற நிலை கடந்து தோள் தந்ததெல்லாம் அவர் மட்டுமே.

என் சேமிப்பு கரைய என் மகன் செழித்துக் கொண்டிருந்தான். இப்போது கொஞ்சம் தெம்பாக அழச் செய்கிறான்.





லேசாக அசைகிறான். போத்தலில் பாலருந்துகிறான். மூன்று மாதங்களின் பின் வீடு திரும்பினேன். வீடென்றால் பலகைகளால் உருவாக்கப்பட்ட ஒரு அறை அவ்வளவே.

யாரோ தெரியாத ஒரு செவிலித் தாயிடம் மகனை கொடுக்க பிடிக்கவில்லை. இருபத்து நாலு மணியும் அவனை என் கண்களுள் காக்க எண்ணினேன்.

விநியோகஸ்தரிடமிருந்து பக்கத்து தெருவிலுள்ள வீடுகளுக்கு தண்ணீர் போத்தல் சுமந்து செல்லும் பணி. குழந்தைக்கும் எனக்கும் சாப்பாடென்று ஏதோ வேண்டுமே.. வயிற்றில் குழந்தையை பிணைத்த படி பணி செய்தேன். இரவில் பக்கத்து கடைகளிற்காக காகிதப் பை ஒட்டிக் கொடுத்தேன்.

நாட்கள் நகர்ந்தன.அவன் வளர்ந்திருந்தான்."அம்மா" என்று என்னை தான் அழைத்தான்.

என் அணைப்பினில் ஆசுவாசப்பட்டான்.

என் விரல் பற்றி நடக்க ஆசைப்பட்டான். வளர்ந்தும் வளராத என் தாடியின் மயிர்க் கணுக்களில் தன் கன்னத்தை பதித்து சுகம் கண்டான்.

மனைவி திரும்பி வந்தாள். தன் தவறை உணர்ந்து, நொந்து மன்னிப்பு கேட்டாள். இவனைத் தன் பிள்ளை என ஏற்றுக் கொண்டாள். என் மகனின் தாயை மன்னித்தேன். என் குடும்பத்தில் இன்னொரு நபராய் அவள் இணைந்தாள். ஏற்றுக் கொண்டோம்.

மனைவியிடம் அணைய மகன் தயங்கினான். சிணுங்கினான். ஒரு வருடத்தின் முன் அவன் செவி மடுத்த அவளின் இதயத் துடிப்பின் மொழி அந்த தயக்கங்களை மறைய வைத்தது.

வாழ்க்கை வண்ணங்களை பூசிக் கொண்டது.


தெரிந்த ஒரு வாகனம் திருத்தும் கடையில் தொழில் தேடிக் கொண்டேன். மனைவி-மகன்-நான் என வாழ்க்கை இப்போது இன்னுமின்னும் அழகாய் இருக்கிறது.

**He was born premature** என்ற ஆக்கத்தின் மொழி பெயர்ப்பு...

மொழி பெயர்ப்பு
மஹ் ஜபீன்

# நீரின் எதிர்காலம்... கானல் நீராகுமா?

**றாசிக் நபாயிஸ்,**
**(BA, MA)**
**சமூகப்பணியாளர்,**
**மருதமுனை.**



இலங்கையில் சமகாலத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் கால நிலை மாற்றத்தினால் குறிப்பாக அதிகரித்து வரும் வெப்பநிலை அதிகரிப்பினால் மழை வீழ்ச்சி குறைந்து நீர் பற்றாக்குறையாகி பல பகுதிகள் வறட்சி நிலைக்கு உள்ளாகியுள்ளது. இதனால் குடி நீர் பிரச்சினை மாத்திரமன்றி விவசாய செய்கைக்குரிய போதிய நீரின்மை யாலும் இலங்கையில் பிரச்சினைக்கு மேல் பிரச்சினைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நீருக்கான உரிமை மனித உரிமைக ளுடன் பிரிக்க முடியாத ஒன்றாவதுடன் மனிதர்கள் அனைவரும் நீருக்கான உரி மையைக் கொண்டுள்ளனர். இந்த உரிமை சர்வதேச சட்டங்களிலும் அங்கீகரிக்கப்பட் டுள்ளது. நீரின் உரிமையை பெறுகின்ற போது ஏனைய உரிமைகளை இலகுவாக பெற முடியும். மனிதனின் எதிர்காலம் அனைத்தும் நீரின் தேவையிலேயே தங்கியுள்ளது. என்பதால் நீரின் எதிர்காலம் எவ்வளவு முக்கியமாவதுடன் மனிதன் உயிர் வாழ்வதற்கான நீரின் அத்தியாவசி யத்தை உணர வைக்கிறது. யாவரும் நீருக்கான உரிமையை பூர்த்தி செய்யும் பொறுப்புடையவர்கள்.

"வானின்று உலகம் வழங்கி வருதலால் தான் அமிழ்தம் என்று உணரற் பாற்று" அதாவது மழை இடையறாது பெய்தலால் உயிர்கள் வாழ்கின்றன. ஆகையால் மழை உலகத்திற்கு அமிர்தம் என்று கருதப்படுகி றது. என்ற பொய்யா மொழிப்புலவர் வள்ளு வரின் கூற்று நீரின் அவசியத்தை வலியு றுத்துகிறது. இதிலிருந்து முக்கியமான நிலப் பிரச்சினைகளுக்கு காரணம் போதுமான நீர் கிடைக்காமையே ஆகும். மோசமான சூழ்நிலைகளில் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவில் போதுமான நீர் கிடைக்காமல் இருக்கலாம். இவ்வாறான சமயங்களில் உயிர் வாழ்வதற்கு தேவை யான பாதுகாப்பான நீரை வழங்குவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது

**எவ்விதமான நீராயிருந்தாலும் சுத்திகரித்துப் பாவனைக்குப் பொருத்தமான நிலைக்கு மாற்றிக்கொள்ள முடியும் என்பது ஒரு உண்மை. எனினும் மாசுபட்ட நீரைச் சுத்திகரிப்பது பாரிய செலவாகும் என்பதை அறிய முடிகிறது. நீர் எந்த அளவிற்கு மாசுபட்டிருக்கின்றதோ அந்த அளவிற்கு சுத்திகரிப்புச் செலவினங்களும் அதிகரிக்கும். நீரின் எதிர்காலம் கருதி நீர் மாசுபடுத்தப்படாமல் பாதுகாப்பதன் மூலம் எமது பிள்ளைகள் மற்றும் எதிர் கால சந்ததியினரைப் பாதுகாக்கவும் சுகாதாரத்துடனும். சுகதேகிகளாகவும் வைத்திருக்க முடியும்.**

"ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்றார் முதுபெரும் புலவர் ஔவைப் பிராட்டியார். நீர். காற்று மற்றும் உணவின்றி எவரேனும் சீவிக்க முடியாது ஒருவரால் காற்றின்றி 3 நிமிடமும் நீரின்றி 3 நாட்களும் உண வின்றி 3`வாரங்களும் சீவிக்க முடியும். காற்று இது வரை போதுமானதாக உள்ளது. நீர் அதிகமாக இருந்தாலும் சுத்தமான நீர் வசதிகள் இப்போதைக்கே பற்றாக் குறையாகவே உள்ளது. உணவுக்காக எத்தனையோ மாற்று வழிகள் இருப்பினும் நீருக்குப் பகரமாக எதுவுமில்லை. நீரினால் எத்தனையோ பிரயோசனங்கள் இருப்பதுடன். மனிதப் பாவனை அவற்றுள் முதலிடம் வகிக்கிறது. சுத்தமான நீரைப் பாவிப்பதன் மூலம் நோய்களின்றி நாம் வாழ்வதுடன் தரப்படுத்தப்படுவதுடன். நமது ஆயுளும் நீடிக்கும். எல்லா நாடுகளும் சுத்தமான அல்லது பிரயோசனமுள்ள நீரின் பற்றாக்குறை அல்லது நீர் மூலங்கள் மாசுபடுவதன் காரணமாக பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது. மாசுபட்ட நீர் இருப்பது நீர் இல்லாததற்குச் சமமான ஒரு நிலையாகும். எனவே எல்லா நாடுகளும் நீரைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவும் மாசுபட்ட நீரைக் குடி நீராகப் பாவிக்கத் தகுந்தவாறு சுத்தப்படுத்திக் கொள்ளவும் இயன்ற எல்லா முயற்சிகளையும் எடுத்து வருவதால் நீரின் எதிர்காலம் பற்றி சிந்தித்து செயலாற்ற வேண்டியுள்ளது. இலங்கையிலும் குடிப்பதற்கு மாத்திரம் தகுந்த நீரை வழங்குவதற்காக வருடாந்தம் ரூபாய் 2,000 கோடி ஐத் தாண்டிய பணத்தை செலவிடுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இலங்கையில் சுத்தமான குடி நீரை வழங்கும், தேசிய நீர் வழங்கல் வடிகால மைப்பு சபையாகுவதுடன் அதனால் இப்போதைக்கு சனத்தொகையில் 43.4வீதத்துக்கு குழாய் நீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு புறம்பாக உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் நுகர்வோர் சங்கங்கள் மூலம் தொழில்படும் கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள், கைப்பம்பி ஆகியன மூலமாக சனத்தொகையில் இன்னும் 25வீதத்துக்கு நீரை வழங்கிக் கொண்டிருக்கிறது. அதன்படி நாட்டின் சனத்தொகையில் 65வீதத்துக்கு சுகாதாரமான நீர் வழங்கப்படுகிறது.

குடிக்கத் தகுந்த நீரை வழங்குவது ஒரு பாரிய செலவுள்ள கருமமாவதால்

மூலதனச் செலவு அதிகம் தேவைப்படுகின்றது. இவ்வாறு நீர் வழங்கலுக்காக பாரிய அளவிலான பணம் தேவைப்படுவதனால் நீர் வழங்கலை விரிவாக்கும் வேலைகள் மிகவும் மந்தமான நிலைலேயே நடை பெறுகிறது. எனினும் உற்பத்தி செய்யப்படும் நீரை வீண் விரயமாக்காமல் எதிர்பார்த்த தேவைகளுக்காக நீரின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டுசரியாக பாவிப்போமென்றால் மேலதிக முதலீடின்றி அதிகமான மக்களுக்கு நீரை வழங்கக் கூடியதாக இருக்கும்.

எவ்விதமான நீராயிருந்தாலும் சுத்திகரித்துப் பாவனைக்குப் பொருத்தமான நிலைக்கு மாற்றிக்கொள்ள முடியும் என்பது ஒரு உண்மை. எனினும் மாசுபட்ட நீரைச் சுத்திகரிப்பது பாரிய செலவாகும் என்பதை அறிய முடிகிறது. நீர் எந்த அளவிற்கு மாசுபட்டிருக்கின்றதோ அந்த அளவிற்கு சுத்திகரிப்புச் செலவினங்களும் அதிகரிக்கும். நீரின் எதிர்காலம் கருதி நீர் மாசுபடுத்தப்படாமல் பாதுகாப்பதன் மூலம் எமது பிள்ளைகள் மற்றும் எதிர் கால சந்ததியினரைப் பாதுகாக்கவும் சுகாதாரத்துடனும், சுகதேகிகளாகவும் வைத்திருக்க முடியும்.

அதே போல் நீரை மாசுபடுத்தாமல் பாதுகாப்பதன் மூலம் எமது சுற்றாடலையும் மற்றும் உயிர்கள் அழிவதையும் தவிர்துக் கொள்ளலாம். உயிரினங்களில், நீர் மாசுபடுத்தப்படுவதற்குக் காரணம் மனிதன் மாத்திரமே. அதன் பிரதி பலனை மனிதன் மட்டுமல்லாமல் ஏனைய உயிர்களுக்கும் அனுபவிக்க நேரிடும். இவ்வாறான நீரை நிகழ்கால, எதிர்கால தேவை கருதி பயன்படுத்தினால் வீடும், நாடும் செழிக்கும் என்பது யதார்த்தம்.

இலங்கையில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் உற்பத்தி செய்யப்படும் நீர் குழாய்களினால் வீடுகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது. இறுதியாக இது சமையலறை, குளியறை மற்றும் வீட்டுத் தோட்ட நடவடிக்கைகளுக் கும் செல்லும் நீரானது ஒரு சலுகையான கட்டணத்தில் வழங்கப்பகிறதை நாம் அறிந்திருக்க வேண்டும். சலுகை என்பதை பிழையாக விளங்கி விடாது நீரை வீண்விரயம் செய்வதிலிருந்து நாமும் நம்மை சூழ உள்ளவர்களும் புரிந்து நடந்து கொள்வோம். இதற்காக குறைபாடுடைய குழாய் பொருத்துதல், தரம் குறைந்த அல்லது தரமில்லாத உதிரிகள் பாவனை, தகுதியற்ற நபர்களினால் செய்யப்படும் தவறான குழாய் பொருத்துதல் நீரின் முக்கியத்துவம் மற்றும் அதற்காக மேற்கொள்ளப்படும்

செலவு பற்றிய அறியாமை என்பன நீர் வீண் விரயம் சம்பந்தப்பட்ட காரணிகள் என இலகுவாக இனங்காணக் கூடியதாக இருக்கிறது. அதே போல் இக்காரணிகளுக்காக பாதுகாப்பு முறைகள் ஏற்படுத்துவதன் மூலம் மேற்கூறப்பட்ட அநேகமான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதுடன் நீரின் எதிர்காலம் பற்றி விழிப்புடன் இருக்க வேண்டிய தேவை உணரப்பட்டுள்ளது. இதற்காகவே நீரின் முக்கியத்துவத்தை உணர்ந்து நகர் மற்றும் கிராமப் புறங்களில் மழைநீர் சேமிப்பு திட்டங்கள் ஆக்கபூர்வமான முறையில் முன்னெடுக்கப்படுகின்றன.

நீர் வளங்களைப் பாதுகாத்தல் பற்றி நடைபெற்ற ஓர் ஆய்வின்படி 35வீதத்திற்கு மேற்பட்ட நகரத்தின் நீர்த் தேவைகள் மழைநீர் சேகரிப்பினூடா நிறைவேற்ற முடியுமென அறிவிக்கப்படுவதுடன் மழை நீர் பாவிப்பினால் நீர் விலை பட்டியலலை 30வீதத்திற்கும் 60வீதத்திற்கும் இடைப்பட்ட அளவினால் குறைத்து கொள்ள முடியுமென ஆய்வுகள் கூறுகின்றன. இதிலிருந்து நீரின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு சேமிப்பின் அவசியத்தை அறிந்து கொள்ளலாம். மனிதனின் வாழ்க்கை நிலையை எடுத்து நோக்கும் போது ஒவ்வொருவருக்கும் தங்களின்

வளநிலைமைக்கேற்ப தங்களிடம் இருக்கும் வளங்களை உச்ச நிலையில் உபயோகிக்கின்றார்கள்.

இருந்தாலும் ஒரு மனிதனின் சாதாரண நாளந்த நீரின் உபயோகம் அது குடிப்பதற்கும் சமையலுக்கும் தனிப்பட்ட தூய்மைப் பராமரிப்பு எனினும் ஒருவருக்கு வீட்டில் நாளென்றுக்கு 15 லீட்டர் பயன்படுத்தப்படுகிறது. இவற்றில் உயிர்வாழ உள்ளெடுக்கப்படும் குடிநீர் அல்லது உணவுக்காக 2.5 லீட்டர் தொடக்கம் 03 லீட்டர் போதுமானது. இது தட்பவெட்ப நிலை தனிநபரின் உடலமைப்பு போன்றவற்றில் வேறுபட லாம். அது போன்று அடிப்படைத் தூ ய்மைப் பராமரிப்புக்கு 02 லீட்டர் தொடக்கம் 06 லீட்டர் தேவைப்படும் எனினும் சமூக நடைமுறைகள் மற்றும் பண்பாடு போன்றவற்றால் வேறுபடலாம். அடிப்படை சமையலுக்கான

தேவை 03 லீட்டர் தொடக்கம் 06 லீட்டர் எனின் சமூக நடைமுறைகள் மற்றும் உணவு வகைப் பண்பாடுகள் போன்றவற்றில் வேறுபடலாம். இதன் மூலம் சாதாரண ஒரு மனிதனின் நாளாந்த நீரின் அளவு 7.5 லீட்டர் தொடக்கம் 15 லீட்டர் தேவைப்படுகிறது இவ்வாறு நீரின் தேவை நாளாந்தம் அதிகரித்த வண்ணமே இருக்கிறது அனர்த்தங்களின் போது பாதிக்கப்படும் மக்களின் சுகாதார நிலைமை தீர்மானிக்கும் பிரதான சாதனமாகவும் நீர் விளங்குகிறது. எனினும் உலகில் மூன்றாவது மகா யுத்தம் ஒன்று நிகழுமா யின் அது நீருக்காகன ஒரு யுத்தமே என சமூக ஆய்வாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளின் கருத்தாக இருக்கிறது. ஆகவே நீரை சிக்கனமாகவும் நாளைய சந்ததிக்காகவும் பாவித்து இப் பெறுமதியான வளத்தை எல்லோரும் அனுபவிக்கும் ஒன்றாக மாற்ற அணிதிரண்டு நீரின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு செயற்படுதல் காலத்தின் கட்டாயமாகும்.

## தமிழ் சினிமா

### திரைப்பட விமர்சனம்





லக்ஷ்மி ராமகிருஸ்னன்

தமிழ் சினிமாவில் பெண் இயக்குனர்கள் மிக மிகக் குறைவு. இன்றைய காலகட்டத்தில் தொடர்ந்து தன்னுடைய நான்காவது படத்தை ஒரு பெண் இயக்குனர் இயக்கியிருக்கிறார் என்றால் அது சாதாரண விடயமல்ல.

ஒரு நான்கு கதாபாத்திரங்களை மட்டும் வைத்துக் கொண்டு ஒரு வீட்டுக்குள்ளேயே அதிகமான காட்சிகள் நகர்ந்தாலும் அதில் ஒரு உயிரோட்டம், ஒரு உணர்வு, ஒரு காதல் இப்படி அனைத்தையும் மிக இயல்பாகக் கொண்டு வந்திருக்கிறார் இயக்குனர் லட்சுமி. இதற்கு முன் அவர் இயக்கிய ஆரோகணம், நெருங்கி வா முத்தமிடாதே, அம்மணி ஆகிய படங்களைவிட இந்தப் படம் அவருடைய இயக்கத் திறமைக்கு மிகச் சரியான படமாக அமையும்.

வீட்டிற்குள் வெள்ளம் கொஞ்சம் கொஞ்சமாக நுழைகிறது. அதிலிருந்து அந்த வயதான தம்பதி தப்பித்தார்களா? இல்லையா? என்பதுதான் படத்தின் கிளைமாக்ஸ்.

அதாவது சென்னை பெரு வெள்ளத்தின் முந்தின இரு நாட்களில் மழை வானத்தை பொத்துக்கொண்டு பெய்திருக்க அடைப்பட வீட்டினுள் அல்சைமர் வியாதியினால் பாதிக்கப்பட்டு 20 ஆண்டு நினைவுகளை இழந்து தவிக்கும் கணவனை பார்த்துக் கொள்ளும் மனைவியின் கதை. மனையியைக்கூட் அடையாளம் தெரியாத கணவன், அளவிளாத அபரிதமான காதல் கொண்ட மனைவி, நினைவில் தன் இளம் மனைவியோடு வாழும் கணவன் இவர்கள் இருவருக்குள் நடக்கும் காதல் சம்பவங்கள் மழை அவர்களுக்கு தரும் பிரச்சினைகள் அதை அவர்கள் எதிர்கொள்ளும் விதம் இது தான் கதை. லட்சுமி ராமகிருஷ்ணன் இயக்கத்தில், 'பொல்லாதவன்' கிஷோர், 'பசங்க' கிஷோர், சிவரஞ்சனி, லவ்லின் சந்திரசேகர் ஆகியோரது நடிப்பில் வெளியாகியிருக்கிறது ஹவுஸ் ஓனர் திரைப்படம்.

ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியான கிஷோரும், அவரது மனைவி சிவரஞ்சனியும் ஒரு வீட்டில் வசித்து வருகிறார்கள். கிஷோரின் கனவு இல்லமான அந்த வீடு அவருக்கு ரொம்பவே



பிடித்தனமான வீடு, என்பதால் அவரை அவரது குடும்பத்தார் செல்லமாக 'ஹவுஸ் ஓனர்' என்று அழைத்தனர். அல்சைமர் என்ற ஞாபகமறதி நோயால் அவதிப்படும் கிஷோர், தனது மனைவியையே மறந்து போகும் அளவுக்கு பாதிக்கப்படுகிறார். அனைத்து நினைவுகளையும்



மறந்தாலும், தனது இளமை கால நினைவுகளை மட்டும் அவ்வப்போது நினைத்துக் கொள்ளும் கிஷோர், முதுமையில் மனைவியை மறந்து போனாலும், இளமையில் அவரை அன்போடும், அக்கறையோடும் கவனித்துக் கொண்டதை நினைத்துக் கொள்கிறார்.

இனிமையான இளமைக்கால நினைவுகளோடு மட்டும் வாழும் கிஷோர், முதுமைக் காலத்தில் மற்றவர்களுக்கு ஆத்திரமூட்டும் வகையில் அனைத்தையும் மறந்து வாழ்ந்தாலும், அவரை அவரது மனைவி சிவரஞ்சனி குழந்தையைப் போல கவனித்துக்கொள்கிறார். இதற்கிடையே, திடீரென்று பெய்யும் பெரும் மழையால் சென்னையே வெள்ளக்காடாக மாற, மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி பயணிக்கிறார்கள். ஆனால், கிஷோரின் உடல் நிலையால் அந்த வீட்டை விட்டு வெளியேற முடியாமல் சிவரஞ்சனியும், கிஷோரும் வெள்ளத்தில் சிக்கிக்கொள்ள அதன் பிறகு என்ன நடக்கிறது என்பது தான் 'ஹவுஸ் ஓனர்' படத்தின் மீதிக்கதை.

2015 ஆம் ஆண்டு சென்னையில் ஏற்பட்ட மழை வெள்ளத்தில் நடந்த ஒரு சம்பவத்தை மையமாக வைத்துக் கொண்டு இயக்குநர் லட்சுமி ராமகிருஷ்ணன், கணவன், மனைவியின் பந்தத்தை ரொம்ப அழகாக காட்டியிருக்கிறார்.

சின்ன சின்ன விசயங்களுக்கெல்லாம் விவாகரத்து கேட்டு நீதிமன்றத்தில் நிற்கும் தம்பதியர், இப்படத்தை பார்த்தால், வாழ்க்கை என்றால் என்ன?, கணவன், மனைவி என்றால் யார்?, என்பதை தெரிந்து கொள்வதோடு, "வாழ்ந்தால் இவர்களைப் போலவே வாழனும்" என்றும் நினைக்க வைக்கும் அளவுக்கு கணவன், மனைவி பந்தத்தை எளிமையாகவும், அழுத்தமாகவும் காட்டியிருக்கும் இயக்குநரைப் பாராட்டலாம்.

அல்சைமர் நோயால் பாதிக்கப்பட்டவராக கிஷோர் முதியவர் வேடத்தில் சிறப்பாகவே நடித்திருக்கிறார். ஞாபகமறதியால் அருகில் இருப்பவரை யாரென்றே தெரியாத கிஷோர், இருட்டை பார்த்தால் பயப்படுவது, திடீரென்று கோபப்படுவது, இளைமைக்கால நினைவுகளால் சந்தோஷப்படுவது என்று தனது வேலையை சரியாக செய்திருந்தாலும், அவரை விட பல மடங்கு சிறப்பான நடிப்பை சிவரஞ்சனி வெளிப்படுத்தியிருக்கிறார்.

மனைவியையே 'யார்?' என்று கேட்கும் கணவரை குழந்தைப் போல பார்த்துக் கொள்ளும் சிவரஞ்சனி, எதார்த்தமான நடிப்பை வெளிப்படுத்தியிருப்பதோடு, எந்த இடத்திலும் நடிப்பதையே காட்டிக்கொள்ளாமல், ஏதோ நிஜமான கதாபாத்திரமாகவே நம் கண்ணுக்கு தெரிகிறார்.

இளமைக்கால கிரோவாக 'பசங்க' கிஷோரும், சிவரஞ்சனியாக லவ்லினும் நடித்திருக்கிறார்கள். உறுத்தாத தம்பதியரின் காதலை நம் கண் முன் நிறுத்தும் இந்த இளமை ஜோடியும் ரசிக்க வைக்கிறது.

இதற்கு முன்பு லட்சுமி ராமகிருஷ்ணன் இயக்கிய படங்கள் எப்படியோ, இந்த படத்தின் மூலம், தான் தமிழ் சினிமாவின் கவனிக்கப்பட வேண்டிய இயக்குநர் என்பதை அழுத்தமாக பதிவு செய்திருக்கிறார். நடிகர்கள் தேர்வு, அவர்களிடம் நடிப்பு வாங்கிய விதம், தொழில்நுட்பத்தை பயன்படுத்திய விதம், காட்சிகள் வடிவமைப்பு, என்று அனைத்தையும் நேர்த்தியாக கையாண்டிருப்பவர், குறிப்பிட்ட சில கதாபாத்திரங்களை வைத்துக்கொண்டே படம் பார்ப்பவர்களை எளிதில் கதைக்குள் இழுத்துவிடுகிறார்.

ஜிப்ரானின் பின்னணி இசையும், கிருஷ்ணா சேகரின் ஒளிப்பதிவும், உடலும், உயிருமாக கதையுடன் சேர்ந்து பயணித்திருக்கிறது. படத்தில் இரண்டு காலகட்டங்களைக் காட்டினாலும், அனைத்துக் காட்சிகளிலும் மழையும் ஒரு கதாபாத்திரமாக வலம் வருவது ரசிக்க வைக்கிறது. பிரேமின் கச்சிதமான படத்தொகுப்பும், தபஸ் நாயக்கின் ஒலி வடிமைப்பும் படத்திற்கு கூடுதல் பலம் சேர்த்திருக்கிறது. இறுதிக் காட்சியின் போது பெய்யும் பெரும் மழையில் நாமும் சிக்கிக்கொள்வது போன்ற ஒரு உணர்வை படம் ஏற்படுத்துகிறது. அந்த அளவுக்கு தொழில்நுட்பத்தை இயக்குநர் லட்சுமி ராமகிருஷ்ணன் கச்சிதமாக கையாண்டிருக்கிறார்.

பாலக்காடு ஐயர் பாஷை பேசுவது ஆகியவை சற்று நெருடல்களாக இருந்தாலும், அவற்றை ரசிகர்கள் எளிதில் மறந்துபோகும் விதத்தில் கதாபாத்திரங்களின் நடிப்பும், தொழில்நுட்பமும் பலமாக இருக்கிறது. மொத்தத்தில், பிரம்மாண்டம் இல்லை என்றாலும், ரசிகர்களை பிரமிக்க வைக்கிறது இந்த 'ஹவுஸ் ஓனர்.

பார்வையாளன்

# அந்த ஒரு நிமிடம்...

**எஸ். கணபதி**

எல்லோரும் எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருக்க மாட்டார்கள். பெரும்பாலும் சூழ்நிலைகளும், சம்பவங்களும் மனிதர்களின் இருப்பை மாற்றும் சக்தியுடையன. அது கந்தையா அண்ணருக்கு மட்டும் விதிவிலக்கல்ல. அவரும் அண்மைக் காலங்களில் எவ்வளவு மாறிப்போய்விட்டார். முன்பிருந்த அந்த வேகத்தையும், வீச்சையும் அவரிடம் காண்பது அரிதென்று ஆட்கள் பேசிக்கொள்ளுகிறார்கள்.

கந்தையா அண்ணர் ஒரு தோட்டக்காரன். நடுத்தர வர்க்கத்தைப் பிரநிதிப்படுத்தக் கூடியவர். அவர் பொருளாதாரம் அப்படிப்பட்டது. பொழுது புலர்வதற்கு முன்னர் எழுந்து காலைக் கடனை கழிப்பது தொட்டுத் தொடரும் கோயில் வழிபாட்டுக்குப் பின்னர் வீடு சென்று ஒரு பால்தேநீர். பின்பு சென்று தோட்ட வேலை. பின்னர் வீடு. நண்பகல் ஓய்வு. மாலை திரும்பவும் தோட்டம். பின்னர் கோயில் மருதமரத்தடியிலிருந்து நண்பர்களுடன் பேச்சு. பின்னர் வீடு. வழிபாடு. உறக்கம் என்று வழமையான நேரசூசிகையோடு இயங்கும் அவருக்கு உறுதுணையாக மனைவி மக்கள். அமைதியான குடும்பம் என்று ஊரில் பெயர்பெற்ற குடும்பத்தின் தலைவர் அவர்.

ஒரு நாள் வெய்யில் நிறைந்த பகல் அது. வீட்டு முற்றத்தில் இருந்த படி அவர் அன்றையதினப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தார். குளிக்கப்போவதற்கு கிணற்றடி மிதியில் நிழல் விழும்வரை காத்திருந்தார். வாசலில் வந்து நின்றது ஒரு மோட்டார் சைக்கிள். அதிலிருந்து இறங்கியவர்கள் வாசல் கேற்றருகே நின்று கேற்றைத் திறப்பதற்குத் தடுமாறுகிறார்கள் என்றதை அவர் கேற்றின் இடுக்கினூடாகக் கண்டு கொண்டார். "என்ன? ஆரது?" உரக்கக் குரல் கொடுத்தார், கந்தையா. "அது நாங்கள். பாங்கிலை இருந்து வந்திருக்கிறம். இது கந்தையா அண்ணைவீடே?" அவர்களும் பதிலுக்குக் குரல்கொடுத்தனர்.


"ஓம்!" அவர் கேற்றருகே சென்று உட்பக்கம் பூட்டப்பட்டிருந்த பூட்டைத் திறந்தார். "வணக்கம்!" வந்தவர்களில் ஒருவன் கந்தையாவை நோக்கிக் கைகூப்பினான். மற்றவன் கந்தையாவைப் பார்த்துச் சிரித்தான். கண்வெட்டாது தங்களையே உற்றுப் பார்த்துக் கொண்டு மௌனமாக இருந்த கந்தையாவினது "கடுமையான" சுபாவத்தை அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும். கைகளில் தான் வைத்திருந்த தங்கள் லீசிங் கம்பெனியின் கலண்டரை கந்தையாவின் கைக்குள் திணித்தான், வணக்கம் சொன்னவன்.

"என்ன அலுவல்?" கந்தையாவின் மௌனம் கலைந்தது. "நாங்கள் லீசிங் கம்பெனியிலை இருந்து வாறம். முயற்சியுள்ள தோட்டக்காரரைச் சந்திச்சு ஏதேனும் அவையளுக்கு நாங்கள் உதவலாமோ? எண்டு பாத்துக் கொண்டு வந்தாப்போலை சந்திக் கடையிலைதான் உங்கடை பேரைச் சொல்லிச்சினம். அதுதான் வந்தனாங்கள்" என்றான் மற்றவன்.

"தம்பிமார், எனக்கு இப்ப நேரம் இல்லை" கேற்றைச் சாத்திக்கொள்ள முயன்ற கந்தையாவை "இல்லை கந்தையா அண்ணர், கன நேரம் இல்லை.ஒரு நிமிஷம் அவ்வளவுதான்" எனத் தனது பேச்சால் இடைநிறுத்தினான். பல கதைகள். பல பேச்சுகள்.

சில நிமிடங்களில் அவர்கள் கந்தையா வீட்டுக்கு முன்னுள்ள தாழ்வாரத்தின் கீழ் அமர்ந்திருந்தனர். கந்தையா எவர் சில்வர் கப்புகளில் தேநீரைப் பரிமாறிக் கொண்டிருந்தார். "ஐயா. இப்பிடி ஒரு பால் ரீயை நாங்கள் குடிச்சதில்லை." இருவரும் சேர்ந்து சொன்னார்கள். "அது எங்கடை மாட்டுப் பால் எல்லே!" கந்தையா பெருமிதமாகச் சொன்னார்.

கையில் கொண்டு வந்த மடிக் கணனியை திறந்து அப்பிடியும், இப்படியும், மேலும் கீழும் இயக்கி லான்ட் மாஸ்டரின் பொறிமுறையையும், பயன்பாட்டையும் காண்பித்தார்கள். அவருக்கு உகந்தது லான்மாஸ்டர் என்றவகையில் எவருக்கு மூளைச் சலவை செய்யப்பட்டது.



இடையே அவர் மனைவியையும் அழைத்து வந்து அதனைக் காண்பித்தார். மாட்டடியைக் கூட்டித் துப்பரவாக்க வந்த லட்சுமியும் ஒரு முறை வந்து கணனிக்குள் எட்டிப்பார்த்துவிட்டுச் சென்றாள்.

"அப்ப கந்தையா அண்ணர் எப்ப லான்ட் மாஸ்டரை வந்து பாக்கப்போறியள்?" வந்த லீசிங் கம்பெனிக்காரனில் ஒருவன் கேட்டான். "எடுக்கிறதிலை பிரச்சினை இல்லை. காசைக் கட்டி முடிக்கிறதுதான்... அது தான் நான் யோசிக்கிறன்" என இழுத்த கந்தையாவை அவன் இடைமறித்தான். "ஐயா நாங்கள் சொன்னபடி முதல் கட்டுற காசை ஒழுங்கு பண்ணினால்.. மற்றதை நாங்கள் பாகத்துக் கொள்ளுறம்." லான்ட் மாஸ்டர் எடுத்துத் தமது வாழ்வை வளப்படுத்தியவர்கள் என ஒரு பட்டியலையே அவர்கள் கந்தையாவுக்குக் காண்பித்தனர். "மச்சான் எங்கடை வெயிக்கிளிலை வந்து ஏத்திக் கொண்டு போய் மிஷினை ஐயாவுக்குக் காட்டுவம், என்ன?" கந்தையா லான்ட் மாஸ்டர் வாங்குவதை அவர்களே தீர்மானித்தனர்.

கந்தையாவும் மனைவியும் அவர்கள் காட்டிய இடங்களில் எல்லாம் கையொப்பமிட்டனர். "அங்கை ஒராளுக்கு உப்பிடி வந்து கையெழுத்தை வேண்டிப்போட்டு ஒரு ரீவியைக் கொண்டு வந்து குடுத்தவை. பிறகு நாலைஞ்சு மாதத்திலை வந்து அவை மறிக்க மறிக்க எடுத்துக் கொண்டு போட்டாங்கள்." என்று வேலைக்காரி லஷ்மி சொன்னாள். "எடி விசரி. காசு கட்டாட்டிச் சாமானை எடுத்துக் கொண்டு போவங்கள்தானே? வாங்கேக்கைஅவைக்கு என்ன யோசினை இருந்தது?" கந்தையா நியாயமாகக் கேட்டார்.

ஒரு வாரத்தில், கந்தையா வீட்டுக்கு முன்னால் லான்ட் மாஸ்டர் வந்து நின்றது. பலர் வந்து பார்த்துவிட்டுப் போனார்கள். "அவசரப்படாமல் ஒரு நல்ல நாளாப் பாத்துக் கொண்டு வந்திருக்கலாம்." என்றார் வந்தவர்களில் ஒருவர். "நாள் என்ன? நான் என்ன தேடிப்போனனானே? அதுவாத் தேடி வந்திது!" கைளைப் பின்னால் கட்டிக் கொண்டு வருகின்றவர்களுக்கெல்லாம் அதைப்பற்றிய விபரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார் கந்தையா. "இண்டைக்கு எப்பிடியும் நாவூறு சுத்திப் போட வேணும்." கையில் எலுமிச்சையையும், வேப்பமிலையையும் வைத்து ஒரு கட்டுக் கட்டி லான்ட் மாஸ்டரின் முன்பக்கமாகத் தொங்கவிட்டாள் கந்தையாவின் மனைவி.

"ஓடுறதுக்குத்தான் ஒரு நல்ல ஆளாப் பாக்க வேணும்" கந்தையா எண்ணிக் கொண்டார்.

ஒரு மாதம் கழித்து அந்த இருவருடனும் மனேஜர் என்று சொல்லிக் கொண்டு மூவர் காரில் வந்தனர். மனேஜர் கந்தையாவுக்கு தங்கள் கம்பெனி இலட்சினை அடித்த பெரிய குடை ஒன்றினைப் பரிசாகக் கொடுத்தான். பேப்பரில் சுற்றிவைத்திருந்த காசை எடுத்து முதல் மாதக் காசெனக் கந்தையா கொடுத்தார். "றிசீற்றைப் பிறகு தாறம்" அவர்கள் சென்றுவிட்டனர்.

### நேரம் காலை 10 மணி 32 நிமிடம் 44 செக்.

பல மாதம் கழித்து அன்று அவர்கள் வந்திருந்தனர். "அண்ணை முந்தி இருந்த மனேஜர் நல்ல ஆள். அவர் மாறி இப்ப வந்து இருக்கிறவன் ஒரு மனச்சாட்சி இல்லாதவன். நீங்கள் கட்ட வேண்டிய மூண்டு மாதக் காசு நிக்கிது. அதிலை ஒண்டைத் தன்னும் தாங்கோ போய் ஆளைச் சமாளிக்கலாம். இல்லாட்டி ஆளைவிட்டு லான்ட் மாஸ்டரைத் தூக்கச் சொல்லிக் கரைச்சல் படுத்திறான். எங்களாலையும் ஒண்டுஞ் செய்யேலாமைக் கிடக்கு." என்று முடிப்பதற்குள் " தம்பி போன முறையும் காப்பை அடைவு வைச்சுத்தான் கட்டின்னாங்கள். இந்த முறை போயிலைக் காசும் வரச் சுணங்கிது. இந்த ஒரு முறையும் பொறுங்கோ.அடுத்த தவணையிலை முழுவதையும் கட்டிப் போடலாம்" கந்தையா கையெடுத்துக் கும்பிடாத குறையாக அவனை மண்டாடினார். அவன் கேட்பதாக இல்லை. சென்றுவிட்டான்.

### நேரம் நண்பகல் 2 மணி 32 நிமி. 44 செக்.

ஒரு மோட்டார் சைக்கிள் வந்து கந்தையாவின் வீட்டுக் கேற்றடியில் நின்றது. பூப்போட்ட சட்டை டெனிம் காற்சட்டை போட்டிருந்த ஒருவனும் தாடி மீசை வளர்த்து வெள்ளிச் சங்கிலி போட்ட இன்னொருவனும் வந்திருந்தனர். கையில் கந்தையா லான்ட் மாஸ்டர் லீசிங் எடுத்த கம்பெனியின் கடிதம் இருந்தது. "ஐயா மிஷினை எடுத்துக் கொண்டு வரச் சொல்லிப் பெரியவர் சொல்லிப் போட்டார்." வந்தவர்களில் ஒருவன் கந்தையாவிடம் கடிதத்தை நீட்டினான். "தம்பிமார் அப்பிடிச் செய்து போடாதையுங்கோ. நாங்கள் ம்ரியாதை யோடை சீவிக்கிறனாங்கள். அயல் அட்டை சிரிக்கும்." கந்தையா வந்தவர்களில் ஒருவனின் கையைப் பிடித்தார். அவன் அவர் கையை உதறிவிட்டான். "அரை மணித்தியாலத்திலை என்னெண்டாலும் செய்யுங்கோ. மிஷினைக் கொண்டு போக வாகனம் வரும்" அவர்கள் விர் ரென்று போய்விட்டனர்.

### நேரம் மாலை 3 மணி 30நிமிடம் 14 செக்.

சிறியரக ஹன்ரர் வாகனம் ஒன்று கந்தையா வீட்டுக்கு கேற்றில் வந்து நின்றது. மதியம் வந்தவர்களில் ஒருவன் கேற்றால் எட்டிப் பார்த்தான். "அண்ணை எங்கை" அவன் கந்தையாவின் மனைவியிடம் கேட்டான். "வாறன் பொறுங்கோ" அவள் வீட்டுக்குள் போனாள். வீட்டின் அறைக் கதவு பூட்டி இருந்தது. தட்டினாள் அவள். "என்னப்பா ஆரோ வந்திருக்கினம்." அவள் பெலமாகச் சத்தமிட்டாள். "என்னப்பா! துறவுங்கோவன்..." அவள் பெலமாகக் கத்தினாள். "ஆள் ஒழிச்சிட்டார் போலை" வந்தவர்களில் ஒருவன் மற்றவனைப் பார்த்துச் சொன்னான். கந்தையாவின் மனைவி வீட்டுக்கு வேளியே வந்து கொல்லைப் புறமாக ஓடினாள். அறையின் மறுபக்கமிருக்கிற யன்னலினூடாக அவள் கண்ட காட்சி.....

### நேரம் மாலை 3 மணி 31நிமிடம் 14 செக்

"ஐயோ ...! ஐயோ..! "கந்தையாவின் மனைவி வாய் வலிக்கக் கத்தினாள். தலைமேல் பலமுறை அடித்துக் கொண்டாள். சுவரோடு தலையை மோதினாள்.

வந்தவர்கள் லான்ட் மாஸ்டரை ஹன்டரில் ஏற்றிக் கொண்டு நகரும் சத்தம் மெல்ல மெல்லக் காற்றில் கரைந்து கொண்டிருந்தது.

லீசிங் கம்பெனியினூடாகப் பொருட்களை வாங்கிப் பணத்தை மீளச் செலுத்தாது தற்கொலை செய்து கொண்ட பட்டியலில் கந்தையாவின் பெயரும் சேர்ந்து கொண்டது.

# விளையாட்டு உலகில்



– காவலூர் ஞானம் –

# அந்த ஓர் ஓட்டம்

நள்ளிரவு 12 மணியளவில், அந்த மோதலைப் பார்த்து முடித்தபோது, எதிர்பாராத திருப்பங்களுடன் கூடிய ஒரு விறுவிறுப்பான திரைப்படத்தை பார்த்து முடித்த உணர்வே மனதுள் மேலிட்டது. இந்தத் தடவை யாருக்கும் யார் சளைத்தவர் இல்லை என்பதுபோல, இடம்பெற்ற இறுதி மோதல், ரசிகர்களை பரபரப்பின் உச்சத்திற்கு கொண்டு சென்றிருக்கின்றது.



ஆறு வாரங்கள் தொடர்ந்த 47 மோதல்களின் முடிவில், இந்தியாவின் எதிர்பாராத "நொக் அவுட்"டுடன், இறுதி மோதல் லோர்ட்ஸ் மைதானத்தில் இடம்பெற்றிருந்தது. 2008. 2013ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்துடன் மோதிய போது வென்ற அணி நியூசிலாந்துதான்! ஆள் பாதி ஆடை பாதி என்ற கதையாக திறமை பாதி அதிஷ்டம் பாதி என்ற கணக்கில், இங்கிலாந்து முதற்தடவையாக, அதுவும் தன் மண்ணில் வைத்து உலக கிரிக்கெட் வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றி இருக்கின்றது." காட்ச்" பிடித்தும் பவுண்டரி எல்லையை மிதித்தபடி இருந்த காரணத்தால் அது சிக்ஸராக மாறியதும், நடுவர்கள் ஐந்து ஓடங்களை ஆறாக அறிவித்ததும் இங்கிலாந்தின் அதிஷ்ட தேவதை அரவணைப்புகள்! ஐந்தை ஆறாக்கியது பற்றி சர்ச்சைகள் தொடர்கின்றன. ஸ்டோக்ஸ் பந்தை அடித்து விட்டு இரண்டாவது ஓட்டத்தை எடுத்து முடிக்க மூச்சு வாங்க ஓடிவந்தபோது, பந்து அவரின் துடுப்பாட்டமட்டையில் பட்டு பவுண்டரிக்கு போனதை அதிஷ்டம் என்றுதானே சொல்ல வேண்டுமா? அந்த ஓர் ஓட்டம் இல்லை என்பதால் (இரு அணிகளும் ஆளுக்கு ஆள் அடித்த ஓட்டங்கள் 241. அந்த ஒரு சுப்பர் ஓவர் வந்தது. அந்த ஓவரிலும் இரு அணிகளும் ஆளுக்கு ஆள் 15 ஓட்டங்களே அடித்த காரணத்தால் மீண்டும் வெடித்தது அந்த ஓர் ஓட்டப் பிரச்சினை. இந்தத் தடவை இரு அணிகளும் அடித்த மொத்த பவுண்டரிகளின் எண்ணிக்கையே அவரவர் "தலைவிதியை" நிர்ணயித்தது. நியூசிலாந்து அடித்த பவுண்டரிகள்16. இங்கிலாந்து அணியோ 24!முதற் தடவையாக இந்த ஒரு நாள் வெற்றிக்கிண்ண ஆட்ட சரித்திரத்தில், சுப்பர் ஓவர் விஜயம் செய்திருக்கின்றது. பவுண்டரிகள் தீர்ப்பு வழங்கியிருக்கின்றன. ஒவ்வொரு அணியும் ஆறு பந்து வீச்சுகளை எதிர்கொண்டு, மொத்தமாக அடிக்கும் ஓட்டங்களே வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும்போது அதுவே சுப்பர் ஓவராகி விடுகின்றது. (காற்பந்தாட்டத்தில் பெனால்டி கிக்ஸ் ஆட்சி செலுத்துவது போல) 84 ஓட்டங்கள் அடித்து அணியைக் கரைசேர்த்து, பின்பு "சுப்பர் பாட்ஸ்மானாக" பட்லருடன் களத்தில் இறங்கி ஸ்டோக்ஸ் தன் பங்கிற்கு இரண்டு பவுண்டரிகள் அடித்து அணியின் பலவானாக ஜொலித்திருக்கிறார். ஆட்டநாயகனும் இவரேதான்! ஓர் இளம் பெண் அரைகுறை ஆடையில் களத்தில் ஓடித்திரிய முயன்ற போது, பாதுகாப்பு அதிகாரிகளால் மடக்கிப் பிடிக்கப்பட்டு, மைதானத்திற்கு வெளியே தூக்கிச் சென்ற கூத்தும் நடந்துள்ளது. இது பார்வையாளர்கள் ரசிக்கக் கிடைத்த ஒரு போனஸ் நிகழ்வு! நியூசிலாந்து அணி ஒரு விக்கெட் இழப்பிற்கு 45 ஓட்டங்கள் எடுத்த நிலையில், இந்த "ஓட்டம்" இடம் பெற்றுள்ளது. இங்கேயும் ஓர் (அரைகுறை) ஓட்டமா?

### வேதனையில் சாதனை

அநியாயமாக கிண்ணம் கைநழுவி விட்டதே என்று மனம் நொந்து போயிருந்த நியூசிலாந்து அணித் தலைவர் வில்லியம் சனுக்கு ஆறுதலாக, ஓர் அணித்தலைவராக ஓர் உலகக் கிண்ணத் தொடரில் அதிக ஓட்டங்கள் எடுத்த சாதனையை சுட்டிக் காட்டி உள்ளார்கள். இங்கிலாந்துக்கு எதிரான இறுதி ஆட்டத்தையும் சேர்த்து வில்லியம்சன் 2 சதம் உள்பட 578 ஓட்டங்கள் குவித்து இருக்கிறார். இதற்கு முன்பு 2007-ம் ஆண்டு உலக கோப்பையில் இலங்கையின் அணித் தலைவராக இருந்த மஹேலா ஜெயவர்த்தன 548 ஓட்டங்கள் எடுத்து முதலிடத்தில் இருந்துள்ளார். இந்த உலக கோப்பையில் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சர் மொத்தம் 20 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இங்கிலாந்து அணிக்காக ஒரு உலக கோப்பையில் அதிக விக்கெட் வீழ்த்தியவர் என்ற சிறப்பை இவர் பெற்றார். இதுகால வரையில் ஆர்ச்சர் விளையாடிய 14வது ஒரு நாள் ஆட்டம் இது! இதற்கு முன்பு 1992-ம் ஆண்டு உலக கோப்பையில் இங்கிலாந்தின் முன்னாள் அதிரடி "ஆல்ரவுண்டர்" இயான் போத்தம் 16 விக்கெட்டுகள் எடுத்ததே அதிகபட்சமாக இருந்து வந்தது.

### மதுரைக்கு வந்த சோதனை

நான்கு மாதங்களுக்கு முன்பு IrPrP அமைப்பின் நடுவர்களில் ஒருவரான குமார் தர்மசேனாவுக்கு (முன்னாள் இலங்கை அணியின் சிறந்த சுழல் பந்துவீச்சாளர்) அதி சிறந்த நடுவர் என்ற விருதை அளித்து கௌரவித்திருந்தார்கள். இதன் காரணமாக இவரையே இறுதி மோதலின் நடுவராக அதிகாரிகள் தெரிவு செய்திருந்தார்கள். ஆனால் மதுரைக்கு வந்த சோதனை போல, பட்லர் விக்கெட் விவகாரம் இவருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தி



இருந்தது. அவுஸ்திரேலியாவுடன் அரையிறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து விளையாடிக் கொண்டிருந்தபோது, தவறுதலாக அவரை அவுட்டாக்கியதற்கு இவர்தான் காரணம். இதற்காக வாதாடப்போய், பட்லருக்கு கிடைக்க வேண்டிய ஊதியத்தில் 30 வீதம் தண்டப் பணமாகி விட்டது. இந்த விரும்பத்தகாத நிகழ்வின் பின்னரும், தர்மசேன நடுவராகப் பணியாற்றியது ஏன் தெரியுமா? திட்டமிட்ட நிகழ்வுகளை இனி மாற்றியமைக்க முடியாது என்ற காரணந்தான். இந்த மோதலிலும் ஐந்து ஓட்டங்கள் ஆறு என்று அறிவிக்கப்பட்டது சர்ச்சையில் இருக்கின்றது. இந்த முடிவை நடுவர்கள் கலந்து எடுத்திருந்தாலும், இதிலும் தர்மசேனா சம்பந்தப்பட்டுள்ளார்.

### டென்னிஸ்
### வயது 37 வற்றாத புஜபலம்..

உலகப் பிரபல்யமான இங்கிலாந்தின் விம்பிள்டன் டென்னிஸ் தொடரும் முடிவுக்கு வந்திருக்கின்றது. 4 மணி 57 நிமிடங்கள்-சுமாராக 5 மணி நேர போராட்ட முடிவில் சேர்பிய நட்சத்திர வீரர் சொக்கோவிச் 7-6 (7-5) 1-6 7-6



(7-4) 4-6 13-12 (7-3). என்ற கணக்கில் விம்பிள்டன் கிண்ணத்தை தனதாக்கி இருக்கிறார். தனது 37வது வயதில் இந்த மோதலை சுவிஸ் நட்சத்திர வீரர் பெடரர் வென்றிருந்தால், 37 வயதிலும் ஒரு கிராண்ட் ஸ்லாம் வெற்றியைத் தேடிக்கொண்ட அதிகூடிய வயதாளி என்ற சாதனை நிறுவப்பட்டு இருக்கும். இறுதி மோதலுக்கு வந்த மூன்றாவது வயதாளி இவராவார். இதுவரையில் 8 தடவைகள் இவர் விம்பிள்டன் சாம்பியனாக பிரகாசித்துள்ளார். இன்றைய நிலையில் பெடரர் 20 கிரான்ட் ஸ்லாம் வெற்றிகளையும், நடால் (ஸ்பெயின்) 18 வெற்றிகளையும், சொக்கோவிச் (சேர்பியா) 16 வெற்றிகளையும் பெற்றுள்ளார்கள் பெண்களுக்கான மோதலில் றோமேனிய வீராங்கனை ஹலெப், அமெரிக்க வீராங்களை செரீனாவை வென்று சாம்பியனாகி இருக்கிறார். பதின்ம வயதுக் காரியை தோற்கடித்து இந்தச் சுற்றுப் போட்டியிலிருந்து வெளியேற்றியது இவர்தான் என்பது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். ஏற்கனவே ஏழு தடவைகள் விம்பிள்டனில் வென்றுள்ள 37வயதான செரீனா. இந்தத் தடவை வென்றிருந்தால், அவுஸ்திரேலியரான மார்கிரெட் கோர்ட்ஸ் என்பவரின் "8 வெற்றிகள்" சாதனையை சமன் செய்திருப்பார். பெடரரோ அல்லது செரீனாவோ 37 வயதிலும் இப்படியொரு புஜபலத்தோடு விளையாடுவது ஆச்சரியத்திலும் ஆச்சரியமே! விம்பிள்டன் சரித்திரத்தில் 133வது தடவையாக இடம்பெற்றுள்ள இந்த வருடத் தொடரின் ஒற்றையர் ஆட்ட வெற்றியாளருக்கு சுளையாக 2.35மி. பவுண்ட்ஸ் (ஒரு பவுண்ட்ஸ் 220ரூபா) கிடைக்கின்றது. இதில் ஆண் பெண் பேதமில்லை. இரு சாம்பியன்களுக்கும் சமமான தொகைதான்! ஆணுக்கு நிகர் பெண் இங்கே பாரீர்!

### தடகளம்
### தங்கத் திருமகன்

Mo Farah பிறப்பால் சோமாலி நாட்டவரா இருந்தாலும், இன்று அவர் பிரித்தானிய பிரஜை. நீண்ட தூர ஓட்டங்களை ஓடி வெல்வதில் கில்லாடி. . இவர் தன் கால்களை 7 மில்லியன பவுண்ட்ஸ் தொகைக்கு காப்புறுதி செய்துள்ளார் என்பது பிந்திய செய்தி. 2020இல் அதாவது அடுத்த ஆண்டு ரோக்கியோவில் இடம்பெறும் ஒலிம்பிக்



போட்டியில் இன்னொரு தங்கப் பதக்கத்தை வெல்வதே தன் குறிக்கோள் என்கிறார் இந்தத் தங்க மகன். பல நட்சத்திர காற்பந்தாட்ட விரர்களுடன் இவரும் இணைந்து ஒரு காற்பந்தாட்ட மோதலில் பங்குபற்றப் போகிறார். இந்தக் "காட்சி மோதலில்" சேகரிக்கப்படும் பணம், சிறுவர்களுக்கு உதவும் ஐ.நா.சபையின் பிரிவான யூனிசெஃபுக்கே வழங்குவது என்று முடிவாகி இருக்கின்றது.இந்த மோதலில் தன் கால்களுக்கு காயம் ஏற்படலாம் என்ற அச்சத்திலேயே மோ தன் கால்களை காப்புறுதி செய்ய முனைந்துள்ளார். இவரைது கால்களை காப்புறுதி செய்ய ஆரம்பத்தில் அதிகாரிகள் பின்வாங்கினாலும், ஓட்டக்காரர் நல்ல நோக்குடனான நிகழ்வொன்றில் விளையாடுவதைக் கருத்தில் கொண்டு, கால்களைக் காப்புறுதி செய்ய சம்மதித்துள்ளார்கள். 36வயதான இந்த நீண்ட தூர ஓட்டக்காரர் 2012, 2016ஆம் ஆண்டுகளில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் 5000 மீற்றர், 10,000 மீற்றர் நீண்ட தூர ஓட்டப் பந்தயங்களில் தங்கப் பதக்கங்கள் பெற்றிருந்தார். •



# அங்கதன் பதில்கள்

■ **சிங்களவரையா? முஸ்லிம்களையா தழிழர்கள் நம்ப வேண்டும்?**

● முதலில் தமிழர் தம்மைத் தாமே நம்பவேண்டியது தான் இன்றைய காலத்தின் தேவை.

அன்பழகன், அரியாலை.

■ **காணாமல் போனோரின் உறவுகள் தொடர்ந்து நடத்தும் போராட்டங்களை நமது தலைவர்கள் பெரியளவில் கண்டு கொள்வதாகத் தெரியவில்லையே ஏன்?**

● அடுத்த தேர்தலில் அவர்களை மக்கள் கண்டு கொள்ளப் போவதில்லை... அதன்பின் அவர்களும் காணாமல் போன அரசியல் வாதியாகிவிடுவார்கள்.

அபிதாப், அனைக்கோட்டை.

■ **தேசாபிமானம் – மனிதாபிமானம் இரண்டில் எது முக்கியம் என்று எண்ணுகிறீர்கள்?**

● மனிதாபிமானமற்றவன் தேசாபிமானியாக இருக்கமுடியாது!

மன்ஸூர், திருகோணமலை.

■ **சகல கட்சிகளையும் ஒன்றாக்கி ஒரு புதுக்கட்சியை உருவாக்கமுடிந்தால் நன்றாக இருக்குமல்லவா?**

● சகல மதங்களையும் இணைத்து ஒருபொது மதத்தை உருவாக்க முடிந்தால் அதுவும் சாத்தியமாகலாம்.

காவியா, பண்ணாகம்.

■ **அரசியல் வாதிகள் முன் கடவுள் தோன்றினால் என்ன வரம் கேட்பார்கள்?**

● தங்களின் அரசியல் நிலவரம் ஸ்திரமாக இருக்க நாட்டில் கலவரம் இருக்க வேண்டும் என்று கேட்பார்கள்.

கலிஸ்ரன், வவுனியா.

■ **லட்சக்கணக்கில் செலவழித்து கோவில் திருவிழாக்களை பெருமெடுப்பில் செய்கிறார்களே இது பக்தி வெளிப்பாடா?**

● இல்லைத்தம்பி... இது உபயகாரரின் செல வழிக்கும் சக்தியின் வெளிப்பாடு மட்டுமே!

சுந்தரம், வேலணை.

■ **ஆன்மீகவாதி... அரசியல்வாதி... இருவரையும் ஒப்பிட்டால்?**

● இரு தரப்பினருமே வாத நோயாளிகள்தான் முன்னவர் மதவாதத்தாலும் அடுத்தவர் இனவாதம், மொழிவாதம் மற்றும் வகுப்பு வாதத்தாலும் பீடிக்கப்பட்டவர்கள். இருதரப்பிற்கும் அடிப்படை வாதம்தான்... அடிப்படைவாதந்தான்.

அக்ஸனா, மாங்குளம்.

■ **தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசைக் காப்பாற்றிவிட்டது பற்றி?**

● இந்த அரசு தமது மக்களை காப்பாற்றாது என்பது உறுதியாகத் தெரிந்தும், தமது பதவிகளையும் வசதிகளையும் காப்பாற்றிக்கொள்ள எடுத்த முடிவே அது!

புஸ்பா, புலோலி.

■ **நாட்டில் நமது பண்பாடு கலாசாரமெல்லாம் சீரழிந்து வருவதன் காரணம் என்னவாக இருக்கும்?**

● பண்பாட்டைத் தன்பாட்டில் இயங்க விட்டால் கலாசாரம் காரமற்றதாகிவிட்டது. அவ்வளவுதான்.

லோஷன், யாழ்ப்பாணம்.

■ **வீதி விபத்தால் ஏற்படும் மரணங்களை குறைக்கவே முடியாதா?**

● விவேகமற்ற வேகம் வீதிகளில் வீதி முடிவை நிர்ணயித்து விடுகின்றதே!.

நஸீர், கல்முனை.

■ **திருமணத்திற்கு முன்னும் – பின்னும் என்ன வித்தியாசம் வாழ்வில் ஏற்படுகின்றது?**

● எதுவுமேயில்லை. திருமணத்திற்கு முன்பும் சரி பின்பும் சரி திருவாளர்கள் திருமதிகளின் பின்னால் தான் திரிகிறார்கள்.

றோய், யாழ்ப்பாணம்.

■ **திருக்கேதீஸ்வர வளைவு விவகாரம் ஒரு தொடர் பிரச்சினையாக நீள்வது எதனைச் சொல்லுகிறது?**

● சம்பந்தப்பட்ட தரப்பினர் எவரும் வளைந்து கொடுக்காது காலம் கடந்துவிட்டதே. வளைவு பிரச்சினை வளையாது நீடிக்கக் காரணம்.

கணேஸ், நல்லூர்.

■ **தமிழருக்கு நீதி கிடைக்க கடவுள் உதவ வேண்டும் என ஆளுநர் ராகவன் கூறிவிட்டாரே?**

● 'அரசால் எந்தவித நீதியும் கிடைக்கப்போவதில்லை... என்னை நம்பாதீர்கள்... நம்மால் எதுவும் முடியாது என்று வெளிப்படையாக தெரிவித்திருக்கிறார். உண்மை சொன்னதிற்கு நன்றி.

அனுஷா, குருநகர்.

■ **சமூகத்தில் ஒருவனின் அந்தஸ்து எதனால் நிச்சயிக்கப்படுகிறது, பணத்தாலா? அறிவாலா? பதவியாலா? பண்பிலா?**

● அறிவுள்ளவன் தான் வகிக்கும் பதவியில் பண்புடன் செயற்பட்டு வாழ்வானேயானால் அதன்மூலமே அந்தஸ்து நிர்ணயிக்கப்படுகின்றது... வெறும் பணத்தால் மட்டுமல்ல...!

நிமல், ஊரெழு.

■ **காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்பவர்கள் யார்?**

● வேறுயார் அரசியல்வாதிகள் தான் பதவியில் இருக்கும் போதே தங்களை வளர்த்துக் கொள்பவர்கள் அவர்கள் மட்டுமே!

கோபியா, திருகோணமலை.

■ **பணத்திமிரில் கண் மண் தெரியாமல் நடப்பவர்களைப் பற்றி சொல்கிறீர்களா?**

● அவர்கள் கண்ணிலும் மண்ணைத்தூவி விடக் கூடியவர்கள். அவருடனே இருக்கிறார்கள் என்பதை அறியாத அறிவிலிகள்.

செல்வா, தெல்லிப்பளை

■ **சமாதானம் விரும்பிகளை கோழை என்று முத்திரை குத்துகிறார்களே!**

● சண்டியர்களையெல்லாம் வீரர்கள் என்று முடி சூட்டலாமா?

நிக்ஸன், மட்டக்களப்பு.

■ **மொட்டை மழித்தல் தாடி வளர்த்தல், காவியணிதல் இவை எல்லாம் பக்தியின் அடையாளங்கள் தானே!**

● மழித்தலும் நீட்டலும் வேணண்டாம் உலகம் பழித்தது ஒழித்து விடின் என்ற திருக்குறள் என்ன சொல்கிறது என்று கவனியுங்கள்.

வின்ஷன், வவுனியா.

■ **ஒடுக்கப்படும் மக்களுக்காகப் போராடக் கூடியவர் இடது சாரியா, வலது சாரியா?**

● இருவரும் அல்ல... அவன் பாதசாரியாகவே இருப்பான்.

மலர், மஸ்கெலியா.

■ **நிறைவேறாத அபிலாசைகளுடன் மரணிப்பவர் தான் பேயாக அலைகிறார்கள் என்று சொல்லுகிறார்களே அது உண்மையா?**

● அப்படியானால் பெரும்பாலும் அரசியல் வாதிகள் தான் பேயாக அலைகிறார்கள் என்று சொல்கிறீர்களா?

கஜன், வட்டுக்கோட்டை.

■ **முகப் புத்தகத்தால் நன்மையா தீமையா? என்ன நினைக்கிறீர்கள்?**

● எந்த புத்தகத்தையும் படிக்காத – பார்க்காத பலர் முகப்புத்தகத்தை பார்க்கிறார்களே, படிக்கிறார்களே. ஆதனைவிட அதற்கு விளக்கமும் எழுதுகிறார்களே போதாதா?

ராஜன், பருத்தித்துறை.

■ **ஒரு புறம் சிறிதளவு நிலத்தை விடுவிக்கப்படுவதை பெரிதாகக் காட்டிக் கொண்டும் வேறு வகையில் தமிழரின் நிலம் பரவலாக ஆக்கிரமிக்கப் படுவதைத் தடுக்க முடியாதா?**

● ஆக்கிரமிப்புக்களும் அதிகாரமும், ஆணையும் வழங்கும் அரசை பாதுகாக்கும் அரசியல் தலைவர்கள் இருக்கும் வரை யார் என்ன செய்யமுடியும்.

கஸ்தூரி, திருகோணமலை.



**அங்கதனிடம் பதில்பெற வேண்டுவோர் உங்கள் கேள்விகளை சரியான பெயர் முகவரியுடன் தெளிவாக எழுதி newsdeepam19@gmail.com என்ற முகவரிக்கோ அல்லது இல.10, வில்வந்தெரு ஒழுங்கை கொழும்புத்துறை,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

**தூமான கேள்விகளை அனுப்புவோருக்கு 500 ரூபா பணப் பரிசில் வழங்கப்படும்.**

பெயர் :..........................................

முகவரி :........................................

:........................................

தொலைபேசி இல. ................................

# அவர்கள் சொன்னதும் ஐயா சொல்வதும்

● **'அரசியல் தீர்வு இன்னும் இரண்டே வருடத்தினுள்' – யாழ்ப்பாணத்தில் ரணில் தெரிவிப்பு**

■ என்ன செய்கிறது உந்த வெடிப்புழுகையெல்லாம் தலையாட்டி, கைதட்டி கேட்டு நம்ப காதிலை பூ வைச்சுக்கொண்டு சிலர் இருக்கும் வரை நீங்கள் எதைத்தான் சொல்லமாட்டீர்கள்... உங்கடை இரண்டு மூன்று மாதகால ஆட்சியை தக்கவைக்கவே படாது பாடுபடுகிற நீங்கள் இரண்டு வருடங்களில் பிரச்சினை தீர்க்கப்போறதாகச் சொல்வது உங்களுக்கே சிரிப்பாக இல்லையா?

● **கல்முனை வடக்கு விவகாரம், ஆய்வு செய்ய குழு நியமனம்... செய்தி**

■ 'சரி... அப்பாடா குழு அமைச்சர் பிறகென்ன? அடிக்கடி கூடி கலைவினம்... பிறகு கொஞ்சக்காலத்தாலை அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பினம், பிறகு அந்த அறிக்கையை ஆராய மற்றொரு குழுவை அமைப்பினம்... அதுவும் கொஞ்சக்காலம் நடக்கும், அதுக்கிடை ஆட்சி மாறினால் அதுவும் கிடப்பிலை கிடந்துவிடும்... பிறகென்ன... எப்படியோ காலம் கடத்தி பேக்காட்டி விடுவினம்... அரசியல்லை இதெல்லாம் சகஜம் தானே...! கொட்டாவி விடுத்தான் நமக்கு பழக்கமாச்சே!

● **வலி வடக்கில் மகாபோதி இராணுவ தளபதி திறந்து வைத்தார்... – செய்தி**

■ போதி மரத்தடி புத்த பிரானே தன்னை வைத்து நடத்தும் இந்த அரசியல் ஆன்மீகத்தை ஏற்றுக் கொள்ள மாட்டார் என்பது சம்பந்தப்பட்டவர்களுக்கே தெரியும். அரசமரத்தின் கீழ் புத்த பகவானுக்கு ஞானம் பிறந்தது. ஆனால் அரச மரத்தை வைத்தே அரசியல் நடத்தும் ஞானிகளாக ஆட்சியாளர் இருப்பது தான் வேதனைக்குரிய விடயம்.

● **எம்மிடம் அறைவாங்கு முன்னர் அந்த நாயை கட்டிப் பொடுங்கள் – ரஞ்சன் ராமநாயக்க குறித்து ஞானசாரதேரர் கருத்து.**


■ தேரர் பேசுற பேச்சை கேட்டா நாடே அதிருதல்லே... சிறை போய் வந்த பின்னர் தேரர் வீரராகி விட்டார் என்பதை அவரது பேச்சே வெளிக்காட்டுது. பொதுபலசேனா இப்பொ புதுபல சேனாவாகி வருகிறது போலல்லோ கிடக்குது.

● **எதிர்வரும் ஐந்து மாதங்களில் புதிய அரசாங்கம் ஒன்று உருவாக்கப்படும்... – ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு**

■ எந்த அரசு வந்தால் என்ன பௌத்த சிங்கள பேரினவாத அரசாகத்தானே அது இருக்கும்...! புதிய மொந்தையில் பழைய கள் என்ற கதைதான் தொடரும் பாருங்கோ.




4ஆம் ஆண்டில் கால்பதிக்கும் தீபம் வார மலரை
சிறப்புற வாழ்த்துகின்றோம்
இளமுருகன் வாணிபம்
ELAMURUGAN MOTORS
MEGA OIL MART
உங்கள் வாகனத்திற்கு தேவையான அனைத்து வகையான
ஒயில்களையும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள
இளமுருகன் வாணிபம்
கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி. T.P:0773676214


4ஆம் ஆண்டில் கால்பதிக்கும் தீபம் வார மலரை சிறப்புற வாழ்த்துகின்றோம்
ARRIVOLI
BOOK DEPOT
அறிவொளி புத்தகசாலை
பாடசாலை மாணவர்களுக்கான அனைத்துப்
புத்தகங்களையும் கிழமை பத்திரிகைகள் போன்றவற்றையும்
இங்கே பெற்றுக் கொள்ளலாம்.
பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
T.P: 021 2290957 - 0776900120


ஸ்ரீ பாண்டியன் சுவையூற்று
SRI PANDIAN SUVAIOOTTU
4ஆம் ஆண்டில் கால்பதிக்கும் தீபம் வார மலரை
சிறப்புற வாழ்த்துகின்றோம்
சிறி பாண்டியன்
சுவையூற்று
1 ஆம் வீதி கனகபுரம், கிளிநொச்சி.
T.P:- 021 228 4050


4ஆம் ஆண்டில் கால்பதிக்கும் தீபம் வார மலரை சிறப்புற வாழ்த்துகின்றோம்
Nivithra
Beauty Parlour & Training Academy
"Specialized in Makeup Dressing"
Bridal Makeup/ Reception Makeup / Convocation Make up/
Key Birthday Makeup/ Puberatery Ceremony Makeup
Bridal Makeup - Our Free Service
Gold Facial, Waxing Hand, Eyebrow Threading, Full Face Threading
You get married once in a life time. We prepare
you to be at your best for that special day
No:-207, Navalar Road,Jaffna. Tel- 0777712604


4ஆம் ஆண்டில் கால்பதிக்கும் தீபம் வார மலரை சிறப்புற வாழ்த்துகின்றோம்
குமரன்
ஸ்ருடியோ
HD வீடியோ
10நிமிடத்தில் புகைப்படத்தினை
பெற்றுக்கொள்ள முடியும்
இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைக்கான
புகைப்படம் எடுப்பதற்கு அரச அங்கிகாரம் பெற்பட்ட
படப்பிடிப்பு கலையகம்
கரீஷ்மா அல்பம்
சிந்தட்டிக் அல்பம்
அழைப்பிதழ்கள்
கப் பிறிண்ட்
கிறிஸ்ரல் பிறேம்
வாழ்த்து மடல் வடிவமைத்தல்
டிஜிட்டல் அல்பம்
அனைத்து நிகழ்வுகளுக்கான வெளிப்புற படப்பிடிப்பு
தொடர்புகளுக்கு: 0773755503
Fb: Kumaran varan kumaran
E-mail: Kumarandigital155@gmail.com
கூழாவடிச்சந்தி, உருத்திரபுரம்.


4ஆம் ஆண்டில் கால்பதிக்கும் தீபம் வார மலரை
சிறப்புற வாழ்த்துகின்றோம்
"முறையான பயிற்சியே உயிர் காக்கும்"
சீபன் பாஸ்கர்
லேணர்ஸ்
Reg : 1027
Driving School
SEEBAN BASKAR
LEARNERS
அரச அங்கீகாரம் பெற்ற
சாரதிப் பயிற்சி போதனாசிரியர்களைக்
கொண்ட பாடசாலை
கண்டி வீதி, கைதடிச்சந்தி
021 223 2050, 076 7136 304
மத்திய மகாவித்தியாலய வீதி, நெல்லியடி
021 226 0459 , 0760153375, 0770570459
E-mail : daseepan@gmail.com
FB:- seeban baskar













இந்தப் பத்திரிகை இல. 10, வில்வம் தெரு, கொழும்புத்துறை முகவரியிலுள்ள
நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தால் 21.07.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.